கல்கி








KALKI
20.3.1966

35
காசு




ஒன்று சேர்ப்பது

ஒரு கோப்பை புத்தம் புதிய, தெம்பூட்டும்

ப்ரூக் பாண்ட் காபி

எங்கும் ... எந்நேரமும் ... நண்பர் குழாம் ஒவ்வொன்றிலும், ப்ரூக் பாண்ட் காபி உல்லாசம் உண்டு பண்ணுகிறது. மக்களை ஒன்று சேர்க்கிறது. நாகரீக வாலிபர்கள் ஆணையிட்டுச் சொல்வார்கள். பேர் ப்ரூக்கோ இது இல்லாவிட்டால் முடியாது! ஏன்? புத்தம் புதிய, தெம்பூட்டும், கமகமவென்ற மணம் இருப்பதால்தான். எப்போதைக் காட்டிலும், இன்று ப்ரூக் பாண்ட் காபி தரத்தை நிர்ணயிக்கிறது!

BENSONS2/88C-17D TAN



கல்கி

பொருளடக்கம்




சிந்தனை சந்தேகத்தை வளர்க்கிறது. சந்தேகம் ஆராய்ச்சியை வளர்க்கிறது. ஆராய்ச்சி உண்மையை வளர்க்கிறது. உண்மையோ குருட்டு நம்பிக்கைகளையெல்லாம் குழி தோண்டிப் புதைத்து விடுகிறது.

- இங்கர்சால்

விசுவாவசு பங்குனி 7 ● மார்ச் 20

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



நாங்கள் சுயகௌரவம் நிறைந்த மக்கள்; எனவே கப்பரையைத் தூக்கிக் கொண்டு போவதில்லை.
அதனால் பரவாயில்லை; நாங்களே கப்பரையும் வழங்குகிறோம்
அமெரிக்க உதவி
வழக்கறிஞர்கள்
முன்னாள் நீதிபதிகள்
மரண சர்டிபிகேட்
இல்லை, இல்லை, அவன் உயிரோடு தானிருக்கிறான்
சந்தானம்
கிருபளானி
பத்திரிகை ஆசிரியர்கள்
ராஜாஜி
நந்தா
நெருக்கடி நிலைமை
PK

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

மலர் 25 ● இதழ் 34



அலங்கோல சோஷலிஸம்

ராஜாஜி

சோஷலிஸம் வெற்றிகரமாகச் செயல்படும் நாடுகளுக்குச் சிறந்த உதாரணமாக விளங்குவது ஸ்வீடன். ஆனால் பரிபூரண சோஷலிஸ நாடாகக் கருதப்படும் ஸ்வீடனைப் போல் தனியார் தொழிலுக்குப் பெரும் இடம் அளித்துள்ள நாடுகள் உலகில் வெகு சிலவே உள்ளன. தேசியப் பொருளாதாரத்தில் உற்பத்தி முனை வேறு, விநியோக முனை வேறு என்பதை அந்நாடு உணர்ந்திருக்கிறது. அந்நாட்டில் மொத்த வியாபாரத்தில் தொண்ணூற்று ஏழரை சத விகிதம் தனியாரிடமும், இரண்டு சதம் கூட்டுறவுகளிடமும், அரை சதம் மட்டுமே சர்க்காரிடமும் உள்ளது. சில்லறை வியாபாரத்தில் எண்பத்தெட்டரை சதம் தனியாரிடமும், பத்தரை சதம் கூட்டுறவுகளிடமும், ஒரே ஒரு சதம் மட்டுமே சர்க்காரிடமும் உள்ளது. பாங்குகளில் தொண்ணூற்றிரண்டரைச் சதமும், இன்ஷூரன்ஸில் தொண்ணூற்று மூன்று சதமும் தனியாரிடம் தான் இருக்கின்றன. ரகவாரியாக ஒவ்வொரு தொழிலாகப் பார்த்தாலும் இப்படியே தனியாருக்கு மிகவும் முக்கியமான இடம் அளிக்கப்பட்டிருக்கிறது. உணவு உற்பத்தியில் எண்பத்து மூன்றரை சதம் தனியாரிடமும் எட்டரைச் சதம் கூட்டுறவுகளிடமும் உள்ளது. உடையில் தொண்ணூற்றெட்டு சதம் தனியாரிடமும் ஒரு சதம் கூட்டுறவுகளிடமும் உள்ளது. ஸ்வீடனில் சோஷலிஸம், உற்பத்தித் துறையில் தனி மனிதர்களை நம்பியிருப்பது மட்டுமல்ல; அவர்கள் உற்பத்தியைப் பெருக்குவதற்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்து வருகிறது. உற்பத்தி பெருக வேண்டுமாயின், அதில் சுய ஈடுபாட்டுடன் பங்கு கொள்பவர்களின் நலன்களைக் காப்பது தவிர்க்க முடியாத தேவை என்பதை ஸ்வீடன் சர்க்காரின் கொள்கை நிரூபிக்கின்றது.

மற்றொரு சோஷலிஸ நாடான யுகோஸ்லாவியாவிலும் இதே முறை பின்பற்றப்படுகிறது. 'தனியார் தொழில் சுதந்திரம் பெற்றிருப்பதால் சோஷலிஸ நோக்கத்துக்கு ஊறு எதுவும் இல்லை' என்று யுகோஸ்லாவியத் தூதர் டாக்டர் யுவாலிக் சமீபத்தில் வியக்தமாகவே கூறியிருக்கிறார்.

மக்களை நம்புவதற்கு மறுக்கும் அரசாங்கம் தனது அதிகார வர்க்கத்தையே நம்பித் தொழிலில் ஈடுபடும்போது தோல்வியும் விரயமும்தான் ஏற்படுகின்றன. அதிகார வர்க்கத்தைக் கொண்டு நடத்தும் சர்க்கார் தொழில்களைப் பொதுத்துறை என்று சொல்வதே தவறு. பொதுத்துறை என்பதால் அது பொது மக்கள் பங்குபெறும் துறையாகி விடாது. அதை உண்மையில் சர்க்கார் துறை என்றுதான் சொல்ல வேண்டும். தனி முதலாளிகளுக்குப் பதில் அதிகார வர்க்கம் உற்பத்தியில் ஈடுபடுவதில் பயனில்லை என்பதாலேயே சுதந்திரக் கட்சி இதை எதிர்க்கிறது. உற்பத்தி எப்படியாயினும் அதன் லாப நஷ்டங்களால் பாதிக்கப்படாமல் மாதச் சம்பளம் பெறும் அதிகார வர்க்கத்தின் மேல் பார்வையில் உற்பத்தி உயர இடமில்லை என்பதால் இதைச் சுதந்திரக் கட்சி ஆட்சேபிக்கிறது. இந்த அதிகார வர்க்கத்தை நடத்தி வைப்பவர்களும் கட்டுப்படுத்துபவர்களும், உபத்திரவப்படுத்துபவர்களும் யாரெனில் பட்சபாதங்களுள்ள அரசியல்வாதிகள்.

மக்கள் எல்லோருக்கும் பண்டங்கள் கிடைக்கச் செய்யும் விநியோக முனையில் மாத்திரமே ஸ்வீடன் சர்க்காரின் மகத்தான க்ஷேம அபிவிருத்தித் திட்டங்கள் வகுக்கப்படுகின்றன; உற்பத்தி முனை தனியாரின் சுதந்திரத்துக்கே விடப்பட்டுள்ளது. ஸ்வீடனாயினும் சரி, அமெரிக்காவாயினும் சரி, மக்கள் எவ்வளவுக்குச் சுதந்திரமாகத் தொழில் புரிய அனுமதிக்கப்படுகிறார்களோ, அந்த அளவுக்கே சுபிட்சம் ஏற்பட முடியும். இதற்கு இந்தியா விலக்கல்ல.

சர்க்காரின் சர்வாதீனக் கொள்கை விரயத்துக்கும், துயரத்துக்குமே இட

மாகும். சர்க்கார் நடத்தும் கூட்டுப் பண்ணைபற்றிக் காலஞ்சென்ற சர்ச்சில் சொல்லிற கதையைப் பார்ப்போம்:

''இந்த (இரண்டாவது உலக) யுத்தத்தில் நீங்கள் வகித்த பளு, கூட்டுப் பண்ணைகளை நடத்துவதில் நீங்கள் தாங்கிய சுமையளவு இருந்ததா?'' என்று நான் (ஸ்டாலினிடம்) கேட்டேன்.

''இல்லை, இல்லை. கூட்டுப் பண்ணைக் கொள்கையை அமுல் செய்வது இதைவிடப் பயங்கரப் போராட்டமாயிருந்தது'' என்றார் அவர்.

''அது மோசமான கொள்கை என்று நீங்கள் கண்டு கொண்டிருப்பீர்களென நினைத்தேன். ஏனெனில் நீங்கள் சில ஆயிரம் செல்வந்தர்களுடன், பெருநிலச் சுவான்தார்கள் குறித்து மட்டில் நடவடிக்கை எடுக்காமல், லட்சக்கணக்கான மக்களைக் குறித்தல்லவா நடவடிக்கை எடுத்தீர்கள்?'' என்றேன்.

அவர் தம் கையை உயரத் தூக்கி, ''லட்சக் கணக்கா? மொத்தம் ஒரு கோடி மக்களைச் சமாளிக்க வேண்டியிருந்தது. மகா பயங்கரம். வருஷக் கணக்கில் அல்லவா போராட்டம் நடந்தது?'' என்றார்.

ஹிட்லருடன் நடத்திய மகா யுத்தத்தை விட, தமது உள்நாட்டினரான ருஷிய உழவர்களுடன் நடத்திய போர் அதிகக் கசப்பாகவும் பயங்கரமாகவும் இருந்ததென்று ஸ்டாலினே வெளிப்பட ஒப்புக் கொண்டிருக்கிறார். கூட்டுப் பண்ணை முறை மிக உயர்ந்த விவசாய அமைப்பு என்று ஸ்டாலின் நினைத்தார். அவரது அபிப்பிராயத்தையேதான் நாகபுரிக் காங்கிரஸாரும் தீர்மானமாக நிறைவேற்றினர். பேரை மட்டும் மாற்றினார்கள். ஆனால் கருத்து ஸ்டாலினுடையதுதான். இதன் விளைவாகத்தான் சுதந்திரக் கட்சி பிறந்தது.

இன்னமும் காங்கிரஸ் தலைவர்கள் ஸ்டாலினின் தவறான நம்பிக்கையைக் கைவிட்டதாகத் தோன்றவில்லை. உச்சவரம்பு கட்டிப் பெரிய நிலவுடைமைகளைச் சிதைத்த பின், தமது தேவைக்கு உபரியாக உற்பத்தி செய்து நகரப்புற மார்க்கெட்டுகளுக்குத் தானியம் அனுப்பி வைக்கக் கூடிய நிலையில் உள்ள நிலச் சொந்தக்காரர்கள் இல்லாமற் போய்விட்டனர். கூட்டுப் பண்ணை நடத்துவது சாத்தியமல்ல என்று உணர்ந்த போதிலும் நம் நாட்டுக் குட்டி ஸ்டாலின்கள் தனியார் உடைமையை மதிக்கக் கூடாது என்பதால் கம்பெனிகளைக் கொண்டு விவசாயத்தை நிர்வகிப்பது பற்றி யோசிக்கிறார்கள். சட்டப்படி நிலச் சொத்துரிமை உடையவர்களை விரட்டியடித்து விட்டு, விவசாயம் தெரியாதவர்களும் கிராம வாழ்க்கையின் சிலங்களை அறியாதவர்களுமான புதிய வர்க்கத்தைத் தோற்றுவிக்க நினைக்கிறார்கள்.

ஐம்பதாண்டு சோஷலிஸ ஆட்சிக்குப் பின், இன்று ருஷியா பஞ்சத்தின் பிடியிலிருந்து காக்கப்படுவதற்குக் காரணம் அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் உள்ள தனி நிலச்சுவான்தார்களிடமிருந்து இறக்குமதி செய்து கொள்வதுதான். சீனாவில் கூட்டுப் பண்ணையை அமுல் செய்ததால் ஏற்பட்ட பஞ்சக் கஷ்டமும் பட்டினிச் சாவும் ருஷிய உதாரணத்துக்கு இம்மியும் குறைவல்ல. கம்யூனிஸ அதிகார வர்க்க முறையிலும் லாப நோக்கம் ஒட்டுப் போடப்படுகிறது. தனியார் தொழிலுக்கு இடம் தராமலே, சர்க்கார் தொழிலில் லாப நோக்கத்தை இணைப்பது அசல் குதிரைக்குப் பதில் கோவேறு கழுதையைக் கொள்வது போன்றதே. 'இது நம் சொத்து' என்ற ஈடுபாட்டு உணர்ச்சியின் மீதுதான் சுதந்திரப் பொருளாதாரத்தின் ஜீவ அம்சம் அமைந்துள்ளது. இறுதியில் சர்க்காரிடமே சொத்துரிமையும் அதிகாரமும் அமைந்திருக்க, இடையில் அநாமதேய சிப்பந்திகளைக் கொண்டு உற்பத்தி செய்யும் தொழில் முறையில் சொத்துரிமைக்கு ஈடான ஊக்க சக்தி எதுவும் இல்லை.

பிரத்தியட்ச அநுபவமின்றி வெறும் சித்தாந்த ரீதியில், போதுமான விஷய ஞானமின்றி மத்தியத் திட்டமிடுவது பயங்கரமான தோல்வியே தரும் என்று பிரபல பொருளாதார நிபுணர்கள் திடமாகக் கருதுகிறார்கள். திட்டக் கமிஷனையும், அதனுடைய பிரம்மாண்டமான ஸ்தாபன அமைப்பையும் கலைத்தாக வேண்டும். சர்க்கார் சம்பந்தமற்ற விஷயஞானமுள்ள தொழிலதிபர்கள்—வர்த்தகர்கள் — விவசாயிகள் ஆகியோர் கொண்ட தேசிய உற்பத்தி சபை ஒன்று அதனிடத்தில் அமைக்கப்பட வேண்டும். பல்வேறு துறைகளிலும் அவையவற்றுக்குத் தேவையான குறைந்தபட்சக் கால அளவில் இன்ன அளவுக்கு உற்பத்தி செய்ய வேண்டும் என்று இவர்கள் தேசியத் திட்டங்கள் வகுத்து, தமது சுதந்திரத் தீர்மானத்தின் மீது அவற்றை நிறைவேற்ற வேண்டும். இத் திட்டங்கள் திறமையுடன் நிறைவேற என்னென்ன சட்டங்கள் தேவையோ அவற்றை அவ்வப்போது வகுப்பதற்குச் சர்க்காரின் துணை கொள்ள வேண்டும். அரசாங்கச் சார்பற்ற இந்தத் தேசிய உற்பத்தி சபை கையாள முடியாத துறைகளை மத்திய மந்திரி சபையே கையாள வேண்டும்; திட்டக் கமிஷன் தேவையில்லை.

சொந்தக்காரர் என்ற பொறுப்பை ஏற்க ஒருவரும் இல்லாத சோஷலிஸத்தின் வசம் உற்பத்தியை ஒப்புவிப்பதற்கில்லை என்பதை ஸ்விடனும், யுகோஸ்லாவியாவும் நமக்குத் தெளிவாக உணர்த்துகின்றன. மனித இயல்பின் நியதிகளை மதியாமல், சிறுபிள்ளைத்தனமாக மற்ற நாடுகளைக் 'காப்பி' அடிக்கும் நம்முடைய ஆள்கிற கட்சியின் அலங்கோல சோஷலிஸம் விரயமும் விசனமுமே அளித்துள்ளது. தேச நலனைவிடத் தங்கள் அதிகாரத்தையே குறியாகக் கொண்டுள்ள காங்கிரஸ் ஜமீன்தார்களினால் மயக்கப்பட்டுள்ள மக்களின் பிரமையை யூகோஸ்லாவிய தூதரின் வார்த்தைகள் தெளிவு செய்யும் என நம்புவோமாக.

★

பொறுப்புள்ள சட்டத் துறைப் பிரமுகர்களும், மற்றும் பல முக்கியஸ்தர்களும் அழுத்தமாகக் கேட்டுக் கொண்ட போதிலும் காங்கிரஸ் கட்சி நெருக்கடி நிலைமையை ரத்து செய்யவில்லையெனில், அக்கட்சிக்கு அரசியல் சாஸனத்தில் நம்பிக்கை யில்லை என்றே கொள்ள வேண்டும். அரசியல் சாஸனத்தை மனம் போனபடி மாற்றியது போதாதென்று, இப்போது அது அளிக்கும் ஜீவாதார உரிமைகளையே மறுத்துப் பாதுகாப்புச் சட்டம் தரும் அதிகாரங்களைத் தொடர்ந்து பிரயோகித்து வருகிறவர்களைவிட, அரசியல் சாஸனத்தின் ஒரு பகுதி ரத்தானாலும் தேச ஐக்கியத்துக்கு நல்லது என்று கருதி அப்பகுதியை மட்டும் எரிப்பவர்களுக்கு சாஸனத்திடம் அதிக நம்பிக்கை இருக்கிறது என்று கூறலாம். சீனர்கள் இந்தியாவில் செய்த ஆக்கிரமிப்பு ரத்தாகி விட்டது என்பதாலோ அல்லது அந்த ஆக்கிரமிப்பை மாற்ற முடியாது என்று ஒப்புக்கொண்டு விட்டதாலோ மூன்றாண்டுகளுக்கு முன்பே போர் நின்றுவிட்டது. எனினும் உள்நாட்டு விஷயங்களில் பிரயோகிப்பதற்காகப் பாதுகாப்புச் சட்டத்தையே நிரந்தரச் சட்டமாக எண்ணத் தொடங்கிவிட்டது அரசாங்கம். அதாவது ஆட்சியாளர்கள் அரசியல் சாஸனத்தில் நம்பிக்கை இழந்து, அதற்குப் பதிலாகப் பாதுகாப்புச் சட்டத்தைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்.

தனியார் சேமிப்புகளை விருத்தி செய்வதற்கு வழி கண்டாலே நாட்டின் எதிர்காலம் முன்னேற்றமடையும் என்று ஸ்ரீ அசோக மேத்தா பம்பாயில் வலியுறுத்திப் பேசியுள்ளார். இது டில்லியிலுள்ள நிதி மந்திரியின் காதில் விழுந்ததா? காதில் விழுந்தாலும் அவர் என்ன செய்ய முடியும்? சேமிப்பு விருத்தி அடையாமலிருப்பதற்கு என்னவெல்லாம் செய்யக் கூடுமோ அவ்வளவையும் இவ்வாண்டு பட்ஜெட்டில் அவர் செய்திருக்கிறார். இந்நிலையில் பெரிய திட்டங்களின் முக்கிய காவலராகிய ஸ்ரீ அசோக மேத்தா சேமிப்பை விருத்தி செய்வது பற்றியும் பேசிக் காங்கிரஸின் விதூஷகராகி யிருக்கிறார்!

வெறும் சித்தாந்த அடிப்படையில் அவர் நினைத்துப் பேசுவதெல்லாம் விஷச் சுருளான எண்ணப் படலங்களிலேயே முடியும். இயற்கையில் ஒருவருக்கு அமைந்த சிந்தனைப் போக்குக்கு மாறான பொறுப்புக்கள் அவர்மீது சுமத்தப்படும்போது இப்படித்தான் நேரும்.

★


புள்ளி விவரங்களையும் பேனாவையும் காகிதத்தையும் வைத்துக் கொண்டு, வறட்டுக் கொள்கையின் மீது தேசப் பொருளாதாரத்தை எழுப்ப எண்ணும் மத்திய திட்ட நிபுணர்கள் இப்போது விவசாயத்திலும் ஆபீஸ்களுக்குரிய நிருவாக முறையை ஏற்படுத்திவிட்டால் விளைச்சல் பெருகும் என்று முடிவு கண்டிருக்கிறார்கள். விவசாயத்தை ஆபீஸ் பாணியில் நடத்த நினைப்பது, மனிதர்களைப் போல் வண்டி மாடுகளையும் இரண்டே கால்களால் நடக்கச் செய்து வண்டி இழுக்க வைக்க நினைப்பதற்கு ஒப்பாகும். உழவர்களை அடிமைகளாக்கி, விவசாயக் கம்பெனிப் பாகஸ்தர்களின் கீழ் வேலை செய்ய வைக்கும் யோசனையே இது. உச்ச வரம்பால் அழிக்கப்பட்ட (அல்லது விரட்டியடிக்கப்பட்ட) நிலச் சொந்தக்காரர்களின் இடத்தைக் கம்பெனி அமைப்பு ஒரு நாளும் பெற முடியாது.

★

இம்மாதம் எட்டாந் தேதி ஸ்ரீ கோவிந்த வல்லப பந்த் அவர்களின் சிலையைத் திறந்து வைத்த ராஷ்டிரபதி அவர்கள், ''நாம் உணவுக்கு நிரந்தரமாக அந்நிய நாடுகளைச் சார்ந்திருப்பது நம் நாட்டின் பொருளாதாரம் தவறாக நிர்வகிக்கப்பட்டதற்கு அடையாளமாகும்'' என்று கூறியிருக்கிறார். அவரது கண்டனம் மிகவும் சரியே. எனினும் இதனால் நிகழ்காலச் சூழ்நிலையில் அந்நிய உணவு உதவியை நிறுத்திவிட வேண்டும் என்று பொருளாகிவிடாது.

★

ஆட்சி மொழிப் பிரச்னையில் நான் நெருப்புடன் விளையாடுவதாக 'டைம்ஸ் ஆப் இந்தியா' உபதேச உபந்நியாசம் செய்திருக்கிறது. நெருப்புடன் விளையாடுவது நானல்ல. ஒரு பிரதேச மொழியை ஆங்கிலத்தின் இடத்தில் அமர்த்த முயல்பவர்கள்தான் நெருப்புடன் விளையாடுகிறார்கள். இம்முயற்சிக்குத் தென்னாட்டில் உள்ள எதிர்ப்பின் வலிமையை வடக்கிலுள்ள எந்த அரசியல்வாதியாலும் பத்திரிகையாளராலும் உள்ளபடி காணமுடியவில்லை. ஒரு பிரதேச மொழியை ஆட்சி பீடத்தில் அமர்த்துவதற்குச் சர்க்காரைக் கருவியாக்கிக் கொள்வது மடமை.



காந்திஜி ஹிந்தியை ஆட்சி மொழியாக்குவது பற்றிச் சொன்னதை மீண்டும் மீண்டும் மேற்கோள் காட்டுகிறார்கள். காந்திஜி இவ்விஷயத்தில் கூறியது சரியென எனக்குத் தோன்றவில்லை. எப்படியாயினும் இப்போது சர்க்கார் கடைப்பிடிக்கும் வழியை அவர் உயிரோடிருந்தால் ஆமோதிக்க மாட்டார். காந்திஜியை இவ்விஷயத்தில் ஆதரவாகக் காட்டுபவர்கள் பிலாய் — ரூர்கேலா இரும்புத் திட்டம் குறித்தும், கோடிக் கணக்கில் கடன் வாங்குவது குறித்தும், இன்னும் எண்ணற்ற அநேக விஷயங்கள் குறித்தும் அவரை மேற்கோள் காட்டுவார்களா?

ஒரு நல்ல முடிவு

அஸ்ஸாம் எல்லையிலும், மேற்கு வங்காளத்திலும் ராணுவ நடவடிக்கைகள் எடுக்கப்படும் கொந்தளிப்பு நிலையில் அரசாங்கத்தின் பழைய — புதிய தவறுகள் பல வெளிச்சமாகி வருகின்றன. அஸ்ஸாமிலும் வங்காளத்திலும் நடக்கும் அமளியைச் சாக்குக் காட்டி நெருக்கடி நிலைமையை நீடிக்கவும் ஆளும் கட்சிக்காரர்கள் முயலுகிறார்கள். குறிப்பிட்ட பிரதேசங்களில் மட்டும் கூட்டத் தடையுத்தரவு, ஊரடங்குச் சட்டம் ஆகியவற்றை அமுல் நடத்த இடம் இருக்கும்போது நாட்டின் ஒருசில பகுதிகளில் கலவரம் நடப்பதைக் காரணம் காட்டித் தேசம் முழுவதிலும் நெருக்கடி நிலையை நீடிக்கப் பார்ப்பது சற்றும் ஒப்புக்கொள்ளக் கூடியதல்ல.

இச்சந்தர்ப்பத்தில் நாட்டின் மற்றோர் எல்லையாகிய பஞ்சாப் குறித்துக் காங்கிரஸ் காரியக் கமிட்டி விவேகமான முடிவு எடுத்திருப்பது வரவேற்க வேண்டிய விஷயம். மொழிவாரி ராஜ்ய அமைப்பை ஏற்றுக்கொண்ட பின் — அதற்கு விலக்காகக் கருதப்பட்ட பழைய பம்பாய் ராஜ்யத்தையும் இரண்டாகப் பிரித்த பின் — பஞ்சாபி சூபா பிரிவினைக்கு மட்டும் இணங்காதிருப்பது யுக்தமல்ல என்று ராஜாஜி நீண்ட நாட்களாகவே கூறி வந்திருக்கிறார். அவர் ஏதோ தேசப் பிரிவினைத் திட்டத்தை ஆதரிப்பதாகக் கருதிக் கண்டனம் செய்தவர்களும் கடைசியில் சந்தர்ப்பங்களின் நெரிசலை உணர்ந்து பஞ்சாபி சூபா அமைக்க முடிவு செய்திருப்பது மகிழ்ச்சிக்குரியது.

மொழி அடிப்படையில் மற்ற ராஜ்யங்களைப் பிரித்ததற்கும் பஞ்சாபி சூபா பிரிவினைக்கும் ஒரு மாறுபாடு உள்ளது. பஞ்சாபி மொழிக்குத் தனி மாகாணம் கோரிய சீக்கியர் பிற மதத்தைச் சேர்ந்திருப்பதால் இது ஒரு வகுப்புவாதப் பிரிவினைக் கோரிக்கை என்றே பஞ்சாபில் உள்ள ஹிந்துக்களில் பலர் கருதுகிறார்கள். இது காரணமாகவே அவர்கள் தாங்கள் பேசும் மொழி பஞ்சாபி என்பதையும் மறுத்துத் தங்கள் தாய்மொழி ஹிந்தி என்று ஜனசங்கியையின்போது தெரிவித்தனர். இதையெல்லாம் நினைவு கொள்ளும்போது பஞ்சாபி சூபாவில் ஹிந்து—சீக்கியர் சமூக ஒற்றுமை நல்ல முறையில் அமைய வேண்டுமே என்ற விசாரம் எழுகிறது. மேலும் பஞ்சாபி சூபா பிரிந்த பின் எஞ்சியுள்ள ஹரியனா பிரதேசத்தையும், மலைப் பகுதிகளையும் சிறியதொரு தனி ராஜ்யமாக்குவதா, ராஜஸ்தான் — ஹிமாசலப் பிரதேசம்-உத்தரப்பிரதேசம் இவற்றுடன் சேர்ப்பதா என்பது குறித்தும் கருத்து வேற்றுமைகள் எழுந்துள்ளன. பஞ்சாபி சூபா பிரிப்பதில் ஆட்சியாளர்கள் காட்டிய விவேகத்தையே இதன் விளைவாகத் தோன்றும் மற்றப் பிரச்னைகளைத் தீர்ப்பதிலும் அவர்கள் காட்டிப் பெருமை கொள்ள வேண்டும் என்று விரும்புகிறோம்.

கல்கி வெள்ளி விழா பரிசுத் திட்டம்

கல்கி வெள்ளி விழா பரிசுத் திட்டத்தில் பங்கு பற்ற ஆர்வத்துடன் முன்வந்த எழுத்தாளர் அன்பர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இந்த நாவல், சிறுகதைப் போட்டியில் அவர்கள் காண்பித்த உற்சாகம் அளவிட முடியாதது. பிப்ரவரி 28, முடிவு தேதியன்று ஓர் அன்பர் தாம் எழுதிய நாவலை சைக்கிளில் வைத்துக் கட்டிக் கொண்டு செஞ்சியிலிருந்து கிளம்பி இரவு பதினொரு மணி சுமாருக்கு நமது காரியாலயத்துக்கு வியர்க்க விறுவிறுக்க வந்து சேர்ந்தார். "மணி பன்னிரண்டு அடிக்கவில்லை, உங்கள் நாவலைப் போட்டிக்கு ஏற்றுக்கொள்கிறோம்" என்று கூறிய பிறகுதான் அவருக்குப் பெருமூச்சு அடங்கியது!

இப்படியே, முடிவு தேதி நெருங்க நெருங்க கல்கியிடம் அளவற்ற பற்றுதலும் அன்பும் கொண்ட பலர் மிகுந்த ஆர்வத்துடன் எழுதிய சிறுகதைகளும், நாவல்களும் நமது காரியாலயத்தில் வந்து குவிய ஆரம்பித்தன. அதே சமயத்தில் முடிவு தேதியை மேலும் ஒத்திப் போட வேண்டும் என்று கோரி அன்பர்கள் எழுதிய கடிதங்களும் ஏராளமாய் வந்தன. ஆயினும் ஆகஸ்ட் முதல் வாரக் கல்கி வெள்ளி விழா மலரில் போட்டி முடிவை அறிவிக்க எண்ணியிருப்பதாலும் போட்டிக்கு வந்த ஆயிரத்துக்கு மேற்பட்ட சிறுகதைகள், நூற்றுக்கு மேற்பட்ட நாவல்கள் அனைத்தையும் பரிசீலனை செய்து நியாயமான முடிவுக்கு வரப் போதுமான அவகாசம் தேவையாக இருப்பதாலும் முடிவு தேதியை மேலும் ஒத்திப்போடுவது சரியல்ல என்ற தீர்மானத்துக்கு வந்தோம்.

பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுப்பதற்கான பஞ்சாயத்தார்களாக இருந்து ஒத்துழைக்க வேண்டும் என்று நாங்கள் கேட்டுக்கொண்ட அனைவரும் உடனடியாக சந்தோஷத்துடன் சம்மதம் தெரிவித்தார்கள். அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறி மகிழ்கிறோம்.

பஞ்சாயத்தார்கள் :

சிறுகதைப் போட்டி

1. திரு அழ. வள்ளியப்பா
2. திரு கு. அழகிரிசாமி
3. திரு பி. எஸ். ராமையா
4. திரு தீப. நடராஜன்
5. ஆசிரியர், கல்கி

நாவல் போட்டி

1. ஸ்ரீமதி சௌந்தரம் கைலாசம்
2. திரு கி. வா. ஜகந்நாதன்
3. திரு மீ. ப. சோமசுந்தரம் (சோமு)
4. திரு எஸ். மகராஜன்
5. ஆசிரியர், கல்கி



WITH

Binaca Fluoride

TOOTHPASTE

Health authorities in many countries fluorinate the public water supply to strengthen teeth and prevent dental decay. This protection is available for the first time in India through a scientifically formulated toothpaste by CIBA.

CIBA

CIBA 68/55



திபெத்: இன்றைய நிலை

தலாய் லாமா

இன்றைய திபெத்தின் நிலவரம் பற்றி ஓர் அறிக்கை வெளியிடுவது எளிதான காரியமில்லை. உலக சரித்திரத்திலேயே முன்னெப்போதும் கண்டிராத பயங்கரக் கொடுமைகளுக்குத் திபெத்தைச் சீனர்கள் ஆளாக்கியிருக்கிறார்கள். இந்தக் கொடுமை எங்கு தொடங்குகிறது, எங்கு முடிகிறது என்று சொல்ல முடியாது. எனினும் கம்யூனிஸ ஆட்சியின் கீழ் திபெத்தில் காணப்படும் நிலையைப் பற்றிச் சுருக்கமாகக் கூறி, இது பற்றிய எனது சொந்தக் கருத்துக்களையும் சுருக்கமாக எழுதுகிறேன்.

மனித வாழ்வின் ஜீவாதாரமான இரத்தம் சுதந்திரமே. ஆனால் மனித ஆன்மாவை அடிமைப்படுத்தி அழிப்பதே சீனர்களின் நோக்கம். இதைச் சீனக் கம்யூனிஸ்டுகள் திபெத்தில் உக்கிரமான முறையில் செயலாக்கி வருகின்றனர். பேச்சுச் சுதந்திரம், நடமாடும் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம், பத்திரிகைச் சுதந்திரம், தொழில் சுதந்திரம் முதலியன அங்கு இம்மியும் இல்லை. சுருங்கச் சொல்லின் திபெத்தில் மக்களது தனிநபர் சுதந்திரம் கொலையுண்டிருக்கிறது. உதாரணமாக, ஒருவர் தமது குடும்ப அங்கத்தினருடனோ, நண்பர்களுடனோ பேசக் கூட முடியாது; தமது வீட்டிலேயே தமக்குப் பிடித்தமான உணவைச் சமைத்துச் சாப்பிட முடியாது. வீட்டுக்கு யாரேனும் விருந்தாளி வந்தால் அவரைப் பற்றிய விவரங்களையும் அவர் வந்திருப்பதன் காரணத்தையும் அந்தப் பிராந்தியத்திலுள்ள சீன அதிகாரிக்குத் தெரிவித்தாக வேண்டும். ஓரிரண்டு மைலுக்குள் உள்ள அண்டைப் பகுதிகளுக்குச் செல்வதற்கும் பர்மிட் வாங்கியாக வேண்டும். இதையெல்லாம் கேட்கும் சிலர் நம்பவே மறுக்கிறார்கள். ஆயின், சீனக் கம்யூனிஸ்ட்களுடன் நெருங்கிப் பழகிய திபெத்தியர்களே அவர்களது தீய திட்டத்தை உணராத போது, மற்றவர்கள் இப்போது அங்கு சீனு செய்யும் கொடுமைகளை நம்பாமலிருப்பதில் வியப்பில்லை. சீனக் கம்யூனிஸ்ட்டுகளுடன் நகமும் சதையுமாக உழைத்த திபெத்தியர்கள் தமது முதுகில் இவர்களே கத்தியைப் பாய்ச்சி, பயங்கர ஆட்சி நடத்துவார்கள் எனக் கனவிலும் எண்ணியதில்லை. சரியான தருணம் கிடைத்தவுடன் சீனு திபெத்திய மக்களைத் துன்புறுத்தி அடிமைப்படுத்தும் திட்டத்தில் இறங்கப் போகிறதென்றோ, தமது தாய்நாட்டிலேயே அந்நியர் போலவும், மூன்றாந்தரப் பிரஜைகள் போலவும் தாங்கள் நடத்தப்படுவோம் என்றோ திபெத் மக்கள் சிறிதும் நினைக்கவில்லை. வாயடைத்துப் போய் இப்போது திபெத் மக்கள் நரக வேதனை அநுபவித்துக் கொண்டிருக்கின்றனர்.

திபெத்தின் விவசாயம், கிராமத் தொழில், ஆலைத் தொழில் இவை முழுதும் சீனர்களின் ஆதிக்கத்துக்கு வந்துவிட்டன. சீனமே திபெத்தின் பொருளாதாரத்தை நிர்வகித்துக் கட்டுப்படுத்துவதால் இப்போது திபெத் பஞ்சத்தின் பிடியில் சிக்குண்டிருக்கிறது. திபெத்தில் பஞ்சம் ஏற்படுவது சரித்திரத்திலேயே கேட்டிராத ஒன்று. திபெத்தியத் தொழிலாளிகளுக்குச் சீன அதிகாரிகள் தரும் உணவு ரேஷன் மிகவும் குறைவானது; தரமும் மட்டமானது. எனவே அவர்கள் பச்சைத் தாவரங்களையும், வேக வைத்த தோலையும் தின்றே உயிர் வாழ முடிகிறது. கண்ட தாவரங்களையும், அருவருக்கத் தக்க பொருட்களையும் அதிகமாக உண்பதால் அவர்கள் உடல் வீக்கம் முதலிய வியாதிகளுக்கு ஆளாகின்றனர். பலர் மரணமடைந்திருக்கிறார்கள். குறைந்த அளவு உண்டு, அதிகமான காலம் கொடுமையான நிர்ப்பந்தத்தின் கீழ் வேலை செய்வதால் சோர்வினாலேயே பலர் சாவது சகஜமாகிவிட்டது. இரவு வேளைகளில் ஒரு சீழ்க்கைக் குரல் மக்களின் தூக்கத்தைக் கலைத்து அவர்களை நள்ளிரவுக் கூட்டங்களுக்கு அழைப்பதும்





பூஜ்ய தலாய் லாமா அவர்களின் திரு உருவப் படத்தை இவ்விதழ் மேலட்டையில் வெளியிடுவதில் பெருமிதமடைகிறோம். அன்னாரின் கட்டுரை இந்த இதழ் 'கல்கி'யில் இடம் பெறுவதைப் பார்க்கும்போது பெருமித மகிழ்ச்சி அடைந்தாலும் கட்டுரையைப் படித்து வருகையில் அளவிட முடியாத சோகமல்லவா நம் இதயத்தைக் கவ்வுகிறது.

சகஜம். இக்கூட்டங்களில் மக்கள் கண்டிப்பாகக் கலந்துகொண்டாக வேண்டும். அப்போது அவர்களில் ஒவ்வொருவரும் பரஸ்பரம் குற்றம் சாட்டிக்கொண்டு, மற்றவர்களின் தவறுகளையெல்லாம் எடுத்துக் கூறவேண்டும் என்று சீனக் கம்யூனிஸ்ட்டுகள் வற்புறுத்துவர். அல்லது அவர்களை முடிவில்லாத விசாரணைக்கும், அவமானத்துக்கும், வசவுகளுக்கும், அடி உதைகளுக்கும் ஆளாக்குவர். வாழ்க்கையில் நிச்சயமே இல்லாமற் போய்விட்டது. ஒருவர் தமது வாழ்க்கைத் தகவல்களைக் கூறும்போது ஒரு சிறு தவறு செய்துவிட்டாலும் அவரை—ஆணாயிருப்பினும் பெண்ணாயிருப்பினும் — சிறையில் தள்ளிவிடுவர். தண்டனைகள் மிகவும் கடுமையானவை. தண்டனைக்காளானவன் நாள் முழுதும் பைசாசப் பிரமை பிடித்தாற்போல் ஆகிவிடுவான். திபெத்தில் இவ்வளவு பெரும் மக்கள் தொகை இவ்வளவு கொடுமைகளை அநுபவிப்பது போல் உலகில் வேறெங்கும் காண முடியாதென நினைக்கிறேன்.

கிழவராயிருப்பினும், இளைஞராயிருப்பினும், எந்தத் துறையைச் சேர்ந்திருப்பினும் திபெத்தியர்களுக்கெல்லாம் கம்யூனிஸ பாடங்களும் மாவ்—ஸே—துங்கின் போதனைகளும் கற்பிக்கப்படுகின்றன. மாவ்—ஸே—துங்கின் போதனைகள் சர்வ சக்தி வாய்ந்தவை; தனிமனிதன் சர்க்கார் ஆகியவை குறித்து எல்லா விஷயங்களையும் தழுவுபவை. திபெத்தியர்கள் தமது வாழ்வின் அங்கமாகவே செய்து கொள்ள வேண்டிய இந்தப் போதனைகளின் மைய தத்துவம், ஒருவர் தமது நாட்டை மட்டும் கம்யூனிஸ்டாக்கினால் போதாது என்பதே. உலக முழுவதையும் கம்யூனிஸ்ட்களே ஆளவேண்டும்; பிறரது நாட்டில் மறைமுகமாகப் பிரவேசிப்பது, அந்நாடுகளில் இரகசியமாக நாச வேலைகள் செய்வது, ஏழைகளையும் தொழிலாளர்களையும் ஏமாற்றிப் புரட்சிக்குத் தூண்டிவிடுவது — ஆகிய முறைகளைக் கைக்கொள்ள வேண்டும்; சமாதான சக வாழ்வு சாத்தியமல்ல; உலகம் முழுவதையும் கம்யூனிஸத்தின் கீழ் கொண்டு வர வேண்டுமாயின் யுத்தம் தவிர்க்க முடியாதது; முதலாளிகளையும், 'ஏகாதிபத்தியவாதி'களையும் அழிப்பதற்குப் பலாத்காரத்தை மேற்கொள்ள வேண்டும். இதற்கு மகத்தான தியாகங்கள் புரிய வேண்டும் — இவை மாவ்—ஸே—துங்கின் போதனைகளில் சில. மாவ்—ஸே—துங்கின் போதனைகளை நடைமுறையில் அமுல் செய்ய வேண்டும் என்று திபெத் மக்களுக்கு ஆணையிட்டு இப்போது ஒரு பரவலான இயக்கமும் நடந்து வருகிறது. இவ்வளவெல்லாம் இருந்தும் எனது மக்கள் மாவின் தீய போதனைகளைப் பெற்று அதன்படி நடக்க இணக்கம் தெரிவிப்பதில்லை என்பதை அறிந்து மகிழ்ச்சி கொள்கிறேன்.

திபெத்தின் அரசியலும் பொருளாதாரமும் சீனக் கம்யூனிஸ்ட் ஆக்கிரமிப்பாளராலேயே கட்டுப்படுத்தப் பெற்று ஆளப்படுவதால், அங்கு எவ்வித முன்னேற்றமோ, சீர்திருத்தமோ ஏற்படவில்லை. புதிதாக அங்கு செய்திருப்பது ராணுவத்துக்காகப் பல சாலைகள் போட்டிருப்பதும், சீன அதிகாரிகளுக்கு வீடுகள் கட்டிக் கொடுத்திருப்பதும், சீன மொழியும், கம்யூனிஸ சித்தாந்தமும் போதிக்கப் பள்ளிகள் அமைத்திருப்பதுமேயாகும். திபெத்தில் நிகழ்ந்துள்ள மாறுதல்கள் இவைதான்: மடாலயங்கள் ராணுவக் கொத்தளங்களாகியுள்ளன;



குளிர் தாங்கும் திபெத்திய உடைக்குப் பதில் சீனப் பருத்தியில் நீல யூனிபாரமே மக்கள் அணிகிறார்கள்; திபெத்தின் சரித்திரத்தைச் சீனர் மனம் போனபடி மாற்றி எழுதியிருக்கின்றனர்; திபெத்தியச் சொற்றொடர்களுக்குப் பதில் சீனச் சொற்றொடர்களைப் பெருமளவுக்குப் புகுத்தியுள்ளனர். திபெத்திய அட்சரங்கள், உச்சரிப்பு இவற்றைக்கூடச் சீனர்கள் மாற்றியுள்ளனர். நிம்மதியாய், சாந்தமாய், தியானமயமாய் இருந்த திபெத்தின் மலைகளிலும் பள்ளத்தாக்குகளிலும் இன்று சீன ராணுவ அமைப்புக்களின் ஜுர வேகமான பரபரப்பு எதிரொலிக்கிறது. காலம் காலமாகச் சுதந்திர வாழ்வு நடத்தி வந்த திபெத்தின் எளிமையும், சாந்தமும் வாய்ந்த மக்கள் இன்று அடிமைக்கும் அடிமையாக, பயங்கரப் பிணியில் வாடுகிறார்கள். குறைவற்ற செல்வத்தோடு, உணவிலும் உடுப்பிலும் தாராளமாக வாழ்ந்த திபெத்தியர் இன்று கிழிந்த துணிகளை உடுத்திக்கொண்டு கால் வயிற்றுக்கு உண்டு வருகிறார்கள்.

மத நம்பிக்கையில் தாங்கள் திபெத்தியர்களுக்குச் சுதந்திரம் தந்திருப்பதாகச் சீனக் கம்யூனிஸ்டுகள் கோஷமிடுகின்றனர். இது வெளி உலகின் கண்டனத்திலிருந்து தப்பித்துக்கொள்வதற்காகச் செய்யும் தந்திரமேயாகும். வெளி உலகை ஏமாற்றக் கதைக்கிறார்கள். கம்யூனிஸம் என்பது நாஸ்திகக் கொள்கை. மத நம்பிக்கையையும், வழிபாட்டையும் அது சகித்துக் கொள்வதில்லை. முன்னேற்றத்துக்குக் குந்தகம் விளைவிப்பதே மதம் என்பது கம்யூனிஸக் கருத்து. முன்பு ஆறுயிரம், ஏழாயிரம் பிட்சுக்கள் வாழ்ந்த மடாலயங்களில் இன்று வயதான நோயாளிப் பிட்சுக்களே, நூறு அல்லது இருநூறு பேர்கள் உள்ளனர். அவர்கள் முன்போல் மத ஆராய்ச்சிகள் செய்யவோ, மடத்தின் வழக்கப்படி கிரமங்களைப் பின்பற்றவோ அனுமதிக்கப்படுவதில்லை. மாறாக அவர்கள் உடல் வருந்தக் கடுமையாக உழைக்க வேண்டியுள்ளது. பெரும்பாலான மடங்கள் இன்று காலியாகிவிட்டன. 'மதச் சகிப்பு' பற்றிய தனது மோசடிக்கு உதவும் உதாரணமாகச் சீனம் ஓரிரு மடங்களை மட்டும் விட்டு வைத்திருக்கிறது. விக்கிரகங்களும், தங்கம், வெள்ளி, தாமிரம், பித்தளை இவற்றாலான மற்ற பூஜைப் பாத்திரங்களும் உருக்கப்பட்டு, அன்றாடப் பண்டங்களாக மாற்றுரு எடுத்திருக்கின்றன. களிமண்ணாலான விக்கிரகங்கள் எருவாகப் பயனாகின்றன. புனிதக் கிரந்தங்கள் கொளுத்தப்படுகின்றன. வேறு விதத்தில் அழிக்கப்படுகின்றன; அல்லது அட்டைகளாக உபயோகிக்கப்படுகின்றன. திபெத் மக்களின் மத உணர்ச்சியை மனமறிந்து புண்படுத்த வேண்டும் என்ற நோக்கத்திலேயே சமய கிரந்த ஏடுகள் கழிவுப் பொருட்களைத் துடைத்துப் போட உபயோகிக்கப்படுகின்றன. மத நூல்களை 'பெயிண்ட்' செய்த கெட்டியான காகிதத்தைப் பூட்ஸ்களின் உட்புற உறையாக்கியிருக்கிறார்கள். குறி பார்த்துச் சுடுவதற்கு இலக்காகச் சிறிய விக்கிரகங்கள் பயனாகின்றன என்று சமீபத்தில் தெரிய வந்தது. புத்த பகவானின் கருணை திபெத்திய மக்களுக்கு மறுக்கப்படுகிறது. திபெத்தியர் எவரேனும் பிரார்த்தனை புரிவதைப் பார்த்தால் அவரைச் சீன அதிகாரிகள் அழிந்துபோகும் ஒரு சமுதாயத்தைச் சேர்ந்த பிற்போக்காளர் என்று பழிப்பார்கள். பொது இடத்தில் அவரை மானபங்கப் படுத்துவார்கள்; அடிப்பார்கள். 'சீர்திருத்தக் கல்விப் பயிற்சி' அவருக்கு நிர்ப்பந்தமாக அளிக்கப்படும். ஸ்ரீ கிருஷ்ண விக்கிரகத்தின் மீது, இயேசுநாதரைக் குறிக்கும் சின்னத்தின் மீது துப்பாக்கி ரவை செலுத்தப் பயிற்சி நடந்தால் அந்தக் காட்சியை ஒரு ஹிந்துவோ, கிறிஸ்தவரோ தாங்க முடியுமா? அவர்களது புனித நூல்கள் எரிக்கப்படுவதைப் பொறுத்துக்கொள்ள முடியுமா? இத்தகைய நீசத்தனமான, அபசாரமான காரியங்கள் எங்கள் தேசத்திலோ பிரத்தியட்சமாகவே நடத்திக் காட்டப்படுகின்றன.

'எனது நாடும் எனது மக்களும்' (**My land and my people**) என்ற தலைப்பில் நான் எழுதிய நூலில் மதம் ஒரு விஷம் என்று மாவ்-சே-துங் என்னிடம் கூறியதைக் குறிப்பிட்டிருக்கிறேன். இப்படிச் சொன்ன அவர் மதத்தைக் காக்கச் சிறு விரலைக்கூட அசைப்பாரா?


இனி என் கருத்துக்களைக் கூறுகிறேன்: எனக்கு மிகவும் விசித்திரமாக இருப்பது யாதெனில், திபெத்தை அந்நிய ஏகாதிபத்தியவாதிகளிடமிருந்து விடுவிக்கப் போவதாகச் சீனம் பிரகடனம் செய்திருப்பதே



வீட்டுக்காரர் : **என்னய்யா இது? தினம் தினம் வந்து தொந்தரவு பண்ணறே?**

பிச்சைக்காரன் : **"ஆயுள் சந்தா" கட்டறாப் போல "ஆயுள் பிச்சையா" ஐந்து ரூபா கொடுத்துடுங்க. அப்புறம் இந்தப் பக்கமே தலைகாட்டலைங்க!**




HIMALAYAN
FINEST
GOLDEN DUST TEA
LIPTON'S
FINEST
GOLDEN DUST TEA



"பீரோவை உடைத்துத் திருடியவனின் கை அடையாளம் பற்றி, கை ரேகை நிபுணரின் அறிக்கை வந்திருக்குங்க!"

"ஊம்....படி!"

"இந்தக் கைக்குச் சொந்தக் காரனுக்கு இப்ப யோக ஜாதகம், சுக்ரதசை, ரெண்டு பெண்டாட்டி, எட்டுக் குழந்தைகள், எக்கச்சக்கமா பணம் சேரும். இன்னும் முப்பது வருஷம் நல்ல வாழ்வு. 96 வயது வரையில் இவனுக்கு ஆயுள் கெட்டி!"

யாரும். திபெத்தில் அந்நியர் செல்வாக்கின் நிழல்கூடப் படிந்ததில்லை. ஆக்கிரமிப்பாளர் எவரும் திபெத்தில் இருந்ததில்லை. திபெத்தின் பிரதேச உரிமையை யாரும் அச்சுறுத்தியதுமில்லை. இப்படியிருந்தும் சீனக் கம்யூனிஸ்ட்டுகள் திபெத்தின் எல்லையைப் பாதுகாக்கவேண்டுமென்றனர். 'யாரை எதிர்த்து?' என்ற கேள்வி எழுகிறது. திபெத் மக்களில் எல்லா வர்க்கத்தினரும் அமைதியுடன் சுதந்திரமாக, சுபிட்சமாக, சுகமாகவே வாழ்ந்து வந்தனர். இந்நிலையில் 'திபெத்தின் சுதந்திரத்தைக் காத்து, அதை விடுவிப்பதற்காகப் புரட்சி செய்கிறோம்' என்று சொல்லிக் கொண்டு சீனக் கம்யூனிஸ்ட்கள் அப்பட்டமான படையெடுப்புச் செய்தனர். சீன ராணுவ சைனியங்கள் திபெத்துக்குள் வெள்ளமாகப் புகுந்து, திபெத்தியர்களை அவர்களுடைய அமைதியான இல்லங்களிலிருந்து விரட்டியடித்தன. பூகோள ரீதியிலும் அரசியல் ரீதியிலும் மனித இன ரீதியிலும் மொழி-இலக்கியம் — மரபு முதலிய அடிப்படைகளிலும் எல்லா விதத்திலுமே சீனாவுக்கு முற்றிலும் மாறுபட்டது திபெத் என்பதை இங்கு குறிப்பிட வேண்டும். திபெத் ஒருபோதும் சீனாவின் அங்கமாயிருந்ததில்லை. திபெத்தின் சுதந்திரமும் சுயாட்சியும் பல்லாயிரம் ஆண்டுகளாக நிலைபெற்றவை. இப்போதோ சீனர்கள் திபெத் எப்போதுமே சீனத்தின் ஓரங்கமாகத்தான் இருந்தது என்ற ஆதாரமற்ற கூற்றைச் சரடு விடுகிறார்கள். இது பரம அபத்தமானது.

சீனக் காலசர்ப்பம் திபெத்தின் மீது தனது நாச ஜ்வாலையை வீசத் தொடங்கிய நாளாக அந்த நாட்டின் நிலவரம் குறித்து வெளி உலகில் ஏற்பட்டுள்ள கவலைக்குரிய போக்கைக் குறித்து நான் ஆழ்ந்த ஏமாற்றம் தெரிவிப்பது தவிர வேறு வழியில்லை. சுருக்கமாகச் சொல்கிறேன்: முதலாவதாக, கம்யூனிஸ்ட் ஆட்சியின் பிரசார இயந்திரம் கற்பிதமாகப் புனைந்து பரப்பும் பொய்த் தகவல்களைச் சுதந்திர உலகின் பெரும் பகுதி எளிதில் நம்புகிறது. இவ்விஷயத்தை உலக நாடுகள் பகுத்து ஆராய்ந்துகூடப் பார்ப்பதில்லை; சரி—தப்பு எது என்று சீர்தூக்கிப் பாராமல் அவை சீனாவின் கூற்றை நம்புகின்றன. சீனப் பிரசாரம் உண்மையை முற்றிலும் திரித்துக் கூறுகிறது; அதில் எள்ளளவும் சத்தியம் இல்லை என்பது வெளிப்படும்போது உலக நாடுகளின் இந்த மேலெழுந்தவாரியான கருத்து எந்த அளவுக்கு எடுபடும் என்பதை நான் அநுமானிப்பதற்கில்லை.

இரண்டாவதாக, திபெத்தின் உண்மை நிலையைத் தலைகீழாக்கிக் காட்டும் போக்கு பலரிடம் நிலவுகிறது. தங்களது சுயநலம் பூர்த்தியாகும் என்பதால் அவர்கள் சீனத்துக்கு ஆதரவு தரும் அளவுக்குச் சென்று விடுகிறார்கள்.

மூன்றாவதாக, சீனக் கம்யூனிஸ்டுகளின் சினத்துக்குப் பயந்து சிலர் தங்களது கருத்தை வெளியிடவே தயங்குகிறார்கள்.

கடைசியாக, சீன அபாயம் பற்றி உலக நாடுகள் காட்டும் அசிரத்தையைக் குறிப்பிட வேண்டும். சீனாவின் ராணுவ பலம் ஒரு நெருப்புப் பந்து போல் குதித்துக் குதித்துச் சென்று பட்ட இடத்தை யெல்லாம் எரிக்கும் சக்தி பெற்றது. லகான் இல்லாத இந்த இயக்கம் வேண்டுமென்றே நாசங்களை விளைவித்துப் பரவி வருகிறது. எங்கே நெருப்பு வைக்கலாம், எங்கே வைக்கக் கூடாது என்றெல்லாம் அது ஆராய்ந்து பார்ப்பதில்லை. இப்போதே, ஆசியாவின் இதய ஸ்தானமாகிய திபெத்தில் நெருப்பு வைத்தாகி விட்டது. உலகம், முக்கியமாக ஆசிய நாடுகள் அதிலும் குறிப்பாகத் திபெத்தின் அண்டை நாடுகள் திபெத்தின் தகனம் பற்றிச் சரியாக உணர்ந்து உஷாராகாவிடில், சீனத் தீக்கோளம் அவர்களுடைய நாட்டுக்குள்ளேயே குதித்து நெருப்பு வைக்கும்போது அவர்கள் வருந்த வேண்டியிருக்கும்.

உலகப் பிரச்னைகள் எவ்வளவு கடினமாயிருப்பினும் நீதி, சத்தியம் என்ற இரண்டு அடிப்படைகளின் மீதே தீர்க்கப்பட வேண்டும். ஒரு தரப்பு நீதியையும் சத்தியத்தையும் விட்டுவிட்டால் பிரச்னைக்குத் தீர்வு காண்பது அசாத்தியமாகி விடும்.

அந்நிய அதிகாரமொன்றின் இரக்கமற்ற ஆதிக்கத்தில் என்னுடைய திபெத் மக்கள் சொல்லவொண்ணாத் துயரங்களையும் கஷ்டங்களையும் அநுபவித்து வருகிறார்கள். அடிமைத்தனத்திலிருந்தும், துன்பங்களிலிருந்தும், இன்னல்களிலிருந்தும் அவர்கள் விரைவிலேயே விடுபடுவதற்குப் பிரார்த்தனை செலுத்துகிறேன். திபெத்திலுள்ள நமது துர்ப்பாக்கிய சோதரர்களுக்கு ஏற்பட்டுள்ள கதி உலகில் வேறெவர்க்கும் ஏற்பட வேண்டாம் என்று மனமாரப் பிரார்த்திக்கிறேன்.

அதிசய மாப்பிள்ளை

அவன் ஓர் அதிசய இளைஞன்.

கல்யாணம் பண்ணிக் கொள்வதென்று நிர்மா னித்து அவன் பெண் பார்த்தது ஒரே பெண்ணை. சம்மதமும் தந்தான். பெண்ணுக்கும் இவனைப் பிடித்துவிட்டது. பிறகுதான் சோதனை ஆரம்ப மாயிற்று.

பெண்ணின் தகப்பனார் சொல்லிப் பார்த்தார்: மன்றாடினார். ஆனால் லட்சியவாதியான அந்தப் பிள்ளை இணங்குவதாக இல்லை.

சிறு விஷயம்.

'வரதட்சிணை கொடுத்தேயாக வேண்டும்' என்பது தந்தையின் கட்சி. 'வாங்க முடியாது' என்பது இளைஞனின் பிடிவாதம்.

'அதிகமில்லை. ஆயிரம் ரூபாய் வாங்கிக்கொண் டால் போதும்.'

'பெண்ணை விலைபேச வந்தேனா என்ன? பணம் வேண்டாம்.'

'ஒப்புக்கு ஒரு நூறு ரூபாயாவது....'

'முடியாது!'

'வரதட்சிணையாக ஒன்றும் தராமல் இந்தக் கல் யாணத்தை முடித்தால் சமூகத்தில் என்னைக் குறை வாய் நினைப்பார்கள். பொன்னை வைக்கும் இடத் தில் பூவையாவது வைக்கணும். இதுதான் முறை.'

நல்ல வேளை. இளைஞன் இதற்கு இணங்கினான். 'பொன் வேண்டாம். பயனுள்ள பொருளாகக் கொடுங்கள் போதும்.'

'ஒன்று கூடாது. மூன்றாகக் கேளுங்கள்.'

'எனக்கு எது பிரியமோ அதைக் கொடுப்பீர்களா?'

'காத்திருக்கிறேன்.'

எப்படியோ சாதுர்யமாகப் பேசி இளைஞனைத் தம் வழிக்குக் கொண்டுவந்துவிட்ட மகிழ்ச்சியில், பெண் ணின் தந்தை, அவன் கேட்கும் வரம் என்ன வென்று அறிய ஆவலோடு இருந்தார்.

'முதலாவது ஒரு ராட்டை' என்றான் அந்த இளைஞன்.

பெரியவருக்கு ஏமாற்றம். ஆனாலும் வெளியில் காட்டிக்கொள்ளவில்லை.

'அடுத்தது?'

'பஞ்சுப் பட்டைகள் நாலு.'

'இவ்வளவுதானா?' என்று எண்ணிய பெரியவர் மூன்றாவது பொருளாவது விலையுயர்ந்ததாக இருக்க வேண்டுமே என்று கவலைப்பட்டார். தம் மனக் குறையை இளைஞனிடம் சொல்லவும் செய்தார்.

இளைஞன் சிரித்தான்.

'நான் இப்போது கேட்கப் போவது விலைமதிக்க முடியாதவை.'

'அப்படியா? என்ன அது?'

'உங்கள் அருமைப் பெண்ணின் இரு கரங்கள்!'

இதற்கு மேலும் பெண்ணின் தந்தை பேச என்ன இருக்கிறது?

அவனையே மருமகனாக வரித்தார்.

இந்தக் கல்யாணம் நடந்தது 1927ல். இந்த அதிசய மாப்பிள்ளை யார் தெரியுமா?

— வசந்த் நாராயணன்

(விடை : 32-ம் பக்கம்)



'அரசியல் வாதி' என்பவருக்கு வியாக்கியா னம் கூறுமாறு கேட்ட பேராசிரியருக்கு ஒரு கல்லூரி மாணவனின் சமயோசித பதில்:

டணக்காரர்களிடமிருந்து பணத்தையும், ஏழைகளிடமிருந்து வோட்டுக்களையும் பெற்று, தனித்தனியே அவர்களிடம் ஒருவரிடமிருந்து மற்றவரைப் பாதுகாப்பதாக வாக்குறுதியும் அளிப்பவர்.

— மங்களம் ஆத்ரேயி



கடனில் மூழ்கிய கிராமங்கள்

இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு எல்லாத் துறைகளிலும் பொதுவாகப் பொருளாதாரத்துறையி லும் வளர்ந்து வருகிறது என்று பல அரசியல் தலைவர்கள் பேசி வருகிறார்கள். ஆனால் உண்மை நிலை என்ன தெரியுமா? நாட்டின் பெரும் பகுதி மக்கள் கடன் தொல்லையால் பாதிக்கப்பட்டுள்ளனர்கள். இதோ ஒரு புள்ளி விவரம். இது அந்தப் பாங்கி சம்பந்தப்பட்டவர்களே அளித்த ஒன்று.

1. வடஆர்க்காடு மாவட்ட கூட்டுறவு விவசாய பாங்கியில் 1965ம் வருடம் முடிய உரிய காலத் தில் தவணைகளில் திருப்பிக் கட்டப்படாத பொதுமக்கள் கடன் ரூ. 2.5 கோடி.
2. அதன் கிளை பாங்கி ஒன்றில் 1965ம் வருடம் முடிய திருப்பிக்கொடுக்கப்படாத கடன் ரூ85000.
3. அதில் சுமார் 1000 பேர்கள் ஜனத்தொகை கொண்ட ஒரு கிராம மக்கள் கட்டவேண்டிய கடன் பாக்கி ரூ. 20,000 (1965 முடிய) அதாவது அக்கிராமத்தின் ஒவ்வொருவரும், குழந்தைகள் உள்பட அப்பாங்குக்குச் சராசரி ரூபாய் 20 கடன்.

தகவல் : வி. எஸ். எஸ்.

கீழ்க்காணும் நிகழ்ச்சிகளைப் படித்தால் 'செவ்வாய்க்கிழமை' ஒரு துரதிருஷ்டம் பிடித்த நாள் என்றே எண்ணத் தோன்றும் :

1. நமது பிரதமர் லால்பகாதுர் மறைந்தது.
2. அணுசக்தி விஞ்ஞானி பாபா மறைந்தது.
3. காஷ்மீருக்கும் டெல்லிக்கும் இடையே பறந்த விமானம் காணாமல் போனது.
4. டில்லியில் விமானம் தீப்பிடித்தது.
5. கௌஹாத்தியில் விமானம் நொறுங்கியது.
6. குஜராத் மெயில் விபத்து நிகழ்ந்தது.

சந்தேகமிருந்தால் செய்தித் தாள்களைப் புரட்டிப் பாருங்கள். அனைத்தும் செவ் வாய்க் கிழமையில் நடந்தவையே!

— எஸ். நாராயணன்



இங்கிலாந்து அரசி எலிசபெத், தம் தந்தையாரிடமிருந்து பெற்ற சொத்துக்களில் ஒன்று பல தேசத்துத் தபால் தலைகளின் ஆல்பம். அந்த ஆல்பத்தின் இன்றைய மதிப்பு: ஒரு மிலியன் பவுண்ட். (ரூபாய் சுமார் 1 கோடி 40 லட்சம்!)

ஆதாரம்: 'டைம்ஸ் - டைட்'
தகவல்: காழி வடமலை மாணிக்கம்


நாகரிக கன்னிகா ஸ்திரீகள்



கன்னிகா ஸ்திரீகள் என்றதும் தலையிலிருந்து பாதம் வரை கறுப்பு அங்கியால் மறைத்துக் கொண்டிருக்கும் பெண்கள்தாம் நம் கண் முன் வருவார்கள். ஆனால் தலையில் இரும்புத் தொப்பி அணிந்தவண்ணம், கன்னிகா ஸ்திரீ ஸ்கூட்டரில் அமர்ந்து ஓட்டிச் செல்வதையோ மருத்துவமனையில் கையில் ஆபரேஷன் கத்தியுடன் இருப்பதையோ மேற்கு ஜெர்மனியில் தாராளமாகக் காணலாம். மாதர் முன்னேற்றம் என்கிறார்களே அது கன்னிகா ஸ்திரீகள் விஷயத்திலும் ஆடையில் மட்டுமின்றித் தொழிலிலும் ஏற்பட்டிருக்கிறது. இப்போதைய கன்னிகாஸ்திரீகள் வாழ்க்கைமுறை முற்றிலும் மாறி, கல்வி, பயிற்சி வசதிகள் அதிகரித்திருக்கின்றன.

ஆசிரியை, நர்ஸ், காரியதரிசி பணிபுரிந்த பெண்களே பெரும்பாலும் கன்னிகாஸ்திரீகளாக மாறுகிறார்கள். எனவே, காதலில் தோல்வி அடைந்தவர்களோ வாழ்க்கையில் வெறுப்போ அச்சமோ அடைந்தவர்களோ தான் கன்னிமாடத்தில் சேருகிறார்கள் என்ற கூற்று இதிலிருந்து பொய்யாகிறது.

இருபதாம் நூற்றாண்டுக்கு ஏற்பக் கன்னிகா ஸ்திரீகளின் வாழ்க்கை அமைய வேண்டிய அவசியத்தை உணர்ந்தார் ஏழாவது பயஸ் போப்பாண்டவர். கழுத்து முதல் பாதம் வரை நீண்ட அங்கி அணிவது போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருக்கும் என்பதால், நடைமுறைக்கு ஏற்றாற் போல் உடை அணியலாம் என்று 1950ம் ஆண்டிலேயே போப்பாண்டவர் யோசனை கூறியிருந்தார். கன்னிகா மாடத்தில் சேர்ந்துள்ள பல பெண்கள் விஞ்ஞானப் பரிசோதனைச் சாலைகளில் உதவியாளர்களாகவும், ஆஸ்பத்திரிகளில் மருந்து கலந்து கொடுப்பவர்களாகவும் பணியாற்றுகிறார்கள். (யூ. பி. எஸ்.)



படிப்பிலே புலி!

மேலே படத்தில் தெரியும் பட்டதாரியைப் பார்த்தால் ரொம்பச் சாது போலத் தோன்றினாலும் படிப்பிலே புலி தான்! இவ்வருஷம் டாக்டர் பட்டத்தைப் பெற்றதுடன் நில்லாமல் பல்கலைக் கழகத்தின் பதினொரு பரிசுகளையும் தாம் படித்த மதுரை மருத்துவக் கல்லூரிப் பரிசுகள் பத்தினையும் தட்டிக்கொண்டு போன இவர் மதுரை வி. காந்திமதி நாதன் அவர்களின் புதல்வர். சென்னை பல்கலைக் கழகத்தில் முதல் வகுப்பில் மட்டுமின்றி முதல் ஸ்தானத்திலும் தேறிய டாக்டர் லோகமுத்து கிருஷ்ணனின் ஆற்றல் நல்லவிதத்தில் பயன்பட வேண்டும் என வாழ்த்துகிறோம்!

"மகாநாட்டில் என் மனைவிதான் அட்ரஸ் பண்ணப் போகிறாள்!"

"இப்ப அட்ரஸ் தயார் ஆகிறதா?"

"இல்லை, டிரஸ் தயாராகிறது!"



பொன்மொழி

கதவைப் பலமாக அடைக்க வேண்டாம். நீங்கள் மறுபடியும் அந்த வழியாகவே திரும்ப நேரிடும்.

— ஐரிஷ் பழமொழி

தந்தையின் கவலை தீர்த்து வைக்கப்பட்டது!





வலிதான் எங்கள் பிரச்சினை...உங்களுக்கு நாங்கள் உதவக்கூடிய விதம் இதுதான்!

ஆராய்ச்சி: 'ஆஸ்ப்ரோ' ஆராய்ச்சிக் கழகத்தில் ஒரு ஆராய்ச்சிக் குழுவின் தலைமை வகிப்பவன் நான். எங்களுடைய பணி வலியை நிறுத்த மேன்மேலும் சிறந்த முறையைக் கண்டுபிடிப்பதே. இந்தப் பிரச்சினையின் ஆழ்ந்த விளக்கம் கொண்டுள்ள உலகத்தின் முதன்மையான பல கழகங்களுள் எங்களுடையதும் ஒன்று. வலிக்கு, இக்காலத்தில், சிறந்த ஒரே விடை 'ஆஸ்ப்ரோ'தான் என்பதை நாங்கள் இன்று அறிவோம். அதனால்தான் அது உலக முழுவதும் உள்ள டாக்டர்களாலும் ஆஸ்பத்திரிகளிலும் பயன்படுத்தப்படுகிறது.

வலி என்பது என்ன? உயிர்ப்பொருள், உடல் வேகத்திற்கும் மேலாக, மிக விரைவாகத் திசுக்களில் சேர்ந்து குவிந்து, ஒரு "அசாதாரணமான" வீக்கத்திற்குக் காரணமாகிவிட அது நரம்புகளை அழுத்துவதின் மூலம் வலி ஏற்படுகிறது.

'ஆஸ்ப்ரோ' இயங்குவது எப்படி? 'ஆஸ்ப்ரோ' உடனடியாக இரத்தத்தில் கலந்துவிடுகிறது—வீக்கத்தைக் கீழ்க்—நரம்புகளின் மீதிருக்கும் அழுத்தத்தைப் போக்கி—வலியை வெளியே இழுத்துவிடுகிறது.

இவைகளுக்கு ஆஸ்ப்ரோ சாப்பிடுங்கள்: வலி • தலைவலி • உடல்வலி • பல்வலி • மூட்டு வலி • ஜுரவேகத்துடன்கூடிய ஜலதோஷம் • ஃப்ளு • டெங்கு.


அளவு: பெரியவர்கள்: இரண்டு மாத்திரைகள். தேவையானால் மீண்டும் இதே அளவில் உபயோகிக்கவும்.
குழந்தைகள்: ஒரு மாத்திரை அல்லது உங்கள் டாக்டரின் சொற்படி.



'ஆஸ்ப்ரோ'

வலியை வெளியே இழுத்துவிடுகிறது!

A.G. 20.65 TAM.



அயல் நாட்டவருக்குப் பிரயாண வசதிகள்

வெளிநாட்டவர்கள், தங்கள் வாழ்நாளில் ஒரு தடவையாவது அண்டைநாடுகளுக்குப் போய் அந்த அண்டை நாட்டவர்களின் வாழ்க்கை முறை, கலாசாரம் முதலியவற்றைப் பற்றித் தெரிந்து கொள்வதை ஒரு லட்சியமாகவே கொண்டிருக்கிறார்கள். செல்வம் மிகுந்தவர்கள்தான் இத்தகைய உல்லாசப் பிரயாணங்களை மேற்கொண்டு உலகெங்கும் சுற்றி வருகிறார்கள் என்பதில்லை. சாதாரண உழைப்பாளிகளின் வர்க்கத்தைச் சேர்ந்தவர்களும், தாங்கள் ஓய்வுபெறுமுன், தாங்கள் சேர்த்து வைத்துள்ள தொகையில் பெரும் பகுதியைத் தங்களுக்குப் பிடித்த ஒரு வெளிநாட்டையாவது சுற்றிப் பார்த்து வருவதில் செலவழிக்கத் தயங்குவதில்லை.

இத்தகைய உல்லாசப் பிரயாணிகளின் பாரத விஜயம் சமீப காலத்தில் அதிகரித்தே இருக்கிறது. பாரதத்தின் அந்நியச் செலாவணி வசதிக்கு இது உதவியாக இருப்பது போல், அவர்கள் பிரயாணத்துக்கு நமது நாட்டில் வசதிகளும் உகந்தனவாயிருக்கின்றனவா என்பதைத் தெரிந்து கொள்ள இந்தத் துறையில் மிகுந்த அனுபவம் பெற்ற திரு பி. ஆனந்தராவ் அவர்களைப் பேட்டி கண்டோம்.

ஆனந்தராவ் அவர்களின் குரலை ரேடியோவில் கேட்காத கிரிக்கெட் பிரியர் இருக்க முடியாது. சிறந்த கிரிக்கெட் விமர்சகர் என்பதுடன் வெளிநாடுகளில் வெவ்வேறு துறைகளில் பல ஆண்டுகள் பணியாற்றியவர் திரு ஆனந்தராவ். இப்போது சென்னை நகரத்திலுள்ள பெரிய ஹோட்டல்களில் ஒன்றான தாசப்பிரகாசில் அது தோன்றிய நாள் முதல், மேற்பார்வையாளராக இருந்து வருகிறார். சமீபத்தில் உலகத்தின் பல பாகங்களிலும், ஹோட்டல் நிர்வாகம் உல்லாசப் பயண வசதி ஆகிய இரண்டும் எவ்வளவு தூரம் அபிவிருத்தி அடைந்திருக்கின்றன என்பதைக் கண்டறிந்து திரும்பியிருக்கிறார்.

''நம் நாடு வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளைக் கவருகிறதா ?''

''ஒரு நாளுக்கு மேலாகவும் ஆறு மாத காலத்துக்குக் குறைவாகவும் இங்கு வந்து தங்கிப் போவோரை உல்லாசப் பிரயாணிகள் என்று நாம் எடுத்துக் கொள்ளலாம். அந்நியச் செலாவணி வசதியை நமக்குச் சம்பாதித்துக் கொடுக்கும் பட்டியலில் இந்த உல்லாசப் பிரயாணம் ஐந்தாவது இடத்தைத்தான் பெற்றிருக்கிறது. சென்ற ஆண்டு இந்த அயிட்டம் நமக்கு இருபத்தி நான்கு கோடி ரூபாய்களைத் தான் கொடுத்திருக்கிறது. இந்தத் துறையில் நாம் இன்னும் நிறைய நிறைய முன்னேற்றம் கண்டாக வேண்டும். ஆரம்பக் கட்டத்தில்தான் நாம் இன்னும் இருக்கிறோம். அதிதி உபசாரத்தில் நாம் சிறந்தவர்கள்தான். ஆனால் அதையே தொழில் முறையில் செய்யும்போது அதற்காக நாம் இன்னும் அதிகமாக உழைக்க வேண்டும். அக்கறை காட்ட வேண்டும்.''

''நீங்கள் குறிப்பிடும் அக்கறையை எப்படிக் காட்டலாம் ?''

''வெளி நாட்டவர்களுக்கு இங்கு வந்தவுடன் 'ஏதோ கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது' போன்ற உணர்ச்சி தோன்றாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது முக்கியம். அவர்கள் தங்கள் நாடுகளில் தங்கள் வீடுகளில் இருப்பது போன்ற சகஜ நிலையைக் கூடிய விரைவில் ஏற்படுத்த வேண்டும். அதற்காக அவர்கள் அங்கு அனுபவிக்கும் வசதிகளையெல்லாம் அளிக்க வேண்டும் என்பது பொருளல்ல. அவர்கள் இங்கு வரும்போது தங்கள் தேசச் சூழ்நிலையையே பார்க்

கப் போகிறோம் என்று எதிர்பார்த்து வருவதில்லை. அசல் இந்தியச் சூழ்நிலை எப்படி இருக்கும் என்று தெரிந்து கொள்ளத்தான் வருகிறார்கள். அதிக காரத்தை விரும்பாதவர்கள் அவர்கள் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். சுத்தமான சூழ்நிலை, சலவை செய்த படுக்கை விரிப்புக்கள், காற்றோட்டமான அறை, சாதாரண மரக்கறி உணவு, இந்தியப் பழக்க வழக்கங்களைத் தெரிவிக்கும் கேளிக்கைகள், நாடகங்கள் முதலியன அவர்களுக்கு மன நிறைவைக் கொடுக்கின்றன. இந்தியக் கிராமங்கள், கிராமவாசிகளின் வாழ்க்கை முறை, புராதனச் சிற்பங்கள், ஓவியங்கள், கோயில்கள் எல்லாம் அவர்களுக்குப் புதுமையாகவும், வியப்பாகவும் ரசிக்கக் கூடியனவாகவும் இருக்கின்றன.

''முன்பெல்லாம் இந்த மாதிரி வெளிநாட்டுப் பிரயாணத்தைச் செல்வந்தர்கள்தான் அதிகமாக மேற்கொண்டார்கள். அவர்களுக்குத்தான் அவகாசமும் பொருள் வசதியும் இருந்தன. ஆனால் இப்போதோ 'ஜெட்' யுகம். விமானப் போக்குவரத்து எந்த நாட்டையும் சில மணி நேரங்களில் இணைத்து விடுகிறது. ஆகையால் வாழ்க்கையில் பல நிலையில் உள்ளவர்களும், விமானங்களிலுள்ள சிக்கன வகுப்பு டிக்கட்டுகள் வாங்கிக்கொண்டு யாத்திரா மார்க்கமாகக் கிளம்பிவிடுகிறார்கள். நடுத்தர சைவ ஹோட்டல்களே அவர்களுக்குப் போதுமானதாக இருக்கின்றன. தங்கள் பண வசதிக்கேற்ப அவர்கள் சுற்றிப் பார்க்கவும் முடிகிறது. இதை நாம் மனத்தில் வைத்துக் கொண்டு அவர்களுக்கு உதவ வேண்டும்.''

''சுற்றுப்பிரயாணம் மேற்கொள்பவர்கள் பாரதத்துக்குச் சுலபமாக வந்து போகலாமல்லவா?''

''இந்த ரகப் பிரயாணிகளுக்கு நம் நாட்டு சுங்க இலாகா கொஞ்சம் பயங்கரமான விஷயமாகவே இருக்கிறது. காரணம் இந்த நாட்டில் காலடி எடுத்து வைக்கும் ஒவ்வோர் அயல் தேசத்தாரையும் கள்ளக் கடத்தல்காரர்கள் என்ற அவநம்பிக்கையுடனேயே நம் சுங்க இலாக்கா நோக்குகிறது. இந்த மனோபாவம் வெளியிலிருந்து வருபவர்களுக்கு எடுத்த எடுப்பிலேயே ஒரு மாதிரி எரிச்சலையும் அதிருப்தியையும் தோற்றுவிக்கின்றன. இந்த நிலை மாற வேண்டும். ஆரம்பக் கட்டத்திலேயே நாம் நல்ல நண்பர்களைச் சந்திக்கிறோம் என்ற சகஜ உணர்ச்சி அவர்களுக்குத் தோன்ற வேண்டும். இந்த எண்ணத்தை நாம் உண்டாக்கினால் நம்முடைய அந்நியச் செலாவணி நிலையை மேலும் நான்கைந்து மடங்கு உயர்த்திக் கொள்ளலாம்.''

''வேறு எந்த நாடு இந்தத் துறையில் வழி காட்டும் முன்னோடியாக இருக்கிறது?''

'' உதாரணத்துக்கு ஜப்பானையே எடுத்துக் கொள்ளலாமே. 1958ல் ஜப்பானுக்கு விஜயம் செய்த அயல் நாட்டுப் பிரயாணிகள் 60 ஆயிரம்தான். ஆனால் ஜப்பானியர்கள் அன்றிலிருந்து தளராத ஊக்கத்துடன் தங்கள் நாட்டிலுள்ள பிரயாண வசதிகளையெல்லாம் அபிவிருத்தி செய்து இன்முகம் காட்டி நடந்து கொண்டிருப்பதன் விளைவாக 1965ம் ஆண்டில் 380 ஆயிரம் வெளிநாட்டுப் பிரயாணிகள் ஜப்பானுக்கு வந்து போனார்கள். சராசரி ஒவ்வொரு பிரயாணியும் ஐந்நூறு டாலர் வரை செலவழித்தான். இதிலிருந்து ஜப்பான் சம்பாதித்த தொகையை நாமே கணக்கிடலாம். உபசரிப்பை அவர்கள் ஒரு கலையாகவே கையாளுகிறார்கள்.''

''உலகத்தில் வெளிநாட்டுப் பிரயாணிகளுக்கான ஹோட்டல்களில் சிறந்ததை எங்கே காணலாம்?''

''அதுவும் ஜப்பானில்தான். டோக்கியோவில் உள்ள 'ஒக்கூரா' (Okura) ஹோட்டல் உலகத்திலேயே சிறந்தது என்று நான் நினைக்கிறேன். அத்துடன் ஓரளவு போட்டி போடக் கூடிய 'நியூ ஒட்டானி' (New Otani) ஹோட்டலும் ஜப்பானில்தான் இருக்கிறது. ஜப்பானிய ஹோட்டல் சிப்பந்திகள் பக்ஷீசை எதிர்பார்ப்பதுமில்லை; கொடுத்தால் வாங்கிக் கொள்வதுமில்லை.

''ஜப்பான் சிறந்த ஹோட்டல்களுடையது என்று மாத்திரம் பெருமைப்பட்டுக்கொள்ளாமல், குறைந்த விகிதத்தில் அதிக வசதி கொண்ட தங்கும் அறைகள் வழங்குவதிலும் பெருமையடைகிறது. 1950 யென்கள், அதாவது சுமார் இருபது ரூபாய்க்கு முதல் தரமான, 'ஏர் கண்டிஷன்' செய்யப்பட்ட அறை கிடைக்கும். அத்துடன் இணைந்தாற்போல் வெந்நீர், குளிர் நீர் வசதிகளுடன் தனி குளியல் அறை. குடிக்கப் பிரத்தியேக குளிர் பௌண்டன், டெலிவிஷன், டெலிபோன், பட்டுப் படுக்கை விரிப்புக்கள் முதலிய பல சௌகரியங்களுடன் ஒரு நபர் ஒரு நாள் தங்கக்கூடிய அறை கிடைக்கிறது. நம் நாட்டில் இதில் ஏறத்தாழப் பாதி வசதிகளுடன் கூடிய ஓர் அறைக்கு 22 ரூபாய் ஆகிறது. சம்பள விகிதத்தில் இந்திய ஹோட்டல் சிப்பந்திகளைப் போலத்தான் ஜப்பானிய ஹோட்டல் சிப்பந்திகளும் வாங்குகிறார்கள். ஆனால் அவர்கள் தினசரி பத்து மணி நேரத்துக்கு மேலாகவே உழைக்கிறார்கள். கடிகாரத்தைப் பார்த்து வேலை செய்யாமல், தங்குபவர்கள் மனமறிந்து பணி புரிகிறார்கள்.''

''எந்த நாட்டில் பிரயாணிகளின் செலவு அதிகமாக ஏறுகிறது?''

''நிச்சயமாக பிரான்ஸில்தான். பாரிஸ் நகர ஹோட்டல்களில் எல்லாமே கிராக்கிதான். ஆனால் அங்கேதான் எல்லா வெளிநாட்டவர்களும் வந்து குவிகிறார்கள்.''

''பாரதம் ஜப்பானைப் பின்பற்றினால் நல்லது என்று நினைக்கிறீர்களா?''

''சந்தேகமில்லாமல் நல்லதுதான். ஆனால் ஜப்பானின் அளவை எட்டக் கொஞ்ச நாட்கள் ஆகலாம். ஜப்பான் தன் பொருளாதாரத்தை ஏற்கனவே பலப்படுத்திக் கொண்டுவிட்டது. அதனால் மிகக் குறைந்த அடக்கத்தில் சிறந்த சேவையைச் செய்ய முடிகிறது. நம்முடைய பொருளாதார நிலை இன்னும் வலுவடையவில்லை. இதை நினைவில் வைத்துக் கொண்டு, இயன்றவரை இன்முகம் காட்டி நின்றோமானால், இந்தத் துறைக்கு நல்ல எதிர்காலம் இருக்கும்.''

— மேனு



தமிழ்த்திரை 1965

என்று சிலேடையாகக் கூறுகிறான். இன்றைய சமுதாயத்துக்கு இந்த அறிவுரை மிக அவசியம். மேல் பூச்சிலேயே மயங்கிக் கொண்டிருக்கும் இன்றைய உலகத்துக்கு உள்ளே இருதயம் — மனிதத் தன்மை நிரம்பி யிருக்க வேண்டும் என்று உணர்த்துகிறான்.

ஜமுனா சர்மா, புது டில்லி

'நான் சிகரெட் பிடிக்கக்கூடாதுன்னு தெரியும் டாக்டர். ஆனால் இங்கே வருகிறவர்கள் சிகரெட் பிடிப்பதைப் பார்த்ததும்.... என்னாலே....' என்று முடிக்காமல் நாகேஷ் மீதியை உணர வைக்கும் இடத்தில்.... அப்பப்பா!

'சாரி, சேது....' என்று பெரிய டாக்டர் தன் வாயில் பொருத்தியிருந்த புகைக் குழாயைக் கீழே போடும் இடத்தில் நம் மெய் சிலிர்க்கிறது.

பாமா கோபாலன், குரோம்பேட்டை

நீர்க் குமிழி

சேது ஓர் உணர்ச்சிக் குவியல். தனக்கு உடல் குணமாகாது, முடிவு காலம் நெருங்கி விட்டது என்று ஒளிந்திருந்து கேட்க நேரிடும் போது சேதுவின் முக பாவம் பிரமாதம். சேதுவாக நடிக்கும் நாகேஷ் பயம், துக்கம் முதலிய உணர்ச்சிகளை அப்படியே முகத்தில் காட்டுகிறார். நம் உள்ளத்தைக் கசக்குவது போல் இருக்கிறது.

சேது ஈட்டிக்காரனிடமிருந்து தப்புவதற்காக நர்ஸின் பிரைவேட் அறையினுள் நுழைகிறான். அப்பொழுது நர்ஸ் உடை மாற்றிக்கொண்டிருக்கிறாள். சேது சிறந்த பண்புடையவன். இருந்தாலும் மனித மனம் சபலமுடையதுதானே. அவன் கண் நர்ஸ் பக்கமே திரும்புகிறது. அவன் மனத்தை அடக்கிப் பலவந்தமாகத் தன் கன்னத்தைக் கைகளினால் பிடித்துத் திருப்பிக் கொள்கிறான். பிரமாத டைரக்ஷன்.

சேதுவின் கடைசி நாட்கள். ஈட்டிக்காரன் பணம் கேட்கிறான். 'நீ ஒருவனாவது என்னைத் தினமும் வந்து பார்த்துவிட்டுப் போகிறாயே என்று சந்தோஷப்பட்டுக் கொள்கிறேன்.. நான் பணம் கொடுத்துவிட்டால் நீயும் வராமல் இருந்து விடுவாய் என்றுதான் இத்தனை நாட்கள் உன்னை ஏமாற்றி வந்தேன்!" என்கிறான் சேது. மனித மனம் தன்னை அநாதை என்று ஒத்துக்கொள்ள மறுக்கிறது!

தனக்குப் பெண் கொடுக்க வந்தவரிடம் ஓர் ஆரஞ்சுத் தோலை மூடியபடி கொடுக்கிறான் சேது. அதைத் திறந்து பார்த்த அவர் திடுக்கிடுகிறார். 'இருதயம் உள்ளவனுக்குப் பார்த்து உங்கள் பெண்ணைக் கொடுங்கள்'

இதய கமலம்

கமலம் என்றால் தாமரை என்பது பொருள். இதயம் எவ்வளவு மென்மையானதோ, அத்தகைய தன்மையானதுதான் கமலமும். இம்மலரின் மென்மைக் குணத்தினை உடையவள்தான் கமலா. இப்படத்தின் கதாநாயகி.

படத்தின் பெரும் பகுதி கோர்ட்டுக் காட்சிதான். ஆனால் அக்காட்சிகள் ஒவ்வொன்றும் உச்சகட்டத்திலே அமைந்திருப்பதுடன், டைரக்ஷனும் போற்றும் வண்ணம் அமைந்திருக்கிறது.

ஓர் இடத்தில் கமலா, ''என்னையே பாருங்கள். என் இரு விழிகளைப் பாருங்கள். இப்பொழுது இரு கண்களையும் மூடிக் கொள்ளுங்கள். மறுபடியும் கண்களைத் திறவுங்கள். எங்கே, இப்பொழுது உங்கள் நெஞ்சத்தைத் தொட்டுச் சொல்லுங்கள். நான் உங்கள் மனைவியில்லையா?'' என்று கேட்பது நெஞ்சைப் பிழிந்தெடுக்கிறது. அப்பொழுதும் இல்லை என்று மறுக்கும் கணவனைக் காணும்பொழுது பெண்மை படும் பாடு சொல்லி முடியாது. 'கடைசி கடைசியாக எனக்கு ஒரே சந்தர்ப்பம் தாருங்கள். நான் உங்கள் மனைவி என்று நிரூபிக்கிறேன்' என்று கெஞ்சும் பொழுதும், பாஸ்கரின் வீட்டுக்கு ஓடிச் சென்று அவனுக்குப் பிடித்த டம்ளரில் பால் கொண்டு வருவதும், கடைசி முயற்சியாக





பரிசு பெறும் கடிதங்கள்



நாணத்தை விட்டுக் கணவன்—மனைவி இருவருக்கும் ஏற்பட்ட இரகசிய உறவை விளக்கும் பொழுதும் பெண் குலமே கண்ணீர் உகுக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. கடைசியில் தான் கணவனிடம் மறைத்த ஓர் உண்மையினை விளக்கி இறந்தது தன் சகோதரி தான் என்றும் நிரூபிக்கிறாள் கமலா.

மங்கலப் பொருளான தாலியினைக் கழற்றித் தன் சகோதரியின் கழுத்தில் போட்டமைக்கு ஏற்ற பலன் கிடைத்தது என்று கூறிவிட்டு, கமலா வீட்டை விட்டு வெளியே ஓடும் பொழுது நம் மனம் நெகிழுகின்றது.

என். லலிதாம்பாள், கோயமுத்தூர்-2

தான் ஒரு குழந்தைச் செல்வத்தைப் பெற்றெடுக்க வேண்டும் என்ற ஆசையைக் கணவனிடம் சொல்ல நாணமுற்று, 'அத்தைதான் நம் இருவரையும் கோவிலுக்குப் போய் வரச் சொன்னார்கள்' என்று வெட்கத்துடன் கூறி, ஓரக் கண்ணால் கணவனைப் பார்க்கிறாளே, கமலா! அந்தப் பார்வையின் அழகு அருமையிலும் அருமை! அடக்கமான ஆழ்ந்த நடிப்பு, அழகிய முகபாவம், அந்தக் கட்டத்தில்.

அவர்களது திருமண ஊர்வலக் காட்சியைத் தன் கணவனுக்கு நினைவூட்டுவதற்காக எடுத்துக் கூறுகின்றாள். அப்போது கணவன் தன்னை வர்ணித்ததைக் ''கனவு காணும் கண்க''ளோடு, மிக அழகாகவும், நிதானமாகவும் ஒவ்வொரு வார்த்தையையும் நன்கு சுவைத்துக் கூறிக்கொண்டு வரும்போது தனது நீண்ட கண்களைச் சிறிதே மூடுகின்றாள். அவள் கண்களிலின்றும் கண்ணீர் அருவியாகக் கொட்டுகின்றது. நீதிபதியும் உணர்ச்சிவயப்பட்டுத் தம்மை மறந்து 'அடடா...' என்று தலையசைத்து, பின் தம்மை உணர்ந்து திடுக்கிடுகின்றார். கே.ஆர். விஜயா நடித்த இந்த இடம் என் மனத்தை மிகவும் தொட்டு விட்டது.

கே. சரோஜா, சிதம்பரம்

எங்க வீட்டுப் பிள்ளை

என்னைக் கவர்ந்த பாத்திரப் படைப்பு 'அப்பாவி'யாக எம். ஜி. ஆர். நடிக்கும் பாத்திரமே.' மாமாவிடம் அடிவாங்கியபின்பு, தன் தந்தையின் படத்தின் முன்பாக, கண்களில் நீர் பொங்க, சோகத்தின் அழுத்தத்தால் வார்த்தைகள் வெளி வராமல், மூன்று முறை தலையசைத்துப் பின்வாங்குகிறாரே, அந்த இடத்தில் நடிப்புக் கலை நெஞ்சைப் பிழிந்து உயிராட்டம் ஆடுகிறது. தன்னை 'மாப்பிள்ளை' பார்க்க வருகிற போது நெஞ்சில் பயமே அடிப்படைக் கோழைத் தன்மையை உருவாக்கி விட்டிருந்ததால், 'பெண்ணைப் பிடித்திருக்கிறதா?' என்ற கேள்விக்கு, முக பாவனையால் பதிலளிக்கிறாரே, அங்கு நடிப்பின் அழகு பளிச்சிடுகிறது. இது போன்று எத்தனையோ கட்டங்கள்.

செயலன், கும்பகோணம்

என்னதான் முடிவு?

மனித சமூகத்தால் சிருஷ்டிக்கப்பட்ட சட்டங்களை விட - சந்தர்ப்பச் சாட்சியங்களைக் கொண்டு மனிதனால் அளிக்கப்படும் தீர்ப்பைவிட - தன் மனச்சாட்சியால் அளிக்கப்படும் தீர்ப்பு எத்தனை சக்தி வாய்ந்தது! இதை அழகாக, அருமையான வசனங்களால் (என்னதான் முடிவு?) திரைப்படத்தில் புலப்படுத்திக் காட்டும் பாலையா (மானேஜர்)வின் பாத்திரம் என் நெஞ்சைத் தொட்டது. கதை, வசனம் இரண்டும் இயற்கைக்கு முரணாக இல்லாமல் மனித வாழ்வின் இயல்போடு ஒட்டியதாக உள்ளன.

லே. தங்கவேல், செங்கோட்டை

குழந்தையும் தெய்வமும்

ஆணவமும் அலட்சியமும் கொண்டது ஒரு படைப்பு. அடக்கமும் அறிவும் கொண்டது மற்றொரு படைப்பு. இந்த இரு பாத்திரங்களையும் ஏற்று







எனக்கு நிகர் நானே என்று நிருபித்து அற்புதமாக நடித்து நம்மிடம் சபாஷ் பெறும் அந்தச் சிறுமியின் அபார நடிப்பு; ஆகா... எவ்வளவு புகழ்ந்தாலும் மிகையாகாது. பிறந்ததி லிருந்து தந்தையைப்பிரிந்து பிறகு தந்தையைச் சந்திக் கும்போது 'அப்பா' என்று தன் மனத்துக்குள் சொல் லிக் கொள்வதையும், பிறகு தன் தாயைச் சந்திக்கும் போது ஒன்றும் பேசாமல் கண்ணீர் உகுத்தவாறே 'அம்மா அம்மா' என்று துக்கத்துடன் தாயைத் தழுவிக் கொள்வதும் நெஞ்சை உருக்குகின்றன. நம்மையும் அறியாமல் இரு சொட்டுக் கண்ணீர் முத்துக்கள் நம் கண்களில் திரண்டு நிற்பதைத் தொட்டுப் பார்த்து உணர்கிறோம்.



குழந்தையும் தெய்வமும் படத்தில் குட்டி பத்மினியின் நடிப்பு எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

பி. குமரேசன், திருப்பத்தூர் (வ. ஆ.)

காக்கும் கரங்கள்

ஒரு டாக்டர் எந்த விதமான சூழ்நிலையில் இருந்தாலும் தன் கடமையில் கண்ணுமிருந்து சிறிதும் வழுவாமல் செவ்வனே செய்து முடித்தால் அது தனக்கும் வெற்றி, ஒரு ஜீவனுடைய உயிருக்கும் வெற்றி என்ற ஒரு கருத்தை மையமாகக் கொண்டு உணர்ச்சிகளுக்கிடையே பின்னப்பட்ட புதுமைக் காவியம் காக்கும் கரங்கள்.

கடைசிக் கட்டத்தில் தன் மனைவிக்கே அறுவைச் சிகிச்சை செய்யும்போது 'வேண்டாம் என் கரங்கள் நடுங்குகின்றன. நான் தோல்வியைத்தான் அடை வேன். வேறு டாக்டரை அழைத்துப் பார்ப்போம்' என்று கூறும் சங்கருக்கு, 'நீங்கள் உங்கள் கடமையைச் செய்யுங்கள். மீதியைக் கடவுள் கவனித்துக்கொள்வார்' என்று மனைவியே எடுத்துக் கூறுகிறாள். இந்தக் கட்டத்தில் எஸ். எஸ். ஆரின் பிறவி நடிப்பு பளிச்சிடுகிறது. உள்ளத்து உணர்ச்சிகள் முகத்தில் தெரிய, நடுங்கும் கரங்கள் அமைதி பெற்று, காக்கும் கரங்களாக மாறும் போது என்னையும் என் சூழ்நிலையையும் மறந்து, கண்ணீர் சொரிந்தேன்.



வெ.விஜயலக்ஷ்மி, அரியலூர்

பூமாலை

மலர் பறிக்கும் முறை பக்குவமாக அமைய வேண்டும். பக்குவம் தவறினால் மலர் பயனற்றுப் போய் விடும். மலர் போன்றது தான்பெண்மை. ''பூமாலை'' என்னும் படத்தில் பூமாலை கற்பை இழந்ததும் தற் கொலை செய்து கொள்ளாதது நமக்குத் தவிப்பையே அளித்தபோதிலும் அதுவே

இயற்கை என்று சீக்கிரமே முடிவு கட்டுகிறோம். திருமணத்துக்குச் சம்மதம் அளிக்கும் போது வெறுப்பை ஏற்படுத்தி னாலும், தன் கணவன் தன்னைக் காண முடியாதபடி ஒதுங்கி வாழும் அவளது பாங்கு நம்மைப் பூரிக்கச் செய்கிறது. இப் படிக் கதையமைப்பில் குறை தோன்றுவதுபோல் தோற்று வித்து அதையே நிறைவாக்கும் கதைப் போக்கு கதாசிரியரின் திறமையைப் பறைசாற்றுகிறது. கருணாநிதி யின் வசனம் என்றால் கரடு முரடான தமிழிருக்கும் என்று எதிர்பார்த்தவர்களுக்குக் கருத்துள்ள வசனங்களைத் தந்து பாராட்டு பெறுகிறார்.

மேலும் இப் பாத்திரத்துக்கு மெருகூட்டு பவர் விஜய குமாரி. தம் தந்தையிடம் தவறு தன்னுடையது அல்ல என்று எடுத்துக் கூறும் இடத்திலும் சரி, தம் கணவனிடம் உள்ளத்தைத் திறந்து காட்ட முடியாமலும் அவனை ஏமாற்ற முடியாமலும் தவிக்கும் நிலையிலும் சரி, அவரது சிறந்த நடிப்புத் தோன்றுகிறது. கண்களில் வெறி பொங்கத் தம்மைக் கற்பழித்தவன் எதிரிலிருந்தால் 'என்னென்ன செய்வேன்' என்று கூறுகையில் நடிப்பின் உச்ச கட்டத்துக்கே போய்விடுகிறார்.

கோ. சண்முகம், ஜோலார்பேட்டை

வெண்ணிற ஆடை

சித்தப் பிரமை பிடித்துச் சதா சிரிக்கவும் அழவும் செய்கிறாள் சோபா. தனக்கு வைத்தியம் பார்க்க வந்த டாக்டரின் தலையில் காயத்தை ஏற்படுத்தி விட்டு அவர் அழாமல் சிரிப்பதைப் பார்த்துக் கோபத்துடன் 'நீ அழு, அழு' என்று கத்தும்போதும், அவர் அழுவதைப் பார்த்துப் பரிதாபத்துடன் அருகில் வந்து 'வலிக்குதா?' என்று கேட்கும் போதும் சோபா சோபிக்கிறாள்.

குளிக்கப் போகும்போது, டாக்டரை வரவேண்டாமென்று தடுக்கும்போது விழிப்படைந்த பெண்மைக்குச் சான்றாகிறாள் சோபா. அதே சோபா அவரிடம் தன் உள்ளத்தை மூடி மறைத்து விளக்கும்போது பெண்மையின் மென்மைக்கு உருவமாகிறாள்.

டாக்டர் இன்னொருத்தியைக் காதலிக்கிறார் என்று அறிந்து, அவர்கள் இருவரையும் சேர்த்து வைத்துத் தான் வெண்ணிற ஆடை அணிந்து விதவையாக வரும் போது அந்த மென்மை திண்மையாக மாறுகிறது.

பெண்மை, அதன் மென்மை, அதே சமயத்தில் திண்மையாக மாறிவிடும் தன்மை இவை மூன்றையும் சேர்த்தெடுத்து உருவாக்கிய சோபா என்னும் இந்தப் பாத்திரம்தான் என்னை மிகவும் கவர்ந்தது.

கே. மல்லிகா, கொல்லம்-1

திருவிளையாடல்

சிவம் தம்மிடமிருந்து சக்தியைப் பிரித்துப்

பார்வதியையே எரித்து விடுகிறார். அடுத்த வினாடி முதல் சிவனுக்குச் சக்தி யில்லாது தனித்திருக்க முடியாது போகவே, சிவதாண்டவம் புரியும் நிலை ஏற்பட்டு விட்டது!

பல பூகம்பங்கள் ஏற்பட, பல எரிமலைகள் வெடிக்க, கடல் கொந்தளிக்க, நாராயணன் முதல், நாரதர் வரை சகல தேவர்களும் ஒன்றும் புரியாது திணறி, காரணம் கண்டு கொள்ள ஸ்தலத்துக்கு விரைகின்றனர்.

ஆடியாடிக்களைத்துத் தலைவிரி கோலத்துடன், இரத்தச் சிவப்பேறிய சிவபெருமானைப் பார்த்து, ''சிவனில்லாமல் சக்தியும், சக்தியில்லாமல் சிவனும் தனித்து இருக்க முடியாது. இது சர்வ வல்லமை படைத்த தங்களுக்குத் தெரியாதது இல்லையே! இனி எப்போதும் போல் 'அம்மையப்பனாகவே' காட்சியளியுங்கள்'' என்று வேண்டுகின்றனர்.

சிவன் தன்னிடமிருந்து பிரிந்த சக்தியைத் திரும்ப ஏற்றுக் கொள்ள, எரிந்துவிட்ட பார்வதி தேவி எழுந்து ஒய்யார நடை பயின்று, தம் கணவனின் கால்களில் விழுந்து வணங்குகிறார். 'பத்மஸ்ரீ சிவாஜி கணேசன்' நடிகையர் திலகம் 'சாவித்திரி கணேஷ்' ஆகியோரது நடிப்பு, திருவிளையாடல் படம் பார்த்த ஒவ்வொருவரது உள்ளத்தையும் நெகிழச் செய்த பண்பட்ட, உணர்ச்சி மிக்க, உயிரோவிய நடிப்பாகும்.

வ. கிருஷ்ணமூர்த்தி, ஆப்பூர்

நாணல்

நாணல் படத்தில் சிறையிலிருந்து தப்பியோடும் கைதிகளின் தலைவன் அரசுவாகச் சுந்தரராஜன் அடக்கமாகவும் அமைதியாகவும் நடித்து மனத்தைக் கொள்ளை கொண்டு விடுகிறார்.

வீட்டின் தலைவர் இல்லாத சமயம் குடும்பத் தலைவியிடம் கள்வர் தலைவன் நடந்துகொள்ளும் பண்பும், அவளிடம் காட்டும் கண்ணியமும் கட்டுப்பாடும் நமக்கு வியப்பையூட்டுகின்றன. ஏதோ சூழ்நிலை வசமாய்க் கள்வனாக மாறினாலும் தானும் மனிதன் என்பதை ஒவ்வொரு வினாடியும் நினைவுறுத்துகிறான். ஆத்திரத்தில் சின்னப் பையன் தனது கன்னத்தில் அடிக்கிறபோது, சிறத்தைச் சிறிதும் காட்டிக் கொள்ளாமல், 'போனால் போகிறான் அறியாத பையன்' என்ற அலட்சிய பாவத்தில் அநாயாசமாகத் தனது இடது கையால் அவனுடைய முகத்தைத் தன்னருகில் கொணர்ந்து அரசு பேசுகிற பேச்சு, அருமை! கூட்டாளி ஒருவன் சபல புத்தியில் மாடியில் பெண்ணை வற்புறுத்தும் சமயம், 'டுமீல்' என்ற வெடிச் சத்தம் கேட்கிறது. மேலே ஒரு கொலை விழுகிறது. கீழே, ஒரு மலை--

இறுதிக் கட்டத்தில், ''சின்ன வயசிலே என் அம்மா சொல்லுவா, டேய், அரசு, முரட்டுத் தனம் கூடாது. வளைஞ்சாத்தான் வாழலாம்னு. அது சரியாப் போச்சு. வணங்காமே நிமிர்ந்து நின்னு விழுந்துட்டேன். நீ ஜெயிச்சுட்டே, துரை, ஜெயிச்சுட்டே. வளைஞ்சு கொடுத்து நிமிர்ந்துட்டே' என்று அரசு நெஞ்சுருக ஒப்புக்கொள்ளும் தோல்வியிலும் வெற்றியே அடைகிறார்.

என். பிரபாகரன், சென்னை-10

நீலவானம்

கள்ளமில்லா உள்ளத்துடன் துள்ளித் திரியும் பேதைப் பெண் கௌரி, தான் புற்று நோயால் பீடிக்கப்பட்டிருக்கும் உண்மையை அறியாதவள். அவளுடைய உள்ளப் பாங்கையும் உடற் கோளாறையும் நன்குணர்ந்த உயர் குணம் படைத்த உத்தம வாலிபன் பாபு அவளது குறுகிய வாழ்க்கையை மலர வைப்பதற்காகத் தன் காதலையும் துறந்து அவளை மணக்கிறான்.

முதல் இரவன்று கௌரி தன் கணவனிடம் 'அடிக்கடி சினிமாவுக்குச் செல்ல வேண்டும். ஜோடியாகக் கடற்கரையில் உலாவ வேண்டும். நிறைய சடலை உருண்டை சாப்பிட வேண்டும்' என்று தனது குழந்தைத்தனமான ஆசைகளை வெளியிடுகிறாள். இவைகளைப் பொறுமையுடன் கேட்டுவிட்டு, 'ஓ. கே.' 'ஆல்ரைட்' என்று அன்பு பொங்கப் பதிலிறுத்து அவளைச் சமாதானப்படுத்துகிறான் பாபு. இந்நிலையில் தன் மனைவியின் உடல் நிலையும், அவள் வாழப் போகும் சிறிது காலமும் மகிழ்வோடிருக்க வேண்டும் என்ற நினைவும் அவன் மனத்தில் அலை மோதுவதால் அவன் இதயத்தில் நிரம்பும் வேதனையின் சாயல் முகத்திலும் பிரதிபலிக்கிறது. நீலவானத்தில் வரும் இக்காட்சியை நடிப்பு, வசனம், டைரக்ஷன் போன்ற எல்லாத் துறையிலும் சிகரம் என்று கூறலாம்.

பாபுவாக நடிக்கும் பத்மஸ்ரீ கணேசன் அவர்கள் நடிப்பின் உச்சிக்கே போய் விட்டார். கௌரியாக நடிக்கும் தேவிகா நெஞ்சில் இடம் பெற்று விட்டார்.

வி. ஜி. சுப்பிரமணியன், தாம்பரம்



'' 'ஒப்புர ஒழுகு' என்று சொல்லியிருக்கு தெரியுமா?''



அசரீரி தந்த ஆனந்தம்

கோமதி சுவாமிநாதன்

நாற்பது வருட காலமாகக் குவிந்த புகழும் பணமும் எங்கே, எப்படிப் போயற்று என்று தெரியவில்லை. இங்கிலாந்திலும், ஐரோப்பிய நாடுகளிலும் அவனுடைய அற்புதமான கற்பனைகளில் விளைந்த இசை நாடகங்களைக் கண்டு களித்துப் பாராட்டாத அரச குடும்பங்களே இல்லை. புகழும் பொருளும் போட்டியிட்டுக் கொண்டு அவனை அணுகின.

பொறாமைக்காரர்களின் உள்ளங்கள் குமுறின. அவர்கள் திட்டமிட்டு, கலவரம் விளைவிக்கக் கூடிய போக்கிரிப் படை ஒன்றைத் திரட்டி அவனுடைய நாடகங்கள் நடக்குமிடங்களிலெல்லாம் கலகம் விளைவித்து நிகழ்ச்சிகளை முற்றுப் பெறாமல் இருக்கும்படி பார்த்துக் கொண்டார்கள். இதன் விளைவாக அவனுடைய இசை நாடகங்களை நடத்த யாரும் முன் வரவில்லை. அவனை நோக்கி வறுமைதான் முன்வந்தது.

இந்த நிலையில்தான் அவனைப் பாரிசவாயு வேறு தாக்கியது. ஒரு கையும், காலும் போதிய சுவாதீனத்தில் இல்லை. குறிப்பிட்ட சில நீரூற்றுக்களில் மருத்துவ சக்தி இருப்பதாகக் கேள்விப்பட்டு, அங்கே போய் அந்த நீரூற்றுக்களில் ஸ்நானம் செய்ய முற்பட்டான். அந்த நீரூற்றுக்களில் மூன்று மணி அவகாசத்துக்கு மேல் அமிழ்ந்திருந்தால், குணத்துக்குப் பதிலாக விபரீதமான பலன்களே ஏற்படும் என்று தெரிந்திருந்தும் அவன் நாளொன்றுக்கு ஒன்பது மணி அவகாசத்துக்கு மேலாகவே அந்த நீரூற்றில் வீழ்ந்து கிடந்தான்.

வாழ விரும்பாத அவனை வாழ்க்கை மீண்டும் அழைத்தது. கைகால்கள் சுவாதீனத்துக்கு வந்தன. உடல் நலம் தேறியது. மீண்டும் தன் கவனத்தை இசை நாடகக் கலையினிடம் திருப்பினான்.

ஆனால் இந்த சந்தோஷம் நான்கு ஆண்டுகள்தான் நிலைத்திருந்தது. அவனுக்கு ஆதரவு தந்த இரண்டொரு போஷகர்கள் திடீரென்று காலமானார்கள். அந்தக் கலைஞனுக்குப் போதாத காலம் மீண்டும் பலமாகவே வந்தது. வறுமை, பசி, பிணி எல்லாமே அவனைச் சூழ்ந்து கொண்டன.


வாழ்க்கையின் மீது பற்றுதல் குறைந்து விட்டது.

அந்தக் கலைஞன்தான் ஜார்ஜ் ஃபிரடெரிக் ஹாண்டல். ஆங்கில இசை நாடகத் துறையில் தனக்கென்று ஒரு தனி இடம் பிடித்துக் கொண்ட மேதை. பாட்டுக்களைக் கவனம் செய்து இசை அமைப்பதில் மன்னன்.

1741ம் ஆண்டு. அவனுடைய கஷ்டமும் மனக் கசப்பும் உச்ச நிலையில் இருந்த காலம். வாழவும் முடியாமல் சாகவும் முடியாமல், இரவு வேளைகளிலெல்லாம் ஏக்கம் நிறைந்த உள்ளத்துடன் லண்டன் நகரத் தெருக்களில் நடந்து கொண்டிருந்தான்.

ஒரு நாள் இரவு அவன் மாதாகோவில் பக்கமாக நடந்து கொண்டிருந்தான். அதன் வாயிலில் ஒருகணம் நின்றான். அவன் கண்களில் நீர் ததும்பியது.

"ஆண்டவனே! இந்தக் கேவல வாழ்க்கையை மீண்டும் வாழ வேண்டும் என்பதற்காகவா என்னைப் பாரிசவாயுப் பிடிப்பிலிருந்து காப்பாற்றினாய். மறுபடியும் நான் என் விரோதிகள் மனம் குளிர வாழ்வில்



தடுமாறி விழ வேண்டும் என்றுதான் எனக்கு உயிர் கொடுத்தாயா? என் உழைப்புக்கு வெற்றி கிடைக்காத வேளையில் நான் வாழ்ந்து என்ன பயன்! நீ என்னைக் கைவிட்டு விட்டாய்'' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டு நடந்தான்.

ஓர் அவலமான இடத்தில்தான் அவன் தங்கியிருந்த அறை இருந்தது. அவன் இரவெல்லாம் மனக் கலக்கத்துடன் மனம் போன படி சுற்றிவிட்டுத் தன் அறைக்குத் திரும்பிய போது அவன் எழுத உபயோகிக்கும் மேஜையின் மீது ஒரு காகிதக் கட்டு இருந்தது.

ஹாண்டல் அதை அவசரம் அவசரமாகப் பிரித்துப் பார்த்தான். ஓர் இசை நாடகத்துக்கான கதைப் பகுதி. இசை அமைக்க அஸ்திவாரமாக அமையும் கருப் பொருள். அதை அனுப்பி வைத்த ஆசாமி சார்லஸ் ஜென்ஸ் என்னும் ஒரு சாதாரண எழுத்தாளன். ஏன்? ஓர் இரண்டாந்தர மூன்றும் தர எழுத்தாளனும்கூட.

ஹாண்டலுக்கு எரிச்சலாக இருந்தது. தான் ஒரு மேதை என்ற நம்பிக்கை அவன் உள்ளத்தில் வேரூன்றியிருந்த நிலைமையில் ஜென்ஸ் போன்ற நபர் தன் கதையை இசைக்காக அனுப்பி வைத்தது ஆத்திரமாகவும் இருந்தது. அந்தக் காகிதக் கட்டை விட அதனுடன் கூட வந்திருந்த ஜென்ஸின் கடிதத்தில் கண்டிருந்த ஒரு வரி அவனைக் கோபமே அடையச் செய்தது.

அந்தக் கதைப் பொருளை இசை வடிவாக்கக் கேட்டுக் கொண்டிருந்த ஜென்ஸ், 'ஆண்டவன் கட்டளையின் பேரில் இதை உங்களுக்கு அனுப்பியிருக்கிறேன்' என்று சம்பிரதாயமாக முடித்திருந்தான்.

ஹாண்டலுக்கு எப்போதுமே பக்தித் துறையிலோ, இறை வணக்கத்திலோ ஈடுபாடு அவ்வளவாக இருந்ததில்லை. ஜென்ஸ், ஆண்டவன் கட்டளை இது என்று குறிப்பிட்டது அவனுக்குப் பிடிக்கவில்லை. அலட்சியமாக அந்தக் காகிதக் கட்டைத் தள்ளி வைக்க அவன் முயன்றபோது நடுவிலே ஒரு பக்கத்தில் கண்டிருந்த சில வரிகள் அவன் பார்வையில் தென்பட்டன. கதையில் வரும் கதாநாயகனைப் பற்றிய சில வரிகள்.

''அவன் எல்லோராலும் ஒதுக்கி வெறுக்கப்பட்டான். அவன் நம்பிக்கையுடன் பல திசைகளிலும் பார்த்தான். ஆனால் அவனுக்கு ஆறுதல் அளிப்பார்கள் யாருமில்லை. ஆனால் அவன் கடவுளிடம் நம்பிக்கையை இழக்கவில்லை. அவர் எப்படியும் மனோ திடத்தை அளிப்பார் என்ற உறுதியுடன் இருந்தான்......''

இந்த வரிகளை ஹாண்டல் பல தடவைகள் படித்தான். ஓரளவு தன் நிலையை அவ்வரிகள் பிரதிபலிப்பதாக நினைத்தான். ஏன் தானும் அந்த நம்பிக்கையை வளர்த்துக் கொள்ளக் கூடாது என்று ஒரு கணம் நினைத்தான். அடுத்த கணத்தில் அவன் ஆனந்தத்தால் துள்ளிக் குதித்தான். உடனடியாக ஜென்ஸின் கதைப் பொருளுக்கு இசை அமைக்க ஆரம்பித்தான்.

இருபத்திநான்கு நாட்கள் இரவு பகலாகப் பசி தாகத்தை மறந்து எழுதினான் ஹாண்டல். இத்தனை காலம் வரை தோன்றிய அத்தனை இசை நாடகத்துக்கும் மேலான அற்புதமான 'மெஸையா' உருவாகி விட்டது.

ஹாண்டலுக்கு இங்கிலாந்தில் விரோதிகள் நிறைய இருந்ததால் அவன் இந்தப் புதுத் தயாரிப்பை அயர்லாந்தில் அரங்கேற்றத் திட்டமிட்டான்.

டப்ளின் நகருக்குப் போய் அங்குள்ள வாத்திய கோஷ்டியினரை வைத்துக் கொண்டு 'மெஸையா'வைத் தயாரித்தான். முதல் நாள் நாடகத்துக்கான அனுமதிச் சீட்டுகளெல்லாம் முன்கூட்டியே விற்கப் பட்டன. 1742ம் ஆண்டு ஏப்ரல் 13ம் தேதி தான் 'மெஸையா'வின் அரங்கேற்றம். கொட்டகை திறக்கப்படுவதற்குப் பல மணி நேரம் முன்னதாகவே பார்வையாளர்கள் வந்து வாயிலில் குழுமி விட்டார்கள். நாடகம் பிரமாதமான வெற்றி.

இந்த நாடகத்துக்கான வரும்படியிலிருந்து ஒரு சிறு நாணயத்தைக் கூடத் தன் உபயோகத்துக்கு எடுத்துக் கொள்ளவில்லை என்று ஹாண்டல் தீர்மானித்தான். அத்தனையும் தர்ம ஸ்தாபனங்களுக்குப் போயிற்று. ஆண்டவன் அசரீரியாக ஜென்ஸ் எழுதிய வரிகள் மூலம் தனக்கு ஒரு புது வாழ்வு அளித்தான் என்று அவன் ஆனந்தப்பட்டான்.

லண்டன் நகரில் இந்தச் செய்தி பரவிற்று. ஹாண்டலை முழு உற்சாகத்துடன் அழைத்தார்கள். அந்த ஆண்டிலிருந்து ஒவ்வோர் ஆண்டிலும் லண்டன் நகரவாசிகள் 'மெசையா'வைக் கண்டுகளித்தார்கள்.

ஒரு வருஷமா, இரண்டு வருஷமா? தொடர்ந்து பத்தொன்பது ஆண்டுகளுக்கு மக்கள் அந்நாடகத்தைப் பார்த்து மகிழ்ந்தார்கள். நாட்கள் செல்லச் செல்ல நாடகத்தின் மதிப்பும் அதைக் காணும் ஆர்வமும் அதிகமாயிற்றே ஒழியக் குறையவே இல்லை.

1761 ஏப்ரல் மாதம் 6ம் தேதி. திரை விலகியது. அரங்கத்தில் 'மெஸையா' ஆரம்பமாகியது. முன்வரிசையில் அமர்ந்திருந்த எழுபத்திநாலு வயது ஹாண்டல் மயக்கமடைந்து விழுந்தான். அதையடுத்து ஏப்ரல் 13ம் தேதி, அந்த நாடகம் தொடங்கிய 19ம் ஆண்டு விழாவன்று அவன் காலமானான். மனமுடைந்து போன ஹாண்டல், மறு வாழ்வு பெற்று பத்தொன்பது ஆண்டுகள் வாழ்ந்து விட்டே போனான். (ஆதாரம்: டைஜெஸ்ட்)

கொடி மலர்

தாய்ப் பாசம் காரணமாகக் கட்டிய மனைவியைக் கைவிடுகிறான் ராமு. அவள் பிறவி ஊமை; ஆனால் அவளுக்கும் உள்ளம் இருக்கிறதே. துரை ராமுவின் தம்பி. அவன் தன் அண்ணியின் தங்கையையே காதலித்து மணந்து கொண்டு அம்மாவின் அந்தஸ்து மோகத்தைத் தகர்த்து அண்ணனையும் அண்ணியையும் ஒன்று சேர்த்து வைக்கிறான்.

அப்பாவி ராமுவாக முத்துராமனும், நீதிக்குப் போராடும் துரையாக ஏவி. எம். ராஜனும் தங்கள் பாகங்களைச் சிறப்பாகச் செய்திருக்கின்றனர்.

கண்ணாம்பாளையும், ஜி. வரலக்ஷ்மியையும் போல நடிக்க முயன்றிருக்கிறார் எம். வி. ராஜம்மா. ஆனால் ஏனோ சோபிக்கவில்லை.

காஞ்சனா ஏவி. எம். ராஜனின் காதலியாக வருகிறார். பாத்திரத்தோடு ஒன்றி நடிக்க அவர் நன்கு பயிற்சி பெற வேண்டும்.

படத்தில் பேசி, நடித்தவர்களெல்லாம் நம் நினைவில் இடம் பெறவில்லை; ஆனால் ஒரு வார்த்தைகூடப் பேசாமல், ஏற்ற பாத்திரத்துக்கு ஏற்ப ஊமைப் பெண் லக்ஷ்மியாக நடித்திருக்கும் விஜயகுமாரி நம் மனத்தை விட்டு அகலவில்லை.

படத்தின் பாராட்டத் தக்க அம்சம் —

''கொடி மலர்'' — ''சியாமளி'' என்னும் வங்காளக் கதையைத் தழுவி எழுதப்பட்டது என்னும் உண்மையைப் பகிரங்கமாக ஒப்புக் கொண்டிருப்பதுதான் !

விஜயகுமாரியின் சிறந்த நடிப்பு படத்தின் குறைபாடுகளைப் பற்றி ஒன்றும் சொல்ல முடியாமல் நம்மை ஊமையாக்கி விடுகிறது.





அண்ணாவின் ஆசை

ஆடிப் பாடிக் குதித்த குடும்பம் உருப்படாது என்பார்கள். தன் தம்பியை டாக்டராக்கிப் பெரும் புகழும் பெற ஆசைப்பட்டான் அண்ணன். நேர்மையிலிருந்து தவற மானேஜர் தூண்ட, அவன் மறுக்கவே அவர் செய்த சூழ்ச்சியினால் அண்ணன் வேலை போய் விடுகிறது. தம்பிக்குப் பெண் கொடுக்க முன் வந்த கதாநாயகி விஜயாவின் தந்தையும் இதனால் மறுத்து விடுகிறார். அண்ணன் தன் தம்பியின் படிப்புக்காகத் தீய வழியொன்றை மேற்கொள்கிறான். அப்படிப் பணம் வந்தும் தம்பியின் படிப்பு நிறைவேறவில்லை. தம்பி குதிரைப் பந்தயத்தில் பணம் சேர்த்து அண்ணனைப் பழி வாங்கிய மானேஜரைப் பழி வாங்குகிறான். பிறகு கம்பெனியைத் தானமாகத் தந்து விடுகிறான் ! இப்படி நடக்குமா ? இது இயற்கைக்கு முரணாக உள்ளது. இன்ஷூரன்சை ஏமாற்றி, இறந்து விட்டதாகக் கதைகட்டி ஒரு லக்ஷம் ரூபாயைத் தம்பிக்குத் தந்த அண்ணன் கடைசியில் உயிரோடு இருக்கிறான் என்பதுபடத்தின்'சஸ்பென்ஸ்'.

பாலாஜி டாக்டருக்குப் படிக்கும் தம்பியாக வருகிறார். இந்தப் படத்தை எடுத்த அவர் உயிரைக் கொடுத்து நடித்துப் படத்துக்கு உயிரூட்டுகிறார். இவரது காதலியாகக் கே. ஆர். விஜயா வந்து கவர்ச்சிகரமாகத் தோன்றி, பிறகு அதற்குத் தண்டனையாகக் கண்ணீரும் விட்டுக் கதறுகிறார் ! அண்ணன் ஜெமினி கணேசன்; அண்ணி சாவித்திரி. வேஷப் பொருத்தம் இயற்கைதான்! நடிப்பும் இயற்கையாகவே அமைந்துள்ளது.


நாகேஷ்—மனோரமா ஹாஸ்யக் காட்சிகளில் கணவன் மறைவை எதிர்பார்க்கும் சீன் ரொம்ப 'ஓவர்'

பாலாஜி, ஜெமினி கணேசன், சாவித்திரி, விஜயா இவர்களது நடிப்புக்காகவே இந்தப் படத்தைப் பார்க்கலாம். கதையில் நல்ல சஸ்பென்ஸ் வேறு இருக்கிறது. அண்ணாவின் ஆசை பாலாஜியின் முதல் முயற்சி. அவர் ஆசை நிராசையாகாது.


பாண்ட்ஸ்
ட்ரீம்ஃப்ளவர் ஃபேஸ் பவுடர்
POND'S
சொப்பன சுந்தரியின் வதனப் பொலிவை உங்களுக்கு அளிக்கும்
பாண்ட்ஸ் ட்ரீம்ஃப்ளவர் ஃபேஸ் பவுடர் சீராகப் படிந்து முகத்திலுள்ள சிறு குறைகளை மூடி மறைக்கிறது...முகத்தைப் பளிச்சென்று வைக்கிறது! உங்கள் சரும நிறத்திற்கேற்றபடி தேர்ந்தெடுக்கப் பலவித வண்ணங்களில் கிடைக்கின்றது.
சீஸ்ப்ரோ - பாண்ட்ஸ் இன்கார்ப்பொரேடட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ்.ஏ.யில் இணைக்கப்பட்டது)
JWT-P-3218

யாத்திரை

6



அந்த மூலிகையை, அவனுடைய துயரங்களுக்கெல்லாம் மருந்தாக அமைந்த அந்தச் சஞ்சீவியைப் பிறர் கண்ணில் படாதவாறும், அதே சமயம் அவன் கண்ணுக்கு மட்டும் வெளிப்படத் தெரிகிறவாறும் வைக்க வேண்டுமென்று அதற்குரிய இடம் எதுவென்று துழாவினான் நாணா. வைத்தியரின் வாழ்வில் பல பிரச்னைகளுக்கு விடை தருவதாக அமைந்த காரணத்தாலோ அல்லது அத்தை உமிழ்ந்த நஞ்சுக்கு நஞ்சே பரிகாரம் என்று துணிந்ததாலோ நாணாவுக்குத் தன் செய்கை அச்சத்தையே தரவில்லை. வியப்புத்தான் எழுந்தது. மகிழ்ச்சிகூடச் சுரந்தது. சில சந்தர்ப்பங்களில் மனிதன் சமயோசிதமாகவும் தைரியமாகவும் செயல்பட வேண்டும். அவ்வாறேதான் அவனும் துணிந்திருப்பதாக எண்ணினான்.

'விஷம்' என்ற குறிப்பு இருந்ததே தவிர அந்தக் குப்பியைத் திறந்தால் 'கம்'மென்ற மணமே வீசியது. நஞ்சுக்கு மணம் உண்டோ என்னவோ, அவனுக்குத் தெரியாது. ஆனால் அது நஞ்சு என்பதைப் பிறர் உணராதிருப்பதற்காகவே மணத்தை ஏற்றியிருக்கிறார் வைத்தியர் என்று தோன்றிற்று. வெளிப்பார்வைக்கு மணமாகவும் அழகாகவும் உள்ள பொருள்கள் உள்ளூற நஞ்சாகவும் இருக்கக் கூடும் என்று ஓர் ஞானோதயம் பிறந்தது அவனுக்கு. யார் கண்

ஏ.எஸ்.ராகவன்

டார்கள்? அழகுக் கவர்ச்சி கூட ஆபத்தாகலாம். மணத்தின் மயக்கம் கூடத் தீமை தரலாம்.

அது சரி. இதை எங்கே மறைவாக வைப்பது ?

அலமாரியின் கீழ் வரிசையில் நடுநாயகமாய் வீற்றிருந்த இங்கிப் புட்டிக்கு அருகில்—என்ன விந்தை! அந்த இங்கிப் புட்டியின் அளவும் நிறமும் அவன் கையிலிருந்த நஞ்சுக் குப்பியையே ஒத்திருந்தன! - வைத்தான். இரண்டுக்கும் வேற்றுமையே தெரியவில்லை. அவனே மறந்து போய்ப் பேனாவில் இங்கிக்குப் பதிலாக நஞ்சை ஊற்றிக் கொண்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இதை எண்ணியதும் சிரிப்பு வந்தது. அவ்வாறு நேர்ந்தால் எழுத்தில் விஷம் பரவி விடுமோ?

அத்தான் ஒரு தடவை யாரிடமோ, ''இதெல்லாம் என்ன இலக்கியங்களையா?... மனிதனின் கீழ்த்தர உணர்ச்சிகளைத் தூண்டி அவனுடைய மனத்தைக் கறைப்படுத்துகிற இவை அத்தனையும் விஷம்!'' என்று சொல்லிக் கொண்டிருந்ததை அவன் கேட்டிருக்கிறான். எனவே, இலக்கியத்திலும் விஷம் இருப்பதுண்டு என்பது தெளிவாயிற்று.

நாணு தலை நிமிர்ந்தபோது அறை வாயிலில் நிழல் கவிந்தது. பரபரப்புடன் எழுந்து, ''யாரது?'' என்று கேட்டான்.

பதில் வரவில்லை. கதவு மெல்லத் திறந்தது. அடுத்துச் சீதா எட்டிப் பார்த்தாள்.

''நீதானா?'' என்று கேட்டவாறே அலமாரியை அவசரமாக மூடிவிட்டுக் கதவருகில் வந்தான் அவன். ''என்ன?'' என்றான்.

''சீனு அண்ணா திருச்சிக்குப் புறப்பட்டு விட்டார்..... அதனால் சாயந்திரம் வீட்டுக்கு வந்தாலும் நீ பார்க்க முடியாது அவரை.''

சீனு தன்னை வரச் சொல்லியிருந்ததை மறந்தே போயிருந்தான் நாணு. வாஸ்தவத்தில் அவனுக்கு எதுவுமே நினைவில் இல்லை. அத்தை கிளப்பி விட்டிருக்கும் புயலில் அவன் நினைவிழந்து நிற்கிறான்!

''அதற்குள் புறப்பட்டுப் போய்விட்டானா? எப்போது திரும்பி வருவான்?'' என்று கேட்டான்.

''தெரியாது'' என்று சொல்லி விட்டு அவள் கமலாவின் அறையை நோக்கி வேகமாக நடக்கலானாள்.

அவள் பார்த்திருப்பாளோ! அதெப்படி? கதவை மூடி விட்டுத்தானே அவன் ஆராய்ச்சியை நடத்தினான்! ஆனால் கதவை மூடினானே தவிரத் தாளிடவில்லையே! இனி ஒரு போதும் தாளிடாமல் இத்தகைய ஆபத்தான காரியங்களில் இறங்கக் கூடாது என்று முடிவு செய்தான்.

ருக்கம்மா பின்கட்டில் இருந்தாள். வழக்கத்துக்கு மாறாகப் புராணம் படிக்காமல், தலையைச் சுற்றி நெற்றிப் பொட்டை அழுத்தித் துணியால் கட்டுப் போட்டுக் கொண்டு படுத்திருந்தாள்.

''ருக்கம்மா!'' என்றான்.

''என்னைத் தொந்தரவு செய்யாதே, போ.... தலை சுற்றுகிறது எனக்கு... குடலைப் புரட்டி எடுக்கிறது'' என்றாள் அவள்.

''ஏன், ருக்கம்மா?'' அனுதாபத்துடன் விசாரித்தான் அவன். அவளுடைய உதவியை நாடியல்லவா அவன் வந்திருக்கிறான் அங்கே! வைத்தியர் வீட்டிலிருந்து கொண்டுவந்ததை அத்தைக்குக் கொடுப்பதில் ருக்கம்மா தனக்கு நிச்சயம் உதவி புரிவாள் என்பதில் அவனுக்கு ஐயமில்லை.

''ஏன் என்று கேட்டால் எப்படிச் சொல்வது?....குடலில் விஷம் இருக்கிறதோ என்னவோ யார் கண்டார்கள்?.... வர வர எனக்கு எதுவுமே பிடிக்கவில்லை. யாரைக் கண்டாலும் பிடிக்கவில்லை'' என்றாள் ருக்கம்மா.

''என்னைக் கண்டால்கூடவா பிடிக்கவில்லை?'' என்று கேட்டான் நாணு.

''ஆமாம்..... நீ ரொம்பக் கெட்ட பையனாகப் போய் விட்டாய்.''

நாணு நடுக்கிட்டான்.

''அத்தையின் கண்ணாடியை நீ ஏன் உடைத்தாய்?''

''கதவு பட்டு உடைந்து விட்டது, ருக்கம்மா.''

''கதவு தானாகப்படுமா? நீ ஏன் அவனுடைய அறைக்குப் போனாய்?''

''ஜெகு வரச் சொன்னான்.''

''அவன் வரச் சொன்னானா? அவனோடு சேர்ந்தாயோ, நீ உருப்பட மாட்டாய்.... அவன் தறிதலை.... பேசறதெல்லாம் பொய். விஷம் வைத்துக் கொலை செய்யக்கூட அஞ்ச மாட்டான் அவன். அவனோடு சேர்ந்து கொண்டு விட்டாயா நீ?''

நடுங்கி விட்டான் நாணு.

''அத்தையின் மூக்குக் கண்ணாடியை மட்டும் உடைத்திருந்தால்கூடப் பாதகமில்லையடா.....அத்தானின் அறையில் போய்ப் பார். அங்கே நீ எதை உடைத்திருக்கிறாய் என்று தெரிந்து கொண்ட பிறகாவது நல்ல பிள்ளையாய் நடப்பாயோ மாட்டாயோ?'' என்றாள் ருக்கம்மா.


அவள் என்ன சொல்கிறாள் என்று நாணுவுக்குப் புரியவில்லை.

கூடத்துக்கு வந்தான். எதிர்ப்புறமிருந்த அவருடைய அறை திறந்துதான் இருந்தது. பெரும்பாலும் அவர் ஊரிலேயே இருப்பதில்லையாதலால் அது திறந்திருந்து அவன் பார்த்ததில்லை. விடிவிளக்காக எந்நேரமும் ஒரு மின்விளக்கு எரிவது ஜன்னல் திரைச் சீலை வழியே! தெரியும். அத்தானின் பெற்றோ

அதிசய மாப்பிள்ளை



இவர்தான்!



அசோக் லேலண்ட் காமெட்

ஏழரை டன் ஏற்றிச் செல்லும் லாரி; இருப்பினும் சிக்கன உழைப்பு

அதிக பாரம் ஏற்றிச் செல்ல உகந்தவை: ஆகையால் சிக்கன உழைப்பு. அசோக் லேலண்டு காமெட்டின் உறுப்புகள் உழைப்பிற்கும் உறுதிக்கும் உகந்தவை. நைட்ரேடிங் செய்த அதன் கிராங்க் ஷாப்டுகளுக்கு இரண்டு லட்சம் மைல் வரை ரீகிரைண்டிங் தேவையில்லை. (அவ்வப்போது சிலிண்டர் லைனர்களை உரைமாற்றினால் போதும்) அதன் ரியர் ஆக்ஸிலில் 8 டன் பளுவைத் தாங்கவல்லது. ஆகையால் கடினமான உழைப்புக்கு ஏற்றது. எனினும் சிக்கன உழைப்பு.

ஹயர் பர்ச்செஸ்: அசோக் லேலண்டு காமெட் லாரிகளுக்கு 37 ஆயிரம் ரூபாய் வரையிலும், மேற்படி பஸ்களுக்கு 47 ஆயிரம் ரூபாய் வரையிலும் ஹயர் பர்ச்செஸ் வசதிகள் உண்டு. உங்கள் வருமானத்திலிருந்து மாதந்தோறும் தவணைகளில் சுலபமாக செலுத்தலாம்.

TVS

டி. வி. சுந்தரம் அய்யங்கார் & சன்ஸ் பிரைவேட் லிமிடெட், மதுரை-திருச்சி-திருநெல்வேலி-புதுக்கோட்டை-சேலம்-கோயமுத்தூர்-திருவனந்தபுரம். சப் டீலர்கள்: P. N. கிருஷ்ண அய்யர் & சன்ஸ் பிரைவேட் லிமிடெட், திருச்சூர். C. C. ஆட்டோமொபைல்ஸ் லிமிடெட், கன்னிக்கோட்டை. தி கொயிலோன் ஆட்டோமொபைல்ஸ், கொல்லம். மனோரஞ்சன் கங்குலி & சன்ஸ் பிரைவேட் லிமிடெட், புதுச்சேரி. **சுந்தரம் மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட்,** மதராஸ்-பங்களூர். சப் டீலர்கள்: மாணிக்பேக் ஆட்டோமொபைல்ஸ், பெல்காம். ஆஸ்குவித்ஸ் ஆட்டோமொபைல்ஸ், பெல்லாரி. P. V. பாய் & கம்பெனி மங்களூர் - மெர்க்காரா.

JWT TVS-3386

சின் திருவுருவத்தின் முன்னல் அந்த விளக்கு எரியும்.

அறை வாயிலிலேயே நின்ருன் அவன். உள்ளே நுழையப் பயமாக இருந்தது. கோயி லின் கர்ப்பக் கிருகத்தில் நிற்பது போல் ஓர் உணர்வு எழுந்தது. சாம்பிராணியும் சூடமும் மணக்க வேண்டிய இடம் அது. ஆனல் அத்தை கற்பித்த அவதூறின் நெடிதான் அங்கே வீசுவது போலிருந்தது.

''வாயேன்..... ஏன், அங்கேயே நிற் கிருய்?'' அழைப்பு வந்தது உட்புறமிருந்து. ஆனல் குரலில் ஏன் அத்தனை நடுக்கம், அத்தனை வேதனை, அத்தனை பேதம் !

நாணு அவர் முகத்தை நிமிர்ந்து பார்த் தான். பார்த்தவன் திடுக்கிட்டான். அவ ருடைய விழிகளின் ஓரத்தில் கண்ணீர் துளித் திருந்தது ! அந்தக் காட்சி அவன் நெஞ்சை உடைத்தே விட்டது. அப்போதுதான் அவ னுக்கும் புரிந்தது. ருக்கம்மா குறிப்பிட்ட பொருள், அவனல் உடைக்கப்பட்ட அபூர்வ மான செல்வம், அவருடைய நெஞ்சம் அல் லவா ? ஐயோ, அதையா அவன் உடைத்து விட்டான் ?

''அத்தையின் வழிக்குப் போகாதே என்று உன்னை எச்சரித்தேனே, அதன்படி நீ நடக்க வில்லையல்லவா?'' என்ருர் அத்தான்.

நாணு குனிந்த தலை நிமிராமல் நின்ருன்.

''உன்னிடம் நிறைய நம்பிக்கை வைத் திருக்கிறேன், நாணு.... அதெல்லாம் வீணுகி விடுமோ என்று பயமாக இருக்கிறது'' என்ருர் அவர், தொடர்ந்து.

அவர் மடியில் விழுந்து கதற வேண்டும் போலிருந்தது அவனுக்கு. அந்த அன்புள்ளம் கலங்குவதை அவனல் தாங்க முடியவில்லை.

''கல்யாணி சொல்வதையெல்லாம் பொருட்படுத்திக் கொண்டிருந்தேனுனல், எனக்குப் பைத்தியம் பிடித்திருக்கும் இந் நேரம்..... அவளுடைய சுபாவம் அது என்று விலகிப் போக வேண்டும்....'' அவர் சிரித் தார். சிரிப்பா அது! ஒரு நெடிய தவத்தின் தோல்வியையே வெற்றியாக்க முயலும் கழிவிரக்க முறுவல் அது! ''அவள் ஓர் அசடு.... பாவம், என் நன்மையைத்தான் சிந்திக்கத் தெரியாமல் தன்போக்கில் சிந்தித்து ஏதேதோ சொல்கிருள். உலகத் தில் யாரும் நமக்குப் பகையில்லை.... இதை யெல்லாம் ஏன் சொல்கிறேன், தெரியுமா ? உனக்கு எதிலும் அவசரமும் வேகமும் இருக் கின்றன...அதை நல்ல வழியில் உபயோகிக்கா விட்டால் கஷ்டப்படுவாய்.''

அவன் அழுதே விட்டான். தன்பொருட்டு இவ்வளவு பேசும் அந்த உத்தம உள்ளத்தை உடைத்துவிட்ட பொருமல் விம்மிற்று.

''அழாதே..... சின்னப் பையன்தானே நீ! உலகம் இன்னதென்று புரிகிறுற் போலவும் ஆனல் முழுதாகப் புரியாமலும் இருக்கிற வயசு உனக்கு..... பெண்ணுகப் பிறந்திருந் தால் இந்நேரம் ஒருவனுக்கு வாழ்க்கைப் படத் தயாராக வேண்டியிருக்கும். சுந்தரி ஆண் குழந்தைக்குத் தவமிருந்தாள்; நீ பிறந் தாய். அவளுக்காகத்தான் இவ்வளவும் சொன்னேன்.... இனி நீ போகலாம்.''

அவன் போகாமல் சற்று நின்ருன். ஆனல் அவன் போய் விட்டதாகவே எண்ணிக் கொண்டு அவர் வேறு காரியத்தில் ஈடுபட்டு விடவே வெளியே வந்தான். திடீரென்று வானமே வெளிர் விட்டது போலிருந்தது. மனத்தில் ஒரு தெளிவு பிறந்தாற்போலிருந் தது. அம்மா தவமிருந்தா அவனைப் பெற்ருள்! பெண் குழந்தையாகப் பிறந்திருந்தால், அத் தான் சொல்வது போல், இந்நேரம் திருமணப் பேச்சு அடிபட்டுக் கொண்டிருக் கும். எப்படித்தான் பதினறு வயதில் புக்ககத் துக்குப் போக முடிகிறதோ பெண்களால் ? முற்றும் புதிய சூழ்நிலைக்குத் தங்களை ஆட் படுத்திக் கொள்ளும் அதிசய சக்தி பெண் களுக்கு இருக்கிறது !

மாடிப்படியில் ஏறும்போது எதிரே ருக்கம்மா வந்தாள். அவள் கையில் எதையோ மறைத்துக் கொண்டிருந்தாள். தலைக்கட்டு நீங்கவில்லை.

கமலாவின் அறையில் பாட்டு தலை நீட்டிற்று.

ஜெகுவின் அறையில் பாட்டு காதைத் திருகிற்று.

படுக்கையில் விழுந்தான் நாணு. என் னவோ உரக்க அழ வேண்டும் போலிருந் தது. அம்மாவின் நினைவு பிடிட்டுக் கொண்டு வந்து விட்டது. அவளுடைய அன்பின் சுமை, அவனை அடைகாத்தாற்போல், இத்தனை கால மும் கணகணப்புத் தந்து கொண்டிருந்ததை யும் இப்போது குளிர் வாட்டுவதையும்உணர்ந் தான். அந்த அன்பைவிட அத்தானின் அன்பு தான் அவனுக்குச் சுமையாக இருக்கும் போலிருந்தது. அவருடன் அதிகம் பழகா திருந்தும் அவர்மீது எல்லையற்ற மதிப்பும் பயமும் எழுகின்றனவே, ஏன்?

தன் மீதே ஓர் அருவருப்பு மெல்ல மெல்லப் படர்வதை நாணு உணர்ந்தான். அத்தா னுடைய பெரிய உள்ளம் எங்கே, அவ னுடைய சிறிய மனசு எங்கே? விஷப் புட்டியை எடுத்து வந்து மறைத்து வைத் திருக்கும் புன்மை அவனுடையது. அவரோ சிவபிரான் போலப் பிறருக்காக விஷத்தைக் கழுத்திலே தேக்கி வைக்கும் பண்பு படைத்தவர்.

முதலில் அந்தப் புட்டியை எடுத்துத் தலை யைச் சுற்றி எறிய வேண்டும். ஆம், அது அவ னுடைய உள்ளத்துக்கே கறை தரும் அற்பப் பொருள். அதையா அவன் எடுத்து வந்தான்!

நாணு எழுந்து அலமாரிப் பக்கம் ஓடினன். படீரென்று திறந்தான். திறந்தவன் திடுக் கிட்டான்! அங்கே அது இருந்த இடம் காலி யாக இருந்தது !

உடலெல்லாம் பதறி விட்டது அவனுக்கு. எங்கே மறைந்து விட்டது அதற்குள்? யார் எடுத்திருப்பார்கள்? எதற்காக? அவன் அதை வைத்தது யாருக்குமே தெரியாதே !

மின்வெட்டுப் போல் ஓர் எண்ணம் ஓடிற்று நெஞ்சில். யாருக்கும் தெரியாமல் அதை மறைவாக வைத்த நேரத்தில் கதவரு கில் நின்றவள் சீதா ! அவள்தான் எடுத் திருக்க வேண்டும்.

கமலாவின் அறைக்கு ஓடினன். அங்கு நல்ல வேளையாகச் சீதா மட்டுமே இருந்தாள்.

அவனுடைய படபடப்பையும் வேகத்தையும் கண்ட அவள் வியப்புடன், ''என்ன நடந்தது?.... ஏன் ஓடி வருகிறாய்?'' என்று கேட்டாள்.

''சீதா...சீதா...'' அவன் திணறினான்.

''என்ன ?'' நிதானமாக, கவலை தொனிக்க, அவள் கேட்டாள்.

''இங்கிப் புட்டிக்குப் பக்கத்தில் ஒரு மருந்து பாட்டில் வைத்திருந்தேனே, அதை நீ எடுத்தாயா ?''

''இல்லையே.... நான் அந்தப் பக்கமே போக வில்லையே !''

''பின்னே யார் எடுத்திருப்பார்கள்?''

''அதென்னவோ எனக்குத் தெரியாது.''

நாணா அவளைக் கூர்ந்து பார்த்தான். அவள்தான் எடுத்திருக்க வேண்டும். வேறு யாருக்கு அது அங்கிருப்பது தெரியும்? எடுத்து வந்து கமலாவிடம் கொடுத்திருக்கிறாள். கமலா உடனே கீழே போய் அத்தானிடம் புகார் செய்கிறாள் போலும்! அதனால்தான் அவளைக் காணவில்லை.

'' கமலா எங்கே ?''

''கீழே போனாள்.... அப்பாவைப் பார்க்க வேண்டும், முக்கியமான காரியம் என்று அவள் சொன்னாள்.''

நாணாவின் விழிகள் சிவந்து விட்டன. ''சீதா, நீ உண்மையைச் சொல்ல மாட்டாய்?.... அந்த விஷ பாட்டிலை நீதானே எடுத்தாய்?'' என்று சீறினான்.

''விஷ பாட்டிலா?'' சீதாவின் விழிகள் நிமிர்ந்தன, பருத்தன, புடைத்தன.

''ஆமாம்.... அதை அலமாரியில் வைக்கிற போது நீதான் பார்த்தாய்.''

''நான் பார்க்க வில்லையே!''

''பொய் சொல்கிறாய்.''

''அது எனக்குப் பழக்கமில்லை.''

''....எனக்குப் பழக்கம் என்கிறாயா?''

''இருக்கலாம்.''

''சீதா !''

''இதோ பார், உன் பேச்சும் காரியமும் எனக்குப் பிடிக்கவில்லை..... விஷ பாட்டிலை நீ எதுக்காக மறைக்க வேண்டும்? அது போகட்டும். அதை நான் பார்த்ததாகச் சொல்கிறாயே, ஏன்? என் ஆயுளில் விஷத்தை நான் திரும்பிக்கூடப் பார்க்கமாட்டேன்.... இப்படி விஷமெல்லாம் தயார் செய்கிறவன் பொய் சொல்பவனாக ஏன் இருக்கக் கூடாது?''

நிதானமாக, அழுத்தமாக அவள் இவ்வாறு கேட்டதும் நாணா பல்லைக் கடித்தான். அவளைக் கழுத்தை நெறுக்கி உண்மையைக் கக்கச் செய்ய வேண்டும் போலிருந்தது.

''போகட்டும்.... விஷ பாட்டிலைக் காணோமாக்கும்! அது எங்கே போய் விட்டது என்று தெரிய வேண்டுமா?.... உட்கார், சொல்கிறேன். உன் விஷ பாட்டில் கமலாவிடம் இருக்கிறது'' என்றாள் சீதா. அதே நிதானம், அதே அழுத்தம் !

நாணா கையை உதறினான்.



மனைவி: அப்பா — அம்மா செய்கிற தவறுகளுக்கெல்லாம் கடைசியாகக் குழந்தைகளின் பேரில் தான் விடியும். ஞாபகம் இருக்கட்டும்.

கணவன்: ஏண்டி குழந்தையை வைச்சுண்டு தாறுமாறாகப் பேசறே?



மனைவி: உங்கப்பா என்ன சொல்கிறார், பார்த்தியாடா கண்ணு!

சிறுவன்: அப்படி இல்லே, அம்மா! சில சமயம் தாத்தா பாட்டி என் வீட்டுக் கணக்கைச் செய்து தந்து அது என்பேரில் வெடிஞ்சிருக்கு!

"இந்நேரம் அது அவள் அப்பாவின் கைக்குப் போயிருக்கும்...."

"சீதா!" நாணு அலறியே விட்டான்.

"பேனுவுக்கு இங்கி போடுவதற்காக உன் அறைக்குப் போனான் கமலா.... அங்கே இந்தப் பாட்டில் கிடைத்ததென்று பதறிக் கொண்டு வந்தாள்....." என்று தொடர்ந்த சீதா அவனைக் கூர்ந்து பார்த்தவாறே, "அது சரி.....அதை எதற்காக வைத்திருக்கிறாய், நீ?" என்று கேட்டாள்.

நாணு அவளுக்குப் பதில் சொல்லத் தயாராயில்லை. எப்படியாவது அத்தானின் கைக்குப் போகுமுன் அந்தக் குப்பியைக் கைப் பற்றிவிட வேண்டுமென்கிற ஒரே குறிக்கோள் அசுர வேகத்தில் அவனை இயக்கியது. சற்று முன்தான் கண்ணீர் உகுத்தார் அவர் அவனுக்காக! இந்த நஞ்சு அவர் முன் போனால் ரத்தம்தான் வடியும் அவர் கண்ணில்! அவருக்கு அவன் செய்கிற கைம்மாறு இதுதானா?

"நில், நாணு......" அம்பு பாய்ந்தாற் போல் கட்டளை பிறந்தது.

நாணு நின்று குரல் வந்த திசையைப் பார்த்தான்.

கமலா நின்றாள் எதிரே!

"இப்போது அப்பாவின் அறைக்கு நீ போக வேண்டாம்......" என்றாள் அவள்.

"அவரிடம் கொடுத்து விட்டாயா?" என்று கேட்டான் நாணு.

"உம்...."

"கமலா!"

"உஷ்.... பேசாமல் அறைக்குள் வா. அங்கே போலீஸ் இன்ஸ்பெக்டர் வந்திருக்கிறார்...."

ரத்தமே உறைந்து விட்டது நாணுவுக்கு. அதற்குள் போலீசுக்கும் தகவல் சென்று அவர்களும் வந்து விட்டார்களா? இனி அவன் சிறைவாசம் செய்ய நேர்ந்தாலும் நேரலாம். பிறரைக் கொலை செய்ய முனைவது சாமானியக் குற்றம் அல்லவே! அவன் இந்த விசாரணையில் தப்பவே முடியாது. உண்மையில் விசாரணை எதுவுமின்றியே அவன் தன்னைத் தானே காட்டிக் கொடுத்துக் கொள்வான் போலிருந்தது. அவ்வாறு சிறைவாசம் ஏற்பட்டால் அவனுடைய அம்மாவின் ஆன்மா என்ன பாடுபடும்!

சுரீரென்று முள்தைத்தாற்போல் வைத்தியரின் வீட்டில் காதில் விழுந்த அந்தச் செய்தி—அவனுடைய தந்தையின் சிறைவாசம் பற்றி அத்தை இழிவாகக் குறிப்பிட்டது—நெஞ்சில் தைத்தது. அவள் சொன்னது உண்மையானால் அந்தப் பரம்பரைப் பெருமை அவனுக்கும் ஏற்பட்டு விடுமோ!

கமலா அவனுடைய கையைப் பற்றி அறைக்குள் இழுத்துக் கொண்டு போய் அவனை நாற்காலியில் அமர்த்தினாள். முகமெல்லாம் வியர்வை துளிக்க அவன் தடுமாறுவதைக் கண்டு மின்விசிறியைப் பொருத்தினாள். நெஞ்சுலர்ந்து அவன் வாடுவதைப் புரிந்து கொண்டவள் போல் ஒரு தம்ளர் தண்ணீரும் கொடுத்தாள்.

இதே அப்பாவின் கையில் விஷ பாட்டிலைக் கொடுத்து அவனைக் குற்றவாளியாக ஆக்கிவிட்டு, மேலே அவனுக்கு ராஜோபசாரம் செய்யும் அவளுடைய போக்கைக் கண்டு நாணு மிரண்டே விட்டான். முன்னர் அவனை அநாதை என்று கூப்பிட்டு விட்டதற்காக அவனிடம் மன்னிப்புக் கேட்டதுண்டு கமலா. அந்த உள மாற்றத்திலாவது ஓரளவு பொருள் இருந்ததென்று சொல்லலாம். இப்போது அவள் பூணும் வேடம் அல்லது நடிக்கும் நாடகம் சற்றும் பொருத்தமுள்ளதாகவே தோன்றவில்லை!

"நாணு! நீயா இப்படிச் செய்தாய்? விஷபாட்டில் எதற்கு உனக்கு?" என்று கேட்டாள் அவள்.

அவன் பதில் சொல்லவில்லை. அவளையே முறைத்துப் பார்த்தான்.

"அத்தையை மனசில் வைத்துக் கொண்டு தானே அதை நீ மறைத்து வைத்திருக்கிறாய்?"

கேள்வி அவன் நெஞ்சில் கட்டது. அவளுக்கு அந்த விவரம் எவ்வாறு தெரிந்தது?

"சொல்லேன்.... உன் மீது கோபித்துக் கொள்வேன் என்று நினைக்கிறாயா?"

இதற்கும் அவன் பதில் பேசவில்லை. எதுவும் சொல்ல அவன் விரும்பவில்லை.... அத்தானின் கையிலுள்ள அந்த நஞ்சுக் குப்பியும் அவர் எதிரே வீற்றிருக்கும் போலீஸ் இன்ஸ்பெக்டரும் மனக் கண்முன் நின்றார்கள். அந்தக் காட்சிக்குப் பின்னணியில் இரும்புக் கிராதியும் முரட்டுக் கற்களால் கட்டப்பட்ட சிறைக்கூடமும் தெரிந்தன. அங்கே பல கைதிகள் அவனைக் கண்டு நகையொலி எழுப்பி வரவேற்கிறாற் போலிருந்தது. அந்தக் கைதிகளிடையே ஒருவர் அவனுக்காகக் கண்ணீர் விடுகிறாற் போலவும், 'மகனே! நீயுமா

இங்கே வந்தாய்?' என்று கேட்பது போலவும் தெளிவாகத் தெரிந்தன.

நாணு முகத்தை மூடிக் கொண்டான்.

''அழாதே.... நான் அப்பாவிடம் சொல்கிறேன்..... அழாதே....'' கமலா அவனுக்கு ஆறுதலாகப் பேசினாள். பிறகு சீதாவைப் பார்த்து, ''இவன் இங்கேயே இருக்கட்டும். கீழே போய் விட்டு வந்து விடுகிறேன்... போலீசுக்குப் போகாமல் நிறுத்தி விடலாம் விஷயத்தை'' என்றவாறே வெளியேறினாள்.

''இதோ பார்..... ஆண்கள் அழக் கூடாது..... தலைநிமிர்ந்து என்னைப் பார்த்து என்ன நடந்ததென்பதைச் சொன்னால் என் அப்பாவிடம் சொல்கிறேன்'' என்றாள் சீதா.

நாணு சிரித்தான். அழுகை மாறிச் சிரிப்புத் தான் வந்தது ! துயரச் சிரிப்பு!

''அப்பா பெரிய வக்கீல்.... தெரியுமல்லவா ?'' என்றாள் அவள், அவனுடைய சிரிப்பைத் தவறாகப் புரிந்து கொண்டு.

''தெரியும், சீதா...ஆனால்... ஆனால்...'' அவன் மீண்டும் அழுதான். நெஞ்சு பிளந்து விட்டாற்போல் இருந்தது. பிளந்த பகுதியில் ஒருபுறம் அம்மாவும் ஒருபுறம் அத்தானும் அவனுக்காக அழுகிறாற் போலவும் அடுத்த பிளவில் தந்தை கைநீட்டி அவனை அழைக்கிறாற்போலவும் தோன்றிற்று. பயங்கரமான இத்தகைய கற்பனைகள் தன் மனத்தில் எவ்வாறு எழுந்தனவென்று அவனுக்கே புரியவில்லை. ''சீதா, நான் தப்புச் செய்யவில்லை'' என்றான்.

''அது தெரியும் எனக்கு..... எனக்கு மட்டுமில்லை, கமலாவுக்கும் தெரியும்''— என்றாள் சீதா.

நாணு வியப்புடன் அவளைப் பார்த்தான்.

''தெரிந்தும் அப்பாவிடம் ஏன் அதைக் கமலா கொடுத்தாள் என்றுதானே யோசிக்கிறாய்....?''

அவன் தலை தானாக ஆடியது.

''அவரிடம் கொடுக்காமல் வேறு யாரிடம் கொடுப்பது, சொல்லேன்..... விஷயம் அவருக்கு அவசியம் தெரிந்திருக்க வேண்டுமல்லவா ?..... இந்த வீட்டில் இந்த நிலைமை இப்படியே நீடிக்கக் கூடாது..... அதற்கு ஒரே வழி.... அவரிடம் இதைச் சொல்லிவிட வேண்டியதுதான் என்று நான்தான் கமலாவுக்குச் சொன்னேன்.....''

''சீதா!''

''பயப்பட வேண்டாம்.... தலைக்கு மேல் போனால் என் அப்பாவிடம் சொல்லி....''

அவள் முடிப்பதற்குள் அறை வாயிலில் அத்தானே வந்து நின்று விட்டார். அவருடைய கையில் அந்தக் குப்பி நின்றது. அருகில் கமலா நின்றாள் !

''நாணு !''

அவன் தலை நிமிரவில்லை. குனிந்தது. அவரை எவ்வாறு அவன் எதிர்நோக்குவான்?

''இது உன் அறையில் இருந்ததாகக் கமலா கொண்டு வந்து என்னிடம் கொடுத்தாள்......'' அவர் குப்பியை உயர்த்திக் காட்டினார். பிறகு கேட்டார். ''இது ஏது உனக்கு?.... இதை எதற்காக நீ எடுத்து வந்தாய் ?''

அவன் பதில் சொல்ல வாய் திறந்தான். உதடுகள் பிளந்தனவே தவிர வார்த்தைகள் வரவில்லை.

''அவன் எடுத்து வரவில்லை, மாமா..... அதைக் கொண்டு வந்தவன் நான்தான்'' என்று ஒரு குரல் எழுந்தது பின்புறமிருந்து.

நாணு திகைத்து விட்டான். அவன் மட்டுமா, கமலா, சீதா, அத்தான், ஏன் அத்தைகூடத் திகைத்து விட்டாள். அவள் இந்த அபூர்வமான திருப்பம் இறைவனுடைய திருவருளால் வாய்த்திருக்கிறதே என்கிற திருப்தியோடு மாடிக்கு வந்திருந்தாள். கமலா வந்தது, போனது, மறுபடியும் வந்தது போனது எல்லாம் அவளுக்குத் தெரியும். பதற்றத்தில் கமலா உரக்கவே தன் தந்தையிடம் புகார் செய்ததால் அத்தையின் செவிகளில் முழு விவரமும் விழுந்து விட்டன.

''ஜெகு, என்னடா உளறுகிறாய்?'' என்றாள் அவள் கோபத்துடன்.

''நான் உளரவில்லை, அம்மா... அந்த விஷ பாட்டிலை நான்தான் கொண்டு வந்தேன். உன் கண்ணில் படாதிருப்பதற்காக அதை நாணுவின் அறையில் வைத்திருந்தேன்...'' என்று விளக்கம் கூறினான் ஜெகு.

நாணுவுக்கு ஒன்றும் புரியவில்லை. ஜெகு தன் மீது குற்றத்தைச் சுமத்திக் கொள்வது ஏன் என்று அவனுக்கு விளங்கவில்லை. இப்படியோர் ஆச்சரியமான விடுதலை தனக்குக் கிட்டிற்றே என்கிற நிம்மதியையும் மீறி அந்த ஒல்லியான காதல் மன்னன் ஓர் ஒப்பற்ற தியாகியாகப் பழியை ஏற்ற வியப்பே அவனை ஆட்கொண்டது. (தொடரும்)



''என்ன சார் இது அக்கிரமம்? இருபது வருஷமா இரண்டு பேரும் சேர்ந்து ஒத்துமையா வியாபாரம் செய்து வந்தார்கள்..., இப்ப சிண்டைப் பிடித்துக் கொண்டு விட்டார்களே!

''என்ன பண்றது. இப்பத்தானே வியாபாரத்திலே லாபம் வந்திருக்கிறது !''

கால்கேட்டின் மூலம் நாள் முழுவதும் வாய் துர்நாற்றத்தை அகற்றி பற்கள் சொத்தையாவதையும் தடுங்கள்!



ஏனெனில் ஒரே தேய்ப்பில் கால்கேட் டெண்டல் கிரீம், துர்நாற்றத்தையும், சொத்தையையும் உண்டாக்கும் கிருமிகளில் 85 சதவிகிதத்தை ஒழித்துவிடுகிறது.

கால்கேட், 10ல் 7 சந்தர்ப்பங்களில் உடனடியாக வாய் துர்நாற்றத்தை அகற்றுகிறது என்பதையும், உணவு உட்கொண்டவுடன் கால்கேட்டினால் பற்களைத் துலக்கும் முறையால், இது வரை பற்பசை வரலாற்றிலேயே கண்டிராத பெருமளவில் ஏராளமானவர்களுக்குச் சொத்தை தடுக்கப்படுகிறது என்பதையும் விஞ்ஞான ஆராய்ச்சிகள் நிரூபித்துள்ளன. இந்த சாதனை கால்கேட் ஒன்றுக்குத்தான் உண்டு.

கால்கேட்டின் சிறந்திருக்கும் நூதன நறுமணத்திற்காக, குழந்தைகள் அதனாலேயேப் பல் துலக்க விரும்புகிறார்கள்.

பரிசுத்தத்திற்கும், வாயில் நறுமணம் கமழவும், வெண்மையான பற்களைப் பெறவும் வழக்கமாக கால்கேட்டினால் பல் துலக்குங்கள்.


நீங்கள் பற்பொடியை விரும்பினால், இந்தப் பலன்கள் அனைத்தையும் கால்கேட் டூத் பவுடர் மூலம் அடையலாம். ஒரு டப்பி பலமாதங்களுக்கு வரும்.






... உலகிலேயே பெரும்பாலானவர்கள் மற்றெல்லாப் பற்பசைகளையும் விட, கால்கேட் டெண்டல் கிரீமையே வாங்குகிறார்கள்.

TCG. 36-TAM.


அனாஸின்
சிறந்தது ஏனெனில் அது
4 வழிகளில் வேலை செய்கிறது
தலைவலியிலிருந்து விரைவாக விடுதலையளிக்கிறது
ஜலதோஷத்தின்போது தோன்றும் ஜுரத்தைக் குறைக்கிறது
புளூவைத் தடுக்க உதவுகிறது
தசைவலியினின்று நிவாரணமளிக்கிறது
அனாஸின் டாக்டரின்
மருத்துவயோசனைப்படி
தயாரிக்கப்பட்டதைப்
போன்ற பத்திரமான
மருந்துகளின் சேர்க்கையாகும்
ANACIN
ANACIN

சேவைக்கு ஒரு சகோதரி



மோனிகா ஃபெல்டன் - அநுத்தமா

விதவையானவர்களில் வயது வந்தவர்களுக்கு — அவர்கள் எவ்வளவு சிறியவர்களாயிருப்பினும் சரி—இழைக்கப்படும் அலங்கோலங்களுக்கு அவள் உட்பட வேண்டிய அவசியம் இல்லை. அவள் விரும்பினால் இவற்றையெல்லாம் தவிர்க்க முடியும் என்று சென்னையிலிருந்து வந்திருந்த மாமா கூறினார்.

அவள் மட்டும் சம்மதித்தால் பத்து நாட்களுக்குள்ளேயே தம்முடன் அவளைச் சென்னைக்கு அழைத்துச் செல்வதாகக் கூறினார். அங்கு மிகவும் அழகான பெண்மணி ஒருத்தி, இவளைப் போன்ற கைம்பெண்ணான பல கன்னியரைப் பராமரித்துக் கொண்டிருக்கிறாள். அவர்களுடன் அந்தப் பெரிய வீட்டில் அவளும் சந்தோஷமாக இருக்கலாம். பள்ளிக்கூடம் செல்லலாம். படித்துப் பட்டம் பெற்றுப் புற உலகில் தைரியமாக அடியெடுத்து வைக்கலாம். பணம் சம்பாதிக்கலாம், தன் இஷ்டப்படியெல்லாம் வாழ்க்கை நடத்தலாம்.

ருக்மிணி அதுவரையில் பள்ளிக்கூடம் சென்றதே இல்லை. அவள் பெற்றோருக்கு ஒரே குழந்தை அவள். இப்போது இடைரென்று நாள் முழுவதும் மற்றப் பெண்களுடன் சேர்ந்து இருந்து படிக்கவும் எழுதவும் கணக்குப் போடவும் கற்பது என்பதும் அவளுக்கு மிகவும் பயமாக இருந்தது.

''என்னால்; முடியாது. நான் மாட்டேன்'' என்றான் அவள்.

''நான் சொல்வதைத்தான் கொஞ்சம் கேளேன்'' என்றார் மாமா. பள்ளிக்கூடத்தில் சேர்வதால் ஏற்படக் கூடிய நன்மைகளை நயமாக விரிவாக எடுத்துக் கூறினார்.

பிறகு, ''சரி, இப்போது நீ கொஞ்ச நேரம் தூங்கு. எழுந்தவுடன் நான் சொன்னதைப் பற்றி யோசித்துப் பார். இப்போதைக்கு நீ யாருடனும் பேசாமல் இருப்பது நல்லது. ஆகையால், நான் இந்தக் கதவை வெளிப்புறம் பூட்டிக் கொண்டு போகிறேன். சீக்கிரம் திரும்பி வருவேன்'' என்றார்.

ஒரு வாரத்துக்கு மேல் அவளை அவர் பூட்டியே வைத்திருந்தார். அந்தச் சமயத்தில் அவள் மாமா அவள் தாயாரிடமும் அத்தையிடமும் தம் இஷ்டத்தைக் கூறிய போது அவர்கள் என்ன பதில் கூறினார்கள் என்று அவளுக்குத் தெரியாது. என்ன சொல்லியிருப்பார்கள் என்று நெடுநாட்களுக்குப் பிறகு அவள் ஒருவாறு ஊகித்துக் கொண்டாள். அவரேதான் மாடிக்குச் சாப்பாடு கொண்டு வந்து அவளுக்குத் தருவார். தாம் சொல்வதைச் சரியென்று அவள் ஒப்புக் கொள்ளும்படி செய்ய வெகு நேரம் பாடுபடுவார்.

கடைசியில் அவள் சென்னைக்குப் போக இணங்கிய போது அவள் தகப்பனார் திருவனந்தபுரத்திலிருந்து இன்னும் திரும்பி வந்திருக்கவில்லை. அங்கு ஈமச் சடங்குகள் இன்னும் முடியவில்லை. 'ஹாஸ்டலில் நான் சந்தோஷமாக இருப்பேனா? உண்மையாகவே பள்ளியில் சேர்ந்து படிக்க நான் ஆசைப்படுகிறேனா' என்றெல்லாம் இன்னமும் அவள் சந்தேகப்படவே செய்தாள். ஆகையால் அவளுடைய மாமா அவளை மிஷனரிப் பெண்மணிகள் சிலருடன் தங்கியிருக்கச் செய்தார். அவர்கள்தான் அவளுக்கு அவள் மாமா சொல்வது சரி என்று புரிய வைத்தார்கள்.

ஹாஸ்டலில் அவள் சேர்ந்த பிறகு மிஸஸ் டிரைஸ்டேல் நினைத்தது போல் அவளுக்குப் படிப்பே வராது என்று சகோதரி

கருதவில்லை. அவள் தானாகவே தன் அனுபவத்தினாலேயே கஷ்டப்பட்டுக் கற்றுக் கொள்ள வேண்டியதுதான் என்று சகோதரி தீர்மானித்தாள்.

இஸ்ஹாவுஸிலுள்ள மற்றப் பெண்களுடன் ருக்மிணி சதா லொட லொட வென்று பேசுவாள். "இப்போதும் அந்த ஒரு விஷயத்தில் நான் மாறவில்லை போலும். எனக்குப் பேசுவது என்றால் மிகவும் பிரியம். அங்கு சென்ற புதிதில் எல்லோரும் எப்பொழுதும் ஆங்கிலத்திலேயேதான் பேச வேண்டும் என்றிருந்த சட்டத்தை நான் மீறிக் கொண்டே யிருப்பேன். எனக்கு ஆங்கிலம் ஒரு வார்த்தைகூடத் தெரியாது. ஆனால் கம்மா இருக்கவும் என்னால் முடியாது. வாய்க்கு வந்ததை யெல்லாம் உளறிக் கொட்டிக் கொண்டே இருப்பேன். அதனால் என் கைச் செலவுக்கென்று இருந்த பணம் எல்லாம் அபராதம் செலுத்துவதிலேயே செலவழிந்து விடும்! இந்த நிலைமையில் மிஸஸ் டிரைஸ்டேல் என்னை ஓர் அரைப் பைத்தியம் என்று நினைத்ததில் ஒன்றும் விசித்திரமில்லை" என்றாள் ருக்மிணி இப்போது.

உண்மையில் ருக்மிணி வெகு சீக்கிரம் படிப்புக் கற்றுக் கொண்டு திருவல்லிக்கேணி பள்ளியிலும் சேர்ந்தாள். முதல் மூன்று வருஷங்களுக்கு அவள் கோடை விடுமுறைக்குக் கூடத் தன் வீட்டுக்குச் செல்லவில்லை. அவள் மட்டும் அப்படிப் போயிருந்தாளானால் மீண்டும் சென்னைக்கு வர அனுமதிக்கப்பட்டிருக்க மாட்டாள். ருக்மிணியின் மாமா அக்குடும்பத்தினருக்கு வேண்டாதவராகி விட்டார். ருக்மிணியின் பெற்றோரை அவர் காணச் சென்ற போது அவரை வெளித் திண்ணையிலேயே நிறுத்தி வைத்து உள்ளே வரக் கூடாது என்றும் கூறி விட்டனர். ருக்மிணி இப்போது என்னிடம் தொடர்ந்து சொன்னாள்: "என் தாத்தாவுக்கு இந்த அவமானத்தைத் தாங்க முடியவில்லையாம். அதனால் அவர் தம் குடும்பத்தினரின் பாவங்களைக் கழுவுவதற்குக் குற்றாலத்துக்குச் சென்று அங்கேயே பல வருஷ காலம் தங்கி விட்டார். அவர் வீட்டுக்குத் திரும்பி வருவதற்குள் நான் நன்றாக வளர்ந்து, எதிர் காலத்தில் நான் என்ன தொழிலை மேற் கொள்ளப் போகிறேன் என்பதைப் பற்றிச் சிந்திக்க ஆரம்பித்து விட்டேன்."

இஸ்ஹாவுஸில் இதே சமயத்தில் சேர்க்கப் பட்ட மற்றொரு பெண் மீனும்பாள். மதுரை அருகிலுள்ள கிராமம் ஒன்றிலிருந்து வந்த மீனும்பாள் ருக்மிணியைப் போலவே பெற்றோருக்கு ஒரே பெண். அவள் தாயார் அவள் சிறு குழந்தையாக இருக்கும்போதே இறந்து விட்டாள். அவளுடைய தகப்பனாரும் பாட்டியும்தான் அவளை வளர்த்தார்கள். இருவரும் அவள் மீது உயிரையே வைத்திருந்தனர். அவளுடைய சந்தோஷமே அவர்களது குறிக்கோள். அவள் மிகவும் நல்ல பெண். நுட்பமான புத்தியுடையவள். பதிமூன்று வயது ஆகும் வரை அவள் துக்கமென்பதையே அறியாதவள்.

அப்போதுதான் அவள் கணவன் இறந்து விட்டான். மீனும்பாளுக்குக் கல்யாணமாகிச் சுமார் இரண்டு வருஷங்கள் ஆகியிருந்தன.

மீனும்பாளை நான் சந்தித்தது தற்செயலாகத்தான். ஒரு நாள் நான் சகோதரியின் வீட்டுக்குச் சென்ற போது சொர்ணம்பாள் வராந்தாவில் அமர்ந்து மிருதுவான பார்வையை உடைய ஓர் அழகான பெண்ணிடம் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டேன். அவள் இளமங்கை அல்ல. தன்னைப் பற்றியே நினைக்காமல் பிறர் நலத்தையே கருதுவோரின் முகத்தில் மட்டுமே காணப் படும் இளமைக் களை அவளிடம் பொருந்தியிருந்தது. மூப்பின் சாயலே தோன்றாத அவள்தான் மீனும்பாள்.

"எங்கள் கதைகள் எல்லாம் வேறு வேறு வகையாகத்தான் இருக்கும். ஆனால் ஒரு விஷயத்தில் மட்டும் ஒற்றுமையைப் பார்க்கலாம். கணவனை அறியும் முன்பே அவனை இழந்த ஒவ்வொரு பெண்ணும், துக்கம் விசாரிக்க வந்தவர்கள் வீட்டில் குழுமி அதனை அழுகையால் நிரப்பும் போது, நான் அனுபவித்த உணர்ச்சிகளையேதான் உணர்ந்திருக்க வேண்டும். அந்த ஓலத்தைப் பொறுக்கவே முடியாது! பிறருடைய அந்தத் துக்கத்தையும் புலம்பலையும் பார்த்துக் கேட்கும் போது அதனாலேயே நாம் இறந்து விடுவோம் என்று தோன்றும்."

மீனும்பாளுடைய தகப்பனார் ஒரு வக்கீல்; சிறந்த அறிவாளி. ஒருவருக்கும் ஒரு தீங்கும் செய்யாத ஓர் இளம் பெண், கைம்மை என்ற பெருங் கொடுமைக்கு ஆளாவது முற்றிலும் தவறு என்று அவர் எண்ணினார். கன்னிப் பருவத்திலேயே கைம்பெண் ஆகி விட்டவர்கள் மறுமணம் செய்து கொள்ளலாம் என்று சீர்திருத்தவாதிகளுடன் அவரும் ஒப்புக் கொண்டாலும், சம்பிரதாயத்தை எதிர்த்துத் தம் பெண்ணுக்கே மீண்டும் ஒரு கணவனைத் தேட அவர் துணியவில்லை.

அவருடைய கட்சிக்காரர் ஒருவரின் மூலம் தான் பிராமண விதவைகள் இல்லத்தைப் பற்றி அவர் கேள்விப்பட்டார். மீனும்பாளுக்கு இதுவே தகுதியான இடம் என்று அவர் தீர்மானித்தார்.

"பல விதவைகள் அந்த நாட்களில் தங்களை எதிர்நோக்கியுள்ள அவலநிலையை விட உடன்கட்டை ஏறுவதே மேல் என்று கூறுவார்கள்" என்று சொர்ணம்பாள், உணர்ச்சியற்ற குரலில் என்னிடம் இப்போது சொன்னாள்.

அதை ஒப்புக் கொண்டு தலையை ஆட்டினாள் மீனும்பாள். "கணவன்மார்களுடன் சிதையில் கொளுத்தப்பட்டால் அவர்கள் கஷ்டம் அதோடு தீர்ந்து விட்டது. அந்த நெருப்பு எவ்வளவு கொடுமையானதாயிருப்பினும் அதைவிடப் பன்மடங்கு கொடூரமானது அவள் உயிருடன் இருப்பது. ஆண்டவன் கருணைகூர்ந்து அழைத்துச் செல்லும் வரை பல வருஷங்களுக்கு, அவர்கள் பசியையும் துக்கத்தையும் வேதனையையும்


சில ஆகாரங்கள் உங்களுக்கு ஒத்துக்கொள்ள வில்லையா?
அநேக ஜனங்கள் ஆகார க்ரமக் குறைவால் அஜீரணம், அல்லது மலச் சிக்கல் முதலியவைகளால் அவதிக்குள்ளாகிறார்கள். அப்பொழுது உங்களுக்கு பிலிப்ஸ் மில்க் ஆப் மெக்னீஷியா தேவைப்படுகிறது.
ஆகார க்ரமக் குறைவால் உங்களுக்கு ஏற்படும் புளிப்பான ஏப்பம், வயிற்றில் ஏற்படும் எரிச்சல், குமட்டல் முதலியவற்றை ஒரு நொடியில் நிவர்த்தி செய்கிறது.
மலச் சிக்கல், அதனுடனேற்படும் சோர்வு முதலிய உபாதைகளை நீக்கி, பூரண உடல் நலம் பெறுவதற்கு பிலிப்ஸ் உதவுகிறது.
அதனால் அடுத்த முறை அதிகப்படியான உணவு உட்கொள்ள நேரிட்டால், உடனடியாக பிலிப்ஸ் மில்க் ஆப் மெக்னீஷியா உபயோகிக்கவும். அது பலனளிக்கும்!
பிலிப்ஸ்
மில்க் ஆப் மெக்னீஷியா
மானுபாக்சரர் : ரிஜிஸ்டர்ட் ஓனர்
டேஸ் மெடிகல் ஸ்டோர்ஸ் (மானுபாக்சரிங்) பிரைவேட் லிமிடெட்
62, பண்டல் ரோட், கல்கத்தா-19


ஆயுட்கால
செவியின்பத்தைப்
பெற்று
மகிழுங்கள்!
நேஷனல்
எக்கோ
இந்தியாவின் ஒரே
ரேடியோ!
ஜெனரல் ரேடியோ & அப்ளையன்ஸஸ் லிமிடெட்

அனுபவித்துக் கொண்டு இருக்க வேண்டும். மற்றவர்கள் கொடுமைப்படுத்துவதைச் சகித்துக் கொண்டு அடிமையாக வாழ வேண்டும்.''

மீனும்பாள் தொடர்ந்து பேசினுள்: ''என் தந்தை என்னை நுஸ்றலவுஸாக்கு அழைத்துச் செல்லும் போது எனக்கு ஏறக்குறைய பதினென்று வயது. ஒரு வார்த்தை கூட ஆங்கிலம் தெரியாது. இரண்டும் இரண்டும் நாலு என்பது கூடத் தெரியாது. எனக்கு ஒன்றுமே தெரியாது. என் தகப்பனரும் சகோதரியும் அலுவலக அறையில் பேசிக் கொண்டிருக்க நான் வெளியே காத்துக் கொண்டிருந்தேன். கொஞ்ச நேரத்துக்குப் பிறகு, அவர்கள் இருவரும் பேசிக்கொண்டு வெளியே வந்தார்கள். அப்போதுதான் நான் முதன் முதலாகச் சகோதரியைப் பார்த்தேன். ஒரு தெய்வத்தையே காண்பது போலிருந்தது எனக்கு.''

மீனும்பாள் கருணை நிறைந்த ஆனால் நெஞ்சுறுதி பிரதிபலித்த அம் முகத்தை அண்ணாந்து பார்த்துத் தன் பிற்காலத்தைப் பற்றிய முக்கியமான கேள்வியைக் கேட்கத் துணிந்தாள்.

''நான் இங்கு இருந்தால் அழுதுகொண்டே இருப்பேனு?''

சகோதரியின் கண்களில் துளித்துவிட்ட நீரை அவள் பார்க்கவில்லை. ''இல்லை, இல்லை'' திண்மையின் கருணைக் குரல் பதிலுரைத்தது. ''இனி நீ ஒருபோதும் அழ நேராது. இங்கு எல்லோரும் சந்தோஷமாக இருப்பார்கள்.''

சுப்புலக்ஷ்மியும் சந்தோஷமாக இருந்தாள். ஆனால் முற்றிலும் திருப்தியுடன் இருந்தாள் என்று கூறமுடியாது. தானும் தன்னோடு பணியாற்றியவர்களும், நண்பர்களுமாகச் சேர்ந்து சாதித்ததைக் குறைவுபடுத்த அவள் விரும்பவில்லை. இவர்களைப் போலவே வேறு சில பெண்மணிகளும் குழுக்கள் அமைத்துச் சென்னையில் அரிய சமூகத் தொண்டாற்றி வந்தனர். பள்ளிக்கூடங்கள் திறப்பது, சமூக நலத் திட்டங்கள் உருவாக்குவது போன்ற பல செய்கைகளினால் எல்லோருக்கும் ஒரு புதிய விழிப்புணர்வை ஊட்டி வந்தனர். இருந்தாலும் இவையெல்லாமும் போதவில்லை. குழந்தைப் பிராயத்தில் விதவையாக இருப்பதன் கொடுமையை ஓரளவு சுப்புலக்ஷ்மி அறிந்து கொண்டிருந்தாள். ஆனால் அதைவிடக் கொடிய அனுபவம் குழந்தைப் பிராயத்தில் மனைவியாக இருப்பது தான் என்பதை இப்பொழுது அறிந்து கொண்டாள். மிகவும் முற்போக்கான எண்ணங்களை உடைய பெற்றோர்கள் கூடத் தங்கள் பெண்களின் சாந்திமுகூர்த்தத்தைக் கொஞ்சம் தள்ளி வைத்துக் கொள்ள முடியவில்லை. அவர்கள் சிறிதே தயங்கினால் புக்ககத்தினர் உடனே பெண்ணைத் தள்ளிவைத்துவிட்டுப் பிள்ளைக்கு வேறு மனைவி தேடிக் கொள்வதாகப் பயமுறுத்துவார்கள்.

சகோதரி உதவி செய்ய முன்வந்த ஒரு பெண்ணுக்குப் பத்து வயதிலேயே கல்யாணமாகிப் பதினென்று முடிவதற்கு முன்



''ஐயா, எவர்சில்வர் பாத்திராதிபரே! நான் ஆபீஸ் போயாகணும். என் 'பாண்ட்'டையும் சட்டையும் தயவுசெய்து ஒருநாள் வாடகைக்குத் தருவியா?''

சாந்தி முகூர்த்தமும் நடந்து விட்டது. அந்தப் பெண்ணின் மாமியார் இறந்துவிட்டிருந்தாள். புக்ககத்தில் அவள் ஒருத்திதான் பெண்ணாகப் பிறந்தவள். ஒரு வருஷத்துக்கு மேல் அவள் தனியாகக் காலை ஐந்து மணி முதல் இரவு பத்து மணி வரை சமையலும், மற்ற வீட்டு வேலைகளும் செய்ய வேண்டியிருந்தது. பன்னிரண்டாவது வயதில் பொறுக்க முடியாத வலியுடன் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டாள். அவள் சக்திக்கு மீறி வேலை செய்ததால் அவளுடைய கர்ப்பப்பை நகர்ந்துவிட்டதாக வைத்தியர்கள் கண்டுபிடித்தார்கள். வைத்தியம் முடிவு பெறுவதற்குள்ளாகவே அவளுடைய கணவரும் மாமனரும் அவளை வீட்டுக்கு அழைத்துச் சென்றுவிட்டார்கள். அடுத்த மூன்று வருஷங்களுக்குள் அவள் மூன்று முறை சிகிச்சைக்காக ஆஸ்பத்திரிக்கு வரவேண்டியிருந்தது. இதையெல்லாம் பார்க்கும் போது குழந்தை விவாகங்கள் குறித்துப் பொதுவான அபிப்பிராயமே மாறவேண்டும் என்று எண்ணினுள் சுப்புலக்ஷ்மி.

2

''**அ**ன்புள்ள அக்கா, என்னை உடனே வந்து காப்பாற்றவும். இந்த வீட்டில் இருப்பவர்கள் என்னை ஐம்பது வயது மனிதன் ஒருவனுக்குக் கல்யாணம் செய்து கொடுக்கப் போகிறார்கள். என்னால் இதைச் சகித்துக் கொள்ள முடியாது. என்னை இதற்கு இணங்க வைத்தார்களானால், இதுவே என்னைக் கொன்றுவிடும். அடுத்த வாரம் என்று

சொல்கிறார்கள். ஆகையினால் உடனே புறப்பட்டு வரவும்'' — இந்து.

*கீதா அதைப் படித்தவுடனே சகோதரியை வந்து பார்த்தாள்.

கீதா விதவைகள் இல்லத்தில் தங்கியிருந்து ஸ்காலர்ஷிப் பெற்றுப் படித்து வந்த ஒரு சூடிகையான மாணவி. அவளும் அவள் தங்கை இந்துவும் தாய் தந்தையற்றவர்கள். இந்து விதவையான தன் மாமியின் பராமரிப்பில் இருந்து வந்தாள்.

இந்துவுக்குப் பன்னிரண்டு வயதுக்கு மேல் இருக்காது என்று சகோதரிக்குத் தெரியும். சில வருஷங்களுக்கு முன், உலக யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்பே, பதினான்கு வயதுக்குட்பட்ட பெண்களுக்குக் கல்யாணம் செய்யக் கூடாது என்ற ஒரு மசோதாவைச் சென்னை சட்ட சபையில் ஸ்ரீ ஸ்ரீனிவாச சாஸ்திரி கொண்டு வந்தார். ஆனால் அந்த மசோதா பிறகு வாபஸ் பெறப்பட்டது. இது அதை எதிர்த்தவர்களைச் சமாதானப்படுத்துவதற்காக அல்ல. மசோதாவினால் எதிர்பார்த்த பலன் கிட்டாது என்ற காரணத்தினால்தான். அது முதல் குழந்தைப் பிராய விவாகத்தைக் குறித்துக் கண்டனங்கள் வளர்ந்து வந்தனவேயன்றி, இன்னமும் அத்தகைய திருமணங்களைத் தடுப்பதற்குச் சட்டபூர்வமான வழி ஒன்றும் இருக்கவில்லை. ஆயினும் சகோதரி சட்டத்துக்குப் புறம்பாகவாவது செயலாற்றிக் குழந்தை இந்துவை அவளுக்குப் பாட்டனாக இருக்கக் கூடிய ஒரு கிழவனை மணப்பதிலிருந்து தடுத்துக் காப்பாற்ற வேண்டும் என்று உறுதி கொண்டாள்.

அதற்கு என்ன செய்வது என்றுதான் அவளுக்குத் தெரியவில்லை. இந்த விஷயத்தில் சகோதரியினுடைய அபிப்பிராயம் என்னவென்பது வெளியில் நன்றாகப் பரவியிருந்தது. அந்தக் குழந்தையினுடைய மாமியைப் போய்ப் பார்த்து அவள் மனத்தை மாற்ற முயன்றால் அவள் பிடிவாதமாகத் தன் எண்ணத்தை நிறைவேற்றவே முற்படுவாள். இருந்தாலும் இதில் தன்னைத் தவிர வேறு யார்தான் குறுக்கிட முடியும் என்று நினைத்தாள் சகோதரி.

கீதா எப்போதும் காரியத்தில் கவனமாக இருப்பவள். தன் வயதுக்கு மீறிய நிதானத்துடன் கூடிய அழகான பெண். அவள் மனத்தினுள் ஏற்கனவே ஒரு திட்டம் உருவாகிவிட்டது. வீண் பேச்சுக்கோ, தாமதத்துக்கோ அவசியமில்லை; அவகாசமுமில்லை. ''ஸிஸ்டர், நான் உடனே போக வேண்டியதுதான். சித்தி என்னோடு வர முடியுமானால் நல்லது. சித்தி நிலைமையைச் சமாளித்துவிடுவாள் என்று நினைக்கிறேன்'' என்று அபிப்பிராயம் கூறினாள் கீதா.

சகோதரி சம்மதித்தார்கள். கீதாவும் சித்தியும் அடுத்த ரயிலிலேயே கிளம்பினார்கள். கீதாவின் மாமி அவர்களை வியப்புடனும் அதிருப்தியுடனும் வரவேற்றாள். ஆயினும் நாட்சண்யத்துக்காக அவர்களுக்கு உபசாரம் செய்தாள். எப்பொழுதும் சந்தோஷமாக இருக்கும் இந்து களையிழந்து காணப்பட்டாள். அழுது அழுது சிவந்திருந்த அவள் கண்கள் உறங்கி வெகு நாட்கள் ஆகிவிட்டவை போல் இடுங்கி இருந்தன.

அவர்கள் எதற்கு வந்திருக்கிறார்கள் என்பது இந்துவின் மாமிக்குப் புரிந்துவிட்டது. சித்தியின் சொற்கள் எதுவும் அவளை அசைக்கவில்லை. அவள் பிடிவாதமாக இருந்தாள். எதிர் ஜாமீன் கொடுக்க வசதியில்லாத ஒரு பெண் தன்னை ஒருவன் மணக்க வருவதையே பெரும் பாக்கியமாகக் கருத வேண்டும். மனைவியை இழந்தவர்கள், வயதானவர்கள் தாம் கையில் காசில்லாத பெண்களை மணக்கச் சம்மதிப்பார்கள். கல்யாணம் நடக்கத்தான் போகிறது. கீதாவும் சித்தியும் விதவைகளானதால் கல்யாணத்தில் கலந்துகொள்ள முடியாது. ஆனால் திருமண வைபவம் நிகழும் வரை அந்த வீட்டில் அவர்கள் ஒதுக்குப்புறமாய் இருந்து கொள்ளலாம்.

இந்துவைக் காப்பாற்ற வேண்டுமானால் ஒரே ஒரு வழிதான் இருந்தது. சித்தியும் கீதாவும் அவளைக் கடத்திக்கொண்டு போகவேண்டியதுதான்!

ஒரு நாள் வீட்டில் யாரும் இல்லாத சமயம். சித்தியும் அவ்விரு பெண்களும் தங்களால் இயன்றவரையில் வேகமாக ரயிலடிக்கு ஓடினார்கள். சென்னை ரயில் இன்னும் ஒரு மணி நேரம் கழித்துத்தான் வர இருந்தது. அதன் பிறகு அது மீண்டும் இருபது நிமிஷங்கள் கழித்துத்தான் கிளம்பும். அதுவரையில் மூச்சைப் பிடித்துக் கொண்டிருந்து ஆபத்தைத் தடுக்கவேண்டும்.

சித்தி டிக்கட்டுகளை வாங்கி வந்தாள். மற்ற இருவரையும் அழைத்துக்கொண்டு பெண்கள் காத்திருப்பதற்கான அறைக்குச் சென்றாள். வீட்டில் அவர்களைக் காணவில்லை என்று அறிந்ததும் அப்பெண்களின் உறவினருக்கு அவர்கள் எங்கு சென்றிருப்பார்கள் என்பதை ஊகிப்பது கஷ்டமாயிராது. இதனை மூவரும் அறிந்திருந்தார்கள். இந்துவைச் சென்னைக்குப் பத்திரமாக அழைத்துச் சென்று விட்டால், யாரும் அவளைத் திருப்பி அழைத்து வர எத்தனிக்க மாட்டார்கள் என்று நம்பலாம். மேலும் இவளைக் கல்யாணம் செய்து கொள்ளவிருந்தவருக்கே அதற்குப் பிறகு இவள் வேண்டாமென்று தோன்றிவிடும். இன்னும் ஒரு மணி நேரத்தில் அவர்களைச் சூழக்கூடிய அபாயம் நீங்கிவிடும்.


ரயில் வந்தது. நல்ல காலம். அதில் கூட்டம் அதிகமில்லை. தனக்கும் மற்ற இரு பெண்களுக்கும் இடம் தேடுவது சித்திக்குக் கஷ்டமாக இருக்கவில்லை.

இரு பெண்களும் அசையாமல் அமர்ந்திருந்தனர். சில விநாடிகள் வரை தங்களால் மூச்சுக்கூட விட முடியாதுபோல் அவர்களுக்குத் தோன்றியது. நிமிஷங்கள் செல்லச் செல்ல அவர்கள் இதயங்கள் வேறு எல்லாச் சத்தங்களையும் அமுக்கிவிட்டது போல் பலமாக அடித்துக் கொண்டன. (தொடரும்)

* 'கீதா' என்பது ஒரு புனைபெயர். 'இந்து'வும் அப்படியே. ''எங்கள் உண்மைப் பெயரை நீங்கள் உபயோகிக்காததனால் கதையின் சுவாரசியம் ஒன்றும் குன்றாது'' என்று கீதா எனக்கு எழுதியிருந்தாள்.

தவிப்பு

கதை: ஸோமாஸ்
சித்திரம்: உமாபதி




தம்பி, அப்புறம் அவங்களுக்கு என்ன சொல்றது? சித்ராவும் உன் ஜோடிய நான் கட்டிப் பெண்ணு பித்தைக்காலாதலை நிக்றதாம்!
ஏன் இன்னெங் காதுக்கு என்ன வாம்? ரெண்டு காலாலேயே நிக்கச் சொல் லம்மா பாவம்!
அதோ சித்ராவே வரா. இதை நீயே அவ கிட்ட சொல்லு
அம்மா! உன்னுடே ஒரு சின்ன ஹெல்ப் அவளை நான் சொல்ற
படி நீ பேசி நடிக்கணும். என்ன? ஒரு நமாஷ். பயப்படாதே.
தம்பி, உனக்கு யாரைப் புடிச்சிருக்கோ அவளையே கட்டிக்க...
அம்மா, தாங்க் ச்ராஜாஜன்னு ஒரு பொண்ணு. எம்மையை உதிரா இருக்கா. மிமின்ஸ்டோடா பொண்ணு. மாலதியையும் என்னையும் கடற்கரையிலே பார்க்காத நாளா இடையாது. இப்படி இன்னும் பல விபர். படிப்பு. நாகரிகம் அழகு...
இதற்கு மேல் சித்ராவிறுல் தாங்கமுடிய வில்லை.
மாமி! நீதானே என் வீட்டு மருமகளென்னு சொன்னீங்களே? இதெல்லாம் வெறும் பேச்சுத்தானா? என்னைக் கை விட்டுடச் சொல்லாதீங்க.
உன் கை பிடிக்க வேண்டியவன் அதோ நிக்கறான். அவன் காலைப் போய்ப்புடி. நீ என்ன தப்பு செய் தியோ எனக்கென்ன தெரியும்!
அத்தான்...!
சுந்தரோட மிஞ்சிப் போறது எத்தனை அன்பான இருக்கும் தெரியுமா? சேதுராட நிஜமா போறது இல்லுமா இருக்கும்!
ஐயோ! அதை யெல்லாம் அப்படியே உண்மையென்று நினைச்சுட்டீங்களா?
அந்த ஊர்க்கு முட்டாளிடம் இந்த விமல். உன்னுடைய இருந்தால் பேசி நடிக்கமுடியும். அதே கதையை என் தம்பி கோட ஷெல்ப் போட நடத்தினேன்!
அப்படியானால் நீங்கள் இப்பொழுது சொன்னது?
உங்களைப் பார்க்கவே எனக்கு என்னவோ ரொம்ப வெட்கமாக இருந்தது. அத்தான்!
அவ்வளவும் அப்பட்டமான பொய்! இது சரி. நீ ஏன் என் கண்ணில் படாமல் ஒளிந்து ஒளிந்து இருந்தாய்?
ரொம்ப இருந்ததோ?

வெற்றித் திருநகர்

அகிலன்

அத்தியாயம் இரண்டு

லட்சுமியின் வேண்டுகோள்

துங்கபத்திரை என்றும் போலத் தான் நுங்கும் நுரையுமாகப் பொருமிக் கொண்டிருந்தாள். அவளுடைய கரையோரத்துக் குன்றுகளும் என்றும் போலவே நெடிதுயர்ந்த கோட்டை மதில்களாய் நின்று கொண்டிருந்தன. ஆனாலும் இயற்கைத் தேவியின் எழில் குலுங்கும் அந்தப் பிரதேசத்தில் அன்று மட்டும் ஏனோ ஒரு மாறுதல் தென்பட்டது.

திடீரென்று எழுந்த பனிப்படலம் ஒன்று நாலா புறங்களிலும் சூழ்ந்து கொண்டு அதன் அழகை மூடி மறைக்கப் பார்த்தது. குன்றுகளின் சிகரங்கள், புதர்கள் ஆற்றின் மறுகரை, கரைக்கப்பால் தென்பட்ட விஜயநகரம் யாவுமே அந்தப் படலத்துக்குள் அப்போது மூழ்கி யிருந்தன.

விசுவநாதன் பாறை மீது சாய்ந்திருக்க, அவன் காலடியில் சோர்ந்து போய் விழுந்து கிடந்தாள் லட்சுமி. அன்றலர்ந்த ரோஜா மலர்களால், அவற்றின் பனித் துளிகள் உதிர்வதற்கு முன்பே தொடுக்கப்பட்ட புத்தம் புது பூமாலை போல் காட்சியளிக்கும் லட்சுமிதானா இவள்? வாடி உதிர்ந்து போன இதழ்களுடன் அது துவண்டு கிடப்பது போல் கிடந்தாள் அவள்.

விசுவநாதன் அவளையே நெடுநேரம் பார்த்துக் கொண்டிருந்தான். அது வரையில் அவன் என்றுமே இந்த அளவுக்கு இன்பத்தையும் துன்பத்தையும் ஒன்றாகச் சேர்த்து அநுபவித்ததில்லை. விநாடிப் பொழுதில் அவளிடமிருந்து பிரிக்கப்பட்ட லட்சுமியை மீண்டும் சந்திக்காமலே மதுரைக்குப் புறப்படும்படியாகஇருக்குமென்றுதான் அவன் நினைத்திருந்தான். அப்படிச் செல்லும்படி நேர்ந்தால் மீண்டும் உயிருடன் திரும்பி வந்து அவளைச் சந்திக்க முடியுமோ என்னவோ என்ற சந்தேகமும் அவனுக்கு ஏற்பட்டது. போர் மேல் செல்பவன் ஒரு வேளை திரும்பி வராவிட்டால்?

அவளைச் சந்திக்க முடியாத ஆசாபங்கத்தோடும் விரக்தியோடும்தான் அவன் புறப்படுவதற்கிருந்தான். அந்த நிலையில் அவளை அங்கே சந்தித்தவுடன் அவனுடைய துன்பங்கள் யாவுமே சிறிது நேரத்துக்கு மறந்துபோய் விட்டன.

''லட்சுமி!'' என்று அவளை ஆவலோடு அழைத்தான்.

லட்சுமி தன் தலையைத் தூக்கி அவன் முகத்தைப் பார்த்தாள். அவனுடைய விழிகளாகிய குளங்களில் கண்ணீர் அலைமோதிக் கொண்டிருந்தது. அந்தக் காட்சியை அப்படியே தன் நெஞ்சில் பதித்துக் கொள்ளத் துடிப்பவன் போல் அவன் கண்ணிமைக்க மறந்தான். அவளுடைய சுருண்ட கேசம், பிறை நுதல், அடர்ந்த புருவங்கள், கரு விழிகள், செவ்விதழ்கள்..... இப்படி அவள் முகமெங்கும் அவன் விழிகள் சஞ்சரிக்கத் தொடங்கின.

''என்ன?'' என்று கேட்டாள் லட்சுமி.

''எவ்வளவு அருகிலிருந்தவள் திடீரென்று எவ்வளவு தொலைவுக்குப் போய் விட்டாய்! உன்னுடைய மாளிகையில் நுழைவதற்குக்கூட எனக்கு அநுமதி கிடையாது என்பது உனக்குத் தெரியுமா ?''

''என்னையும் அப்பா உங்கள் மாளிகைக்கு வர முடியாமல் தடுத்திருக்கிறார்கள்'' என்றாள் லக்ஷ்மி தழுதழுத்த குரலில்.

''என் மீது ஏன் இவ்வளவு வெறுப்பு வந்து விட்டது அவருக்கு ?''

''அவரா உங்களை வெறுக்கிறார்? ஒரு போதும் அவரால் உங்களை வெறுக்க முடியாது. அவர் உங்கள் மீது கொண்டிருக்கும் அன்புக்கும் நம்பிக்கைக்கும் நீங்கள் பங்கம் விளைவித்து விட்டீர்கள் என்று அவர் உண்மையிலேயே நம்புகிறார். அவரால் அதைத் தாங்க முடியவில்லை.''

''அவர் நினைப்பது இருக்கட்டும். நீ என்னைப் பற்றி என்ன நினைக்கிறாய்?''

அவள் உடனே மறுமொழி கூறவில்லை. மௌனம் சாதித்தாள். லட்சுமி அவன்



முடிவை ஆதரிப்பாள் என்றுதான் அவன் எதிர்பார்த்தான்.

''சொல்! நீ என்ன நினைக்கிறாய்?''

''எனக்கு உங்களைப் போல் அரசாட்சி பற்றிய விஷயங்கள் தெரியாது. என் அப்பாவிடமிருந்து ஓரளவு நான் தெரிந்து கொண்டவள். அவர் கூறுவதைப் பார்த்தால் அதுவே நியாயமென்று தோன்றுகிறது. தசரதச் சக்கரவர்த்திகளுக்கு இராமர் குமாரராகப் பிறந்த நாடு இது. தந்தை சொல்லைக் காப்பாற்ற இராமர் எவ்வளவோ துன்பங்களை மேற்கொண்டிருக்கிறார். நீங்களோ உங்கள் மீது உயிரையே வைத்திருக்கும் உங்கள் அப்பாவின் உயிரையே வாங்கப் புறப்படுகிறீர்கள்.''

''பாவம்! நீயும் உன் அப்பா பேசுவதையே உண்மையென்று நம்பி விட்டாய்'' என்று அவளுக்காக அநுதாபப்பட்டான் விகவநாதன்; ''தசரதர் இராமருக்குத் தந்தையாகவும் சக்கரவர்த்திகளாகவும் இருந்தார்; நான் சக்கரவர்த்திகளிடம் பணியாற்றும் ஓர் ஊழியன். என்னுடைய செஞ்சோற்றுக் கடனை இந்த நாட்டைக் காப்பாற்றுவதற்காகக் காட்டித் தீரவேண்டும். மேலும், இப்போது என் அப்பா நெறி தவறி நடந்துவிட்டார். இது நான் அப்பாவுக்குச் செய்யும் துரோகமல்ல; நாங்கள் பிறந்த குலத்தை அரசத் துரோகம், நாட்டுத் துரோகம் என்ற பழி பாவத்திலிருந்தும் நான் காப்பாற்றவேண்டும். தனியாக நாடாள வேண்டும் என்று ஆசைப்பட்டு, அவர் இந்தச் சாம்ராஜ்யத்தையே சிதறடிக்கத் துணிந்து விட்டார்.''



லட்சுமியால் அவன் பேச்சைப் புரிந்து கொள்ள முடியவில்லை. மாலை மாலையாகக் கண்ணீர் வழிய விட்டுத் தேம்பினாள் அவள்.

''நீங்கள் உங்களைப் பெற்று வளர்த்த தாய் தந்தையரைப் பகைத்துக் கொண்டு விட்டீர்கள். உங்களையே தம் குமாரராக நம்பியிருக்கும் என் அப்பாவின் அன்பையும் புறக்கணித்து விட்டீர்கள்..... நான்...... நான்.... என்னுடைய அன்பையும் உதறி விட்டீர்கள். என் மீது சிறிதுகூட உங்களுக்கு அன்பு இல்லை. இருந்திருந்தால் இப்படிச் செய்திருக்க மாட்டீர்கள்.''

''லட்சுமி!'' என்று ஆவேசத்தோடு அவள் கரத்தைப் பற்றி, ''என்ன? உன்னிடமா எனக்கு அன்பில்லை என்று சொல்கிறாய்? நீ உன் வாயால் என் மீது இப்படிப் பழி சுமத்த லாமா? நீ என்னை வெறுத்து வந்த காலம் முதற்கொண்டு நான் உன்னிடம் அன்பு வைத்திருக்கிறேன். என் கடைசி மூச்சு இந்த உடலில் உலவும் வரையில் நீயும் அதனுடன் உலவுவாய். நீ மட்டிலும் ஒரு போதும் இப்படிப் பேசாதே, லட்சுமி! என்னால் இதைத் தாங்கவே முடியாது!''

''என் மீது உண்மையாகவே அன்பிருந்தால், என்னுடைய ஒரே ஒரு வேண்டுகோளுக்குச் செவிசாய்ப்பீர்களா?'' என்று கேட்டாள் லட்சுமி.

விசுவநாதன் தயங்கினான். அவளுடைய வேண்டுகோள் எப்படிப்பட்டதாக இருக்குமென அவனால் ஊகிக்க முடிந்தது.

''என்ன?''

''செவிசாய்ப்பீர்களா ? முதலில் அதைக் கூறுங்கள்.''

''நீ நினைப்பதைச் சொல்லிவிடு. ஏற்றதாக இருந்தால் அதன்படி செய்கிறேன்.''

''இனியும் காலம் தாழ்ந்துவிட வில்லை. இப்போதுகூட நீங்கள் உங்கள் முடிவை மாற்றிக் கொள்ளலாம்.''

''சக்கரவர்த்திகளிடம் வாக்களித்துவிட்டேன், லட்சுமி!''

''சக்கரவர்த்திகளாக ஆணையிட்டிருந்தால் அதை மீற முடியாதென்று நீங்கள் கூறலாம். இது அப்படியில்லை. சக்கரவர்த்திகள் ஆணையிட்டு வேறு யாரையேனும் மாமாவின் மீது போர் தொடுக்கச் சொல்லட்டும். நீங்கள் அதைச் செய்ய வேண்டாம். நீங்கள் படை நடத்திச் சென்றால் எங்கே நான் உங்களை இழந்து விடுவேனோ என்று நினைத்து நடுங்குகிறேன். அந்த நினைவையே என்னால் தாங்க முடியவில்லை.''

விசுவநாதன் அவளுடைய தவிப்பை அப்போதுதான் அதன் முழு உருவில் உணரத் தொடங்கினான். லட்சுமியை இழந்துவிட்டுப் பிறகு அமைதியோடு வாழ முடியுமா ?


''இதோ பாருங்கள்!'' என்று மீண்டும் அவனிடம் கெஞ்சினாள் லட்சுமி; ''நீங்கள் நேரில் போய்ச் சக்கரவர்த்திகளிடம் இதைக் கேட்க வேண்டும் என்பதில்லை. உங்கள் இசைவு கிடைத்தால் போதும். என் அப்பாவும் உங்கள் அம்மாவுமே சக்கரவர்த்திகளிடம் போய் முறையிடுவார்கள். சக்கரவர்த்திகளுக்கும் ஒரே குடும்பத்துக்குள் பகை மூட்டி விட வேண்டும் என்ற எண்ணம் இருக்காது. உங்களுக்குப் பதிலாக வேறு யாரையேனும் அவர்கள் அனுப்புவார்கள்.''

விசுவநாதன் சிலையாக மாறி விட்டான். லட்சுமியை இழந்து அவனால் வாழவே முடியாது என்று தோன்றியது. அவளை இழக்காமலிருக்க வேண்டுமானால் அவள் கூறியபடி செய்யத்தான் வேண்டும்.


''லட்சுமி! உன்னை நான் இழக்காமலிருப்பதற்கு நீதான் எனக்குத் துணை செய்ய வேண்டும். உன் அப்பா என் மீது வெறுப் படையாதபடி நீ பார்த்துக் கொள். உன்னுடைய நெஞ்சுறுதியில்தான் நம் எதிர் காலமே இருக்கிறது.''

''உங்கள் முடிவைச் சொல்லுங்கள்!'' என்று ஆத்திரத்தோடு குறுக்கிட்டாள் லட்சுமி.

''என் அப்பா தளநிகாரியாக இங்கு இருந்தவர்கள். அவர்கள் மீது படை நடத்திச் செல்லும் தகுதி சக்கரவர்த்திகளுக்கே உண்டு. அவர்கள் போக முடியாத நிலையில் அவர்கள் வேறு எந்த அமர நாயக்கர்களையாவது அனுப்பி வைத்தால், அதனால் அப்பாவின் பெருமைக்கும் இழுக்கு நேரும். அதற்காகவும்தான் நானே படை நடத்திச் செல்ல முன்வந்தேன். என் அப்பாவை நான் வெறுக்கவில்லை லட்சுமி; அவர் மீது எனக்குச் சிறிதும் விரோத



B·I



S. S. ரஜுலா

சென்னையிலிருந்து

1966 மார்ச் 31 — **1966 ஏப்ரல் 24**

சென்னையிலிருந்து பினாங்கு மற்றும் சிங்கப்பூருக்கு பிரயாணம் செய்ய விரும்பும் பிரயாணிகள் தயவுசெய்து கீழ்க்கண்ட விலாசதாரருக்கு விண்ணப்பிக்கவும்.

மெஸர்ஸ் பின்னி & கோ லிமிடெட்
7, அரமனைக்காரத் தெரு, சென்னை-1

அல்லது கீழ்க்கண்ட கம்பெனியின் அங்கீகாரம்
பெற்ற பாஸேஜ் புரோக்கர்களுக்கு விண்ணப்பிக்கவும்

C. M. குட்டி
புரொப்ரைட்டர்: குட்டி டிராவல் சர்விஸ்
38, அங்கப்ப நாயக்கன் தெரு
சென்னை-1

மெஸர்ஸ் கோனா டிராவல்ஸ்
மாஸ்காட் ஹோட்டல்
திருவனந்தபுரம்

நாகப்பட்டினத்திலிருந்து

1966 ஏப்ரல் 1 — **1966 ஏப்ரல் 25**

நாகப்பட்டினத்திலிருந்து பினாங்கு மற்றும் சிங்கப்பூருக்குப் பிரயாணம் செய்ய விரும்பும் பிரயாணிகள் தங்களது பிரயாண டிக்கட்டுகளை கீழ்க்கண்ட விலாசத்தில் நேரிடையாகப் பெற்றுக் கொள்ளலாம்.

மெஸர்ஸ் மதுரா கம்பெனி பிரைவேட் லிமிடெட்
முதல் லைன் பீச் ரோடு, நாகப்பட்டினம்

பினாங், போர்ட் ஸ்வெட்டன்ஹாம், சிங்கப்பூர் முதலிய இடங்களுக்கு நேரடியாக ஏற்றிச் செல்லவும், சிங்கப்பூரில் கப்பல் மாற்றி ஆஸ்திரேலியா நியூஜிலாந்து துறைமுகங்களுக்கு அனுப்பவும் சரக்குகள் சென்னையிலிருந்தும் நாகப்பட்டினத்திலிருந்தும் ஏற்றுக் கொள்ளப்படும்.

பிரயாணிகள் மற்றும் சாமான்கள் ஏற்றும் விவரங்களுக்குத் தயவுசெய்து எழுதவும்.

பின்னி & கம்பெனி லிமிடெட்	**மதுரா கம்பெனி பிரைவேட் லிட்**
7, அரமனைக்காரத் தெரு, சென்னை-1	முதல் லைன் பீச் ரோடு, நாகப்பட்டினம்

ஏஜெண்டுகள்: பிரிட்டிஷ் இந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி லிமிடெட்

மில்லை; இதை யெல்லாம் நீ உன் அப்பா விடம் எடுத்துச் சொல்.'' விசுவநாதனின் தொண்டை அடைத்தது. அவனால் பேச முடியவில்லை.

லட்சுமிக்கு விசுவநாதனின் தோற்றம் அப்போது மலைபோல் வளர்ந்து விட்டது போல் தோன்றியது. மனிதப் பண்புகளுக்கே உறைவிடம் போல் உயர்ந்துவிட்ட அவன், அப்போது அவளுடைய வணக்கத்துக்குரிய வனாகக் காட்சியளித்தான்.

''இவ்வளவு பாசத்தையும் பற்றுதலையும் வைத்துக் கொண்டா நீங்கள் உங்கள் அப்பாவுக்கு எதிராக நின்று வாள் வீசப் போகிறீர்கள்?''

''முன்பு விளையாட்டாக அடையாளம் தெரியாமல் ஒரு நாள் கருக்கிருட்டு நேரத்தில் அவர்களோடு வாள் வீசினேன். அந்த விளையாட்டுக்குப் பின்னே நின்று அப்போது உன் அப்பா வேடிக்கை பார்த்தார்கள். இப்போது அந்த விளையாட்டே வினையாக வந்து விட்டது. இதற்குப் பின்னே விதி நின்று வேடிக்கை பார்க்கப் போகிறது.''

அவன் கூறிய விதி என்ற சொல் சுரீர் என்று லட்சுமியின் உள்ளத்தில் பாய்ந்தது. அது விதியா, அல்லது அவள் தந்தையின் மதியா, அல்லது அவர் செய்யும் சதியா என்று அவளுக்கே புரியவில்லை.

''லட்சுமி! என் அப்பாவுக்கு என்றுமே இவ்வளவு பேராசை ஏற்பட்டதில்லை. அவர்களா இப்படிப் பாண்டி நாட்டைக் காப்பாற்றி ஆள ஆசைப்படுகிறார்கள்? என்னால் இதை இன்னும் நம்பவே முடிய வில்லை. யாரோ அவர்களுடைய மனத்தைக் கெடுத்திருக்கிறார்கள்.''

யார் கெடுத்திருக்கிறார்கள் என்பது லட்சுமிக்குத் தெரியும். ஆனாலும் அவள் வாய் திறக்கவில்லை.

நேரம் சென்று இருள் பரவியது. அப்போதும் லட்சுமி அவ்விடத்திலிருந்து நிலை பெயரவில்லை. ''நேரமாகவில்லையா லட்சுமி? தனியாக வந்திருப்பாய் போலிருக்கிறதே?'' என்றான் விசுவநாதன்.

நேரம், காலம், தந்தையாரின் கட்டுப் பாடு யாவற்றையுமே மறந்து விட்டாள் லட்சுமி. ''ஏன், நான் உங்களோடிருப்பதை நீங்கள் விரும்பவில்லையா?'' என்று கோபத் தோடு கேட்டாள். பிறகு, ''எனக்கு உங்களை விட்டுப் பிரிந்து போகவே மனமில்லை; எப் போதும் உங்கள் அருகிலேயே இருக்க வேண் டும் என்று தோன்றுகிறது'' என்றாள் தழுதழுத்த குரலில்.

ஆனாலும் இருள் அவர்களைப் பிரித்து, தனித் தனியே அவரவர் மாளிகைக்குச் செல்ல வைத்தது.

அத்தியாயம் மூன்று

அன்பெனும் போர்க்களத்தில்.....

அரியநாத முதலியார் படைகளைக் கொண்டு வந்து விஜயநகரத்தில் குவித்து விட்டார். விசுவநாதன் மதுரையை நோக்கிப் படை யெடுத்துச் செல்வதற்கான நாளும் நிச்சயமாயிற்று. புறப்படும் நாளன்று, சக்கர வர்த்தி கிருஷ்ண தேவராயரைச் சந்தித்து விடை பெற்றுக் கொண்டான் விசுவநாதன்.

சக்கரவர்த்தி அவனை அருகில் அமர்த்திக் கொண்டு அவனுக்குச் சில ஆலோசனைகள் கூறலானார்:

''நீ வெற்றியுடன் திரும்பி வருவாய் என்று எனக்குத் தெரியும். ஆனாலும் நீ இந்தப் போரில் சற்று நிதானமாக நடந்து கொள்ள வேண்டும். உட்பகையை அடக்கி ஒடுக்குவதற்கு நீ செல்கிறாய். போர் புரியப் போகும் நீயும் உன் தந்தையுமே விஜய நகரத்தைச் சார்ந்தவர்கள். நம்முடைய சக்தியைத் தவிர்க்க முடியாத போதுதான் இதில் விரயம் செய்ய வேண்டும்'' என்றார்.

''தவிர்க்க முடியாததால்தானே இந்த நிலை வந்திருக்கிறது?'' என்றான் விசுவ நாதன்.

''என்றாலும் மதுரையை நெருங்கிய வுடன் மறுபடியும் போரைத் தவிர்ப்பதற்குக் கடைசியாக ஒரு முயற்சி செய்து பார். நாகமநாயக்கருக்குத் தூது அனுப்பி வைத்து, பாண்டிய நாட்டைச் சந்திரசேகர பாண்டிய னிடம் விட்டு விட்டு, விஜயநகரத்துக்கு அவரைத் திரும்பச் சொல். அதற்கும் அவர் இணங்காவிட்டால்தான் போர் நடத்த வேண்டும். போர் நடந்தாலும் இருபுறங் களிலும் அதிகமான உயிர்ச் சேதம் ஏற் படாமல் பார்த்துக் கொள்.''

அவ்வாறே செய்வதாக வாக்களித்தான் விசுவநாதன்.

''மற்றும் ஒரு விஷயம்......'' என்று ஒரு கணம் தயங்கி விட்டு, ''நாகமநாயக்கரைக் கொன்று விடாமல் இங்கே சிறைப்படுத்தி வர வேண்டும்; அன்று நான் கோபத்தில் கூறிய தையே ஆணையாக ஏற்றுக் கொண்டு அவரைக் கொன்றுவிடக் கூடாது'' என்றார்.

கருணை நிறைந்த சக்கரவர்த்தியின் உள்ளம் விசுவநாதனைக் கண் கலங்க வைத்தது. சக்கர வர்த்தியே மீண்டும் அதை வலியுறுத்தினார். ''ஆம், எப்படியாவது அவரைக் கொன்று விடாமல் இங்கு கொண்டு வந்துவிட வேண் டும்; அவரே தம் உயிரைப் போக்கிக் கொள் ளாதபடியும் நீ கண்காணித்துக் கொள்ள வேண்டும்.''

பிறகு, சக்கரவர்த்தியின் ஆசியைப் பெற்றுக் கொண்டு தன் மாளிகைக்குத் திரும்பி வந்தான் விசுவநாதன். அவ னுடைய அன்னையார் கமலாதேவி எழுந்து நடமாடவும் சக்தியின்றிப் படுக்கையில் விழுந்து கிடந்தார். மருந்துகளால் அவரைக்

குணப்படுத்த முடியவில்லை. பணிப்பெண்கள் அவரைச் சூழ்ந்து கொண்டிருந்தனர்.

விசுவநாதன் மெல்லச் சென்று கட்டிலில் அமர்ந்தான். கமலாதேவியின் கரங்களைப் பற்றிக் கண்களில் ஒற்றிக் கொண்டு, "எனக்கு விடை கொடுத்து அனுப்புங்கள், அம்மா!" என்றான்.

கமலாதேவி தம் கண்களைத் திறந்து அவனை உற்றுப் பார்த்தார். அவரால் பேச முடியவில்லை; உதடுகள் துடித்தன; திடீரென்று ஆவேசம் கொண்டவர் போல் படுக்கையிலிருந்து எழுந்து அவனைக் கட்டிக் கொண்டார்.

"மகனே! உன் அப்பாவைக் கொன்று விடுவதற்கு என்னிடம் விடை கேட்கிறாயா? நானும் அவரும் நெடுநாட்கள் தவமிருந்து, காசிக்குப் போய் வரம் கேட்டுப் பெற்ற பிள்ளையடா நீ!"

விசுவநாதனுக்கு என்ன பேசுவதென்றே விளங்கவில்லை. கமலாதேவியின் பிடி இரும்புப் பிடியாக இருந்தது.

"விசுவநாதா! கையில் வாளெடுத்துவிட்டால் உன் அப்பாவும் தம்மை மறந்துவிடுவார். களத்தில் குதித்துவிட்டால் பெற்ற பிள்ளை என்றுகூடப் பார்க்க மாட்டார். நீயும் அவருக்குப் பிறந்தவன்தானே? நீ வேறு எப்படியிருப்பாய்?.... அவரை விட்டால் எனக்கு வேறு தெய்வமில்லை; உன்னை விட்டால் எனக்கு வேறு உயிரில்லை.... உங்களில் ஒருவர் இரத்தக் கறை படிந்த வாளோடு இங்கு திரும்பி வரும் வரையில் நான் உயிரோடிருக்க மாட்டேன்...."

அதற்கு மேல் பேச முடியாமல் அவருக்கு மூச்சுத் திணறியது.

"அம்மா! நாங்கள் இருவருமே திரும்பி வரவேண்டுமென்று இறைவனிடம் முறையிடுங்களம்மா. உங்களுடைய அன்பால் நாங்கள் இருவருமே உயிருடன் திரும்பி விடுவோம்!"

முதன் முதலாக இப்படி ஓர் ஆறுதல் கலந்த சொல் அவனிடமிருந்து வெளிவந்ததுடன் அவனை விசித்திரமாக விழித்து நோக்கினார் கமலாதேவி. அவனைத் தம் ஆவல் தீரத் தழுவிக் கொண்டு அவனுடைய நெற்றியில் முத்தமிட்டவாறே, "அதுவே உன் விருப்பமென்றால், இறைவன் உனக்குத் துணை விருப்பார்!" என்று ஆசி கூறி விடை கொடுத்தார்.

விசுவநாதன் அங்கிருந்து மின்னலெனப் புறப்பட்டு வந்து வெளி வாயிலில் நின்று கொண்டிருந்த குதிரை மேல் தாவி ஏறினான். சில விநாடிகளில் அந்தக் குதிரை சாளுவ நரசிம்மரின் மாளிகைக்குள் புகுந்தது.

விசுவநாதனை அங்கு கண்டவுடனேயே வெளிவாயில் காவலர்கள் நடுநடுங்கினர். திடுக்கிட்டு வெலவெலத்துப் போன அவர்களுக்கு அவனைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்ற எண்ணம்கூட ஏற்படவில்லை. ஒரே ஒரு காவலன் மட்டிலும் அவனைத் தடுக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் உள்வாயிலுக்குக் குறுக்கே போய் நின்று வேல் முனையால் வழிமறித்தான்.

அடுத்த விநாடியில் அவனுடைய வேல் விசுவநாதனால் முறித்து எறியப்பட்டது. அவனை ஒதுக்கித் தரையில் தள்ளிவிட்டுச் சூறாவளிபோல் கூடத்துக்குள் விரைந்தான் விசுவநாதன். அங்கு அமர்ந்திருந்த சாளுவ நரசிம்மருக்கு எதுவுமே தோன்றவில்லை. இவ்வளவையும் கவனித்துக் கொண்டிருந்த லட்சுமி பதற்றத்தோடு அங்கு ஓடி வந்தாள்.

தம்மையே அவன் தாக்க வருவதாக நினைத்துக் கொண்ட சாளுவநரசிம்மர், "விசுவநாதா!" என்று கூவிக் கொண்டு எழுந்தார். அவருடைய உச்சி முதல் உள்ளங்கால் வரையில் நடுக்கம் கண்டது. நெடுஞ்சாண்கிடையாக அவர் காலடியில் விழுந்து அவர் பாதங்கள் இரண்டையும் இறுகப் பற்றிக் கொண்டான் விசுவநாதன்.

"மாமா! தாங்கள் என்னை வெறுத்து ஒதுக்கினாலும் என்னால் தங்களை வெறுக்க முடியாது. என் தந்தைக்கும் மேலாக என்னிடம் பரிவு காட்டி வளர்த்தீர்கள். போருக்குச் செல்வதற்கு முன்பாகத் தங்களிடம் ஆசி பெற்றுச் செல்வதற்காக வந்திருக்கிறேன்.


ஆயுர்வேத ஆராய்ச்சி



ஆயுர்வேத மருந்துகளை எப்படிச் செய்வது என்று விளக்கும் நூல்களின் முதல் பாகம் இவ்வாண்டு ஜூன் மாதத்தில் வெளியாகும் என்று தெரியவருகிறது. இதற்காக அமைக்கப்பட்டுள்ள கமிட்டி இதுவரை 460 ஆயுர்வேத மருந்துகள் பற்றி ஆராய்ச்சி நடத்தியுள்ளது. நூலின் எல்லாப் பாகங்களும் பூர்த்தியாகும் போது 2000 மருந்துகளின் செய்முறையை உலகறியும். ஃபார்மகோபியா என்று கூறப்படும் இந்நூலின் தொகுதிகள் ஆயுர்வேத மருந்துகள் செய்வதற்கான கிரமங்களைத் தரமாக, திட்டவட்டமாக நிர்ணயித்து, மருந்துகளைச் சிறப்பான முறையில் தயாரிக்க உதவும். இதனால் போலி மருந்துகளைத் தடை செய்யவும், சாஸ்திரிய மருந்துகள் கிடைக்கவும் வழி ஏற்படும். கர்னல் சோப்ரா அவர்களின் தலைமையில் இயங்கும் கமிட்டியில் முக்கிய பொறுப்பை ஸ்ரீ ஹரி அவர்கள் ஏற்றிருக்கிறார்.

ஸிங்கர் அளிக்கும்

உங்களுக்குப் பிரியமான பழைய மாடல், புதிய உருவில்- மெர்ரிட்*டி5 (ஸிங்கர் வகை)



உங்களுக்குப் பிரியமான ஸிங்கர் மாடல்... உங்களுக்கென, ஸிங்கர் மேற்பார்வையில், சிறந்த ஆயுட்கால ஸிங்கர் சேவையின் பக்குவத்துடன் மீண்டும் புதிய உருவில் தயாரிக்கப்பட்டது.

தவணைமுறைத் திட்டமும், எல்லா ஸிங்கர் கடைகளிலும், குறிப்பிட்ட ஸிங்கர் வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

SINGER SEWING MACHINES

பெயரில் மெர்ரிட், புகழில் ஸிங்கர்

வெற்றியோடு திரும்ப வேண்டுமென்று ஆசி கூறுங்கள் !''

அமைச்சர் பதிலேதும் கூறாமல் தம் பாதங்களை விடுவித்துக் கொண்டு ஆசனத்தில் அமர்ந்தார். வழக்கமாகவே உணர்ச்சிவயப்படாத அவருக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. அதற்குள் விசுவநாதனும் எழுந்து நின்றான்.

''விசுவநாதா ! நானும் நாகமநாயக்கரும் வெவ்வேறு மனிதர்கள் என்று நினைத்துக் கொண்டிருக்கிறாய். அவருக்கு வரும் துன்பம் என்னுடையது. அவருடைய மகனாக இருந்தாலும் நீ நேற்றுப் பிறந்தவன்! உனக்கு முன்பே நாங்கள் இருவரும் ஒன்றாகிவிட்டவர்கள். என்னையே பகைத்துக் கொண்டு முறியடிப்பதற்கு நீ என்னிடமே ஆசி கேட்கத் துணிந்து விட்டாயா?''

''சக்கரவர்த்திகள் எனக்கு விடை கொடுத்து விட்டார்கள். மாமா என்ற உறவோடும் சாம்ராஜ்யத்தின் அமைச்சர் என்ற முறையிலும் தங்களிடம் ஆசி பெற வந்திருக்கிறேன்'' என்றான் விசுவநாதன்.

''சக்கரவர்த்திகள் உன்னையும் இந்த சாம்ராஜ்யத்தையும் எவ்வளவு காலத்துக்குத் தாங்கப் போகிறார்கள் என்பதை நான் பார்க்கத்தான் போகிறேன்! அப்போதுதான் உனக்கு எங்களுடைய அருமை தெரியப்போகிறது. நீயே உன்னுடைய எதிர்காலத்தைப் பாழ்படுத்திக் கொள்ளத் துணிந்துவிட்டாய்.''

அவரிடம் விவாதம் செய்ய அவன் விரும்பவில்லை. நேரமும் ஆகிவிட்டது. அவரையே அவன் உற்றுப் பார்த்தான். அவன் விழிகளில் கண்ணீர் பொங்கியது.

''மாமா! நான் சென்று வருகிறேன். எது நியாயமோ, எது தர்மமோ, எது நீதியோ அது வெற்றி பெறட்டும். நான் என் தந்தையைப் பகைத்துக் கொண்டு செல்லவில்லை. அவருடைய பேராசைக்கு மட்டுமே நான் பகைவன். இதைத் தாங்கள் உணர்ந்து கொண்டால் போதும். நான் சென்று வருகிறேன்....!''

சரேலென்று திரும்பிய விசுவநாதன் அங்கே லட்சுமியைக் கண்டு திகைத்து நின்றான். மஞ்சள் நீர் கரைத்த பொற்கலத்தோடு அவள் அங்கு காத்து நின்றாள். விசுவநாதனுக்கு மெய்சிலிர்த்தது. எங்கே லட்சுமியையும் அவர் ஓடி வந்து தடுத்து நிறுத்தப் போகிறாரோ என்ற பரபரப்போடு, அவள் அருகில் சென்று அவன் தலை நிமிர்ந்து நின்றான்.

அவள் ஆரத்தி எடுத்து அவனுக்கு நெற்றியில் திலகமிட்டாள். ''வெற்றியுடன் திரும்பி வாருங்கள்! இறைவன் உங்களுக்குத் துணை நிற்பார்!'' என்று அமைதியோடு கூறினாள்.

அப்போது அவளுடைய முகத்தில் பொங்கிய பேரொளி அவனை வியப்படையச் செய்தது. அவனுடைய கண்களை மட்டிலுமே நோக்கிய லட்சுமி, தன்னுடைய தந்தையின் பக்கமே திரும்பவில்லை. சாளுவநரசிம்மருக்குச் சினம் பொங்கியதென்றாலும், ஏனோ அவர் அவளைத் தடுக்க முடியாமல் அப்போது தவித்துக் கொண்டிருந்தார்.

விசுவநாதன் தெய்வத்தின் ஆசியை நேரடியாகப் பெற்ற மன நிறைவோடு வெளிவாயிலுக்கு வந்து குதிரையின் மீது தாவி ஏறினான். அது வரையில் ஆத்திரத்தால் குமுறிக் கொண்டிருந்த சாளுவ நரசிம்மர் மனம் கேட்காமல் வெளியே ஓடி வந்து, குமாரத்தியை அன்போடு தழுவிக்கொண்டு, விசுவநாதன் விரைந்து செல்வதைக் கண்ணிமைக்காமல் கவனித்தார். (தொடரும்)




பள்ளி நினைவுகள்

''அந்தக் காலத்திலே நான் பள்ளிக் கூடத்தில் படித்துக் கொண்டிருந்த நாளிலே...'' இப்படி ஆரம்பிக்கும் தாத்தாமார்கள் கூடப் பழைய நினைவுகளிலே மயங்கித் தம்மையே மறந்து பல நிகழ்ச்சிகளைச் சுவைபடக் கூறத் தொடங்கி விடுவார்கள். இந்தக் காலத்து அப்பாக்களுக்கும் பிள்ளைகளுக்கும்கூடத் தங்கள் பால்ய நிகழ்ச்சிகள், பள்ளிக்கூடத்து நினைவுகள் மகிழ்ச்சியையே தருபவை. எனவே, யார் எழுதினாலும் பல சுவையான, பயன்படத்தக்க நினைவுகளைக் கூற முடியும். இந்த இனிய பள்ளி நினைவுகளைப் பாலர் முதல் பாட்டனார் வரை பேரன்களும் பேத்திகளும் கூடச் சுவைபடக் 'கல்கி'க்கு எழுதி அனுப்பலாம். ஆனால் அரைப் பக்கத்துக்கு மேல் போகக்கூடாது. 'கல்கி'யில் இடம்பெறும் இனிய **பள்ளி நினைவுகளில்** சிறந்தவற்றுக்குப் பரிசு உண்டு. கட்டுரைகள் வந்து சேரவேண்டிய கடைசித் தேதி 1-4-66.

உறையின்மேல் 'பள்ளி நினைவுகள்' என்று குறிப்பிடவும். இது விஷயமாகக் கடிதப் போக்குவரத்து வைத்துக் கொள்வதற்கில்லை. பிரசுரமாகாதவற்றைத் திரும்பப் பெற விரும்புவோர் தங்கள் விலாசமிட்ட தபால் தலையுடன் கூடிய ஓர் உறையை உடன் அனுப்ப வேண்டும்.






கொசுவலை கட்டுவோம் வாரீர்!

'சுபஸ்ரீ'

கொசு வலை கட்டும் அவஸ்தைக்கு ஒரு புது முறை வகுத்துக் கொடுப்பீர்களா?





மனித உலகம் வானவெளியில் ஏறி விண்ணையும் சாடிய செய்தி கேட்டீர்களா? ஹூம், என்ன பிரமாதம்? இருதய சிகிச்சையில் முற்றும் புதிய முறை ஒன்றைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். இருக்கட்டுமே! இன்னும் சொல்லவா ?

கிடக்கு விட்டுத் தள்ளுங்கள். கொசுவை ஒரேயடியாக ஒழிக்க ஏதாவது வழி செய்திருக்கிறார்களா? அதுதான் போகட்டும். கேவலம் கொசு வலையைச் சுலபமாகக் கட்டுவதற்கு ஏதாவது இலகு முறையைக் கண்டு பிடித்திருக்கிறார்களா? ஊஹூம், என்ன விஞ்ஞானம் வேண்டிக் கிடக்கிறது.

அதென்ன அப்படிச் சொல்லுகிறீர்கள் ? கொசுவை அழிக்க எத்தனையோ மருந்துகள் டி..டி..டி.., ஊதுவத்திகள்....! மண்ணாங்கட்டி! எல்லாம் இருமலையும் ஆஸ்துமாவையும் வரவழைத்தன. கொசுவை எங்கே போக்கின ?

இப்போது உங்களுக்குக் கொசுவின் பேரில் கோபமா? கொசுவலையின் மீதா ?

கொசு கிடக்கட்டும், சார். அதுதான் கைக்குள் அகப்பட மாட்டேன் என்கிறதே. கொசு வலை கட்டும் கஷ்டம் சொல்லுங்கள். எனது பாட்டனார் காலத்தில் எப்படி ஆணி அடித்துக் கொசுவலை கட்டி வந்தார்களோ, அதே முன்னைப் பழம்பெரும் வழியைத்தான் இன்று நாமும் செய்து வருகிறோம். நமது பேரன்களும் செய்யப் போகிறார்கள். நடைமுறை வாழ்க்கையில் பல துறைகளில் மாறுதல் அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது. இந்தக் கொசு வலை விஷயத்தில் விஞ்ஞானம் நமக்கு நயாபைசா அளவு உபகாரம் செய்திருக்கிறதா ? அதே வலைக் கூண்டு, நாலு ஆணிகள், நீளக் கயிறு.

விமானப் படையெடுப்புக்குப் பயந்து ஏ. ஆர். பி. குழியில் பதுங்குகிறவன் போல், இந்தக் கொசுவலை கட்டும் சிரமத்தைக் கருதியே நான் சாப்பிட்டதும் ஏதாவது 'நல்ல' தினசரியை வைத்துக் கொண்டு தூக்கத்தை வரவழைத்து விடுவது உண்டு. ஆனாலும் என் மனைவி அபாயச் சங்குபோல அலறி, என்னைக் குரலாலும், கூப்பாடாலும், அவசியமானால் கையாலும் தாக்கி விழிப்படையச் செய்து, வலை கட்டும் தொல்லைக்கு என்னை வலிய ஆளாக்காமல் இருப்ப

இல்லை. பாதித் தூக்கத்தில் எழுந்து, படுக்கையை விரித்து, கொசு வலை அமைக்கும் பணி இருக்கிறதே — ஆண்டவா, அது எனது எதிரிக்குக்கூட வேண்டாம்.

கொசு வலை கிடைத்து விடுகிறது. இதர உபகரணங்கள் ? காதறுந்த ஊசி கடை வழிக்கும், கயிறு அறுந்த கொசு வலை சுவர் எல்லைக்கும் வருவதில்லைதாம். இரண்டு மூலைகளில் கயிறையே காணோமே! என்ன ஆயிற்று ? கயிறு உருவிப் போச்சோ, பாழாய்ப் போன பயல் பம்பரம்விட எடுத்துச் சென்றானோ, எத்தால் முடிப்பேன் இக் கொசுவலையை? அந்தச் சமயத்தில் வீடு முழுவதும் கயிறு தேடுங்கள். பாம்பு கிடைக்கும் ; தேள் கிடைக்கும், ஆனால் ஒரு முழக் கயிற்றுக்குப் பஞ்சம்! பரியை நரியாக்குவது

போல, ஒரு சிப்பயே இருகூருகப் பிளந்து, முடிபோட்டு இப்போதைக்கு நிலைமையைச் சமாளிக்கிறோம்.

பிறகு ஓர் ஆணியில் ஒரு முனையை முடிந்து விட்டு, மறு முனைக்குத் தாவி, முடிச்சிடத் தேடுகிறோம். ஐயோ, இங்கு மறைவாக இருந்த ஆணி மறைந்த மாயம் என்ன? இந்த ஆணியாருக்கு மோட்சம் அளித்தவர் யார்? கலிப்படைந்து, சுவரில் எங்கோ காலண்டர் மாட்டியிருக்கும் ஆணியைப் பிடுங்கி அறையலாமென்று சுத்தியலைத் தேடினால்.....! வைத்தது வைத்தாங்கு இருந்தால்தான், நமது இல்லறம் நல்லறமாக இருந்திருக்குமே. "நேற்று அடுத்த வீட்டு மாமி கரி உடைக்க எடுத்துச் சென்றுள். அர்த்த ராத்திரியில் திரும்பிக் கேட்க வேண்டாம்" என்று அஞ்சல் செய்தபடி, மாற்றாக அம்மிக் குழவி எடுத்து வருகிறாள், மதிப்புக்குரிய மனைவி. அந்த அடுக்குள் ஆயுதத்தை வைத்துக் கொண்டு ஆணி அடிக்கையில்.... அம்மோவ்! கை போச்சு! அம்மிக் குழவியை மிதித்து எறிந்து, பக்கத்தில் வேடிக்கை பார்க்கும் அருந்ததியை எரித்து விடுவது போலப் பார்க்கிறோம்.

ஆணி அறை படலம். சுவரில் ஓர் இடத்தில் பொதுக் கென்று போகிறது. ஓர் இடத்தில் ஆணி வளைகிறது. இவ்வாறு பத்து இடங்களில் பரீட்சித்துப் பார்த்து, இறுதியில் ஒரு வழியாக ஆணி இறுக்கு விழா முற்றுப் பெறுகிறது. இந்த இரண்டாம் முனையில், தொங்குகிறது. இதென்ன கயிற்றரவு! இந்த ஆணியுடன் பட முடியாது இனித் துயரம். அந்தத் தூணுடன் சேர்த்துக் கட்டலாமென்றால் கயிறு நீளம் போதாது. இதற்குத்தான் ரப்பர் நாடா வேண்டுமென்பது. அல்லது இந்த வீட்டுக்காரப் பாவி நிறையத் தூண்களாவது கட்டிப் போடக் கூடாதா?.... கிடைத்த இடத்தில் முடிந்து வைப்போம்.

"இதென்ன கொசுவலையா கட்டி யிருக்கிறீர்கள்?" நமது வலை அரண் நிறுவும் பாதுகாப்பு முயற்சியை [illegible] பழிக்கும் பாவியைக் கண்டு பதறாமல் இரு[illegible] முடியுமா?

"இங்கே பாருங்கள்."

தேவர்களது கால்கள்தான் பூமியில் படுவதில்லை. நாம் கட்டிய கொசு வலையும் தரையை எட்டாத தத்துவம் என்ன? பாராசூட் மனிதன் போல் கொசு வலை பூமிக்கு மேல் படுஉயரத்தில் மிதந்து கொண்டிருந்தது.

இந்தக் கொசுவலையைக் கோணம் பார்த்துக் கட்டுவதில்தான் எத்தனை சிரமம்! வான வெளியைக் கணித்து ஸ்புட்னிக் எப்படி விடுகிறார்கள்?

மீண்டும் வீணைக்குச் சுருதி சேர்க்கப் பிரடையைத் தளர்த்துவது போல, கயிறு களைத் தளர்த்தி, கொசு வலையை விண்ணுலகத்திலிருந்து மண்ணுலகத்தைத் தொடச் செய்து......

"நன்றாக இருக்கிறது. எஸ்கிமோக்கள் படுக்கிற கூடாரமா? மூச்சு முட்டும் போல் ஓரேயடியாகத் தணித்துக் கட்டி இருக்



கொசுவலைக் கயிற்றை முடிந்துவிட்டு, — மூன்றும் அங்கத்துக்கு வருகிறோம்.

அந்தோ, மாபெரும் தவறு. இரண்டாவது ஆணியில் மூன்றாவது கயிற்றை அல்லவா தவறாக முடிச்சிட்டு விட்டோம். சரி; அதனை அவிழ்த்து இதனைக் கட்டு. மீண்டும் மூன்றாவது ஆணிக்கு வந்தால் கயிறு எட்டவில்லை. மறுபடியும் சிப்பயைத் தேடு. தூங்குகின்ற பெண் குழந்தையின் பின்னலில் இருக்கும் புது ரிப்பனுயினும் பரவாயில்லை. கட்டியாயிற்று? அட, எழவே! கொசுவலை ஒருபுறமாக வக்கரித்துக் கொண்டு ஒதுங்கி விட்டதே. சரி; இரண்டாவது முடிச்சைத் தளர்த்தி, மூன்றாவதை இறுக்கி, நான்காவதைத் தூக்கிக் கட்டி..... பட்! முதலாவது ஆணி கயிற்றுடன் வந்து, தூக்குப் போட்டுக் கொண்டது போலத் கிறீர்களே!" விமர்சக மனைவி விடுசொல் படுநாராசமாகக் காதில் விழுகிறது.... மீண்டும் அட்ஜஸ்ட்மெண்ட். வீடு கட்டும் இன்ஜினீயர் தோற்றான்.

முன்னால் படுக்கை போட்டு, கொசு வலை கட்டினால் அது காத தூரம் தள்ளி, பாதிப் படுக்கைக்குத்தான் குடை விரிக்கும். அதற்காகவே, கொசு வலையை முடிந்துவிட்டு, அதற்கேற்பப் படுக்கையைப் போடும் புனித வழக்கம் மேற்கொண்டுள்ளேன். ஒரு கொசு வலை கட்டவே இந்தப் பாடு. சம்சாரிகள் வீட்டில் நாலு வலைகள் கட்டுவதென்றால்....?

தினப்படி சம்பவம் சார், இது. இவ்வளவு தொல்லைப்படுகிறோமே! எந்த வியாபாரியாவது எளிதாக்கிச் 'சுலபக் கொசுவலை' தயாரித்துத் தர முன் வந்திருக்கிறார்களா?

''ஏனய்யா, இத்தனை பாதுகாப்பு இருந்தாலும் 'ஸ்பை'போல நுழையும் கொசுக்கள் இருக்கும் போது கொசு வலையால் என்ன பயன்?'' என்று கேட்கிறீர்களா?

வாஸ்தவம்; ஆனால் கொசுக்கடி இருந்தால்கூட வலை இல்லாவிட்டால் தூக்கம் வர மறுக்கிறது. இத்தனை முஸ்தீபும் செய்த பிறகு, நமது வானரப் படைகள், தன்னை ரைக் கிழித்துக் கொண்டு வரும் சப்மரைன் போல, வலையைக் கிழித்துக் கொண்டு வெளியேறுகின்றன: அல்லது உருண்டு, புரண்டு கொசு வலைக் கோட்டைக்கு அப்பால் இரா முழுவதும் கிடக்கின்றன. காலையில் பார்த்தால் கொசு வலை ஒருபுறத்து ஆணி வேரோடு வந்து, அறுந்து கிடக்கிறது.

கொசுக்களைச் சமாளிக்க உதவயமாகும் யுத்த தந்திரமுறை ஏதேனும் இருந்தால் சொல்லுங்களேன், பார்ப்போம்!

பாடிப்
பாருங்கள்

சிவன் கீர்த்தனை மாலை

வர்ணங்கள், கீர்த்தனைகள், பதம், முதலான வகைகளை இயற்றிப் பாடிக் கர்நாடக ஸங்கீதத்தை வளப்படுத்தியவர்கள் பலர். சென்ற நூற்றாண்டில் அவ்வாறு சாகித்ய கர்த்தாவாகவும், ஸங்கீத வித்வான்களாகவும் விளங்கி, நமது ஸங்கீதத்தை வளமுறச் செய்த மஹனீயர்கள் ஆண்டவனைப் பாடி, அவனது திருவடித் தாமரைகளில் என்றும் அழியாப் புகழுடன் அமரர்களாக விளங்குகிறார்கள்.

இந்த இருபதாம் நூற்றாண்டில் தலை சிறந்த வாக்கேயக்காரராக விளங்குபவர் நம்மிடையே வாழும் பிரம்மஸ்ரீ பாபநாசம் சிவன் அவர்கள். இப்பெரியாரின் கீர்த்தனைகள் இடம் பெறாத இசை நிகழ்ச்சிகளே இல்லை எனலாம். ஸாஹித்ய வளத்திலும் இசைச் சுவையிலும் தனிச் சிறப்புடன் சிவன் கீர்த்தனைகள் விளங்குவதே அதற்குக் காரணம்.

இதுவரை சிவன் அவர்கள் முந்நூறுக்கும் மேலாகக் கீர்த்தனைகள் இயற்றி இருப்பதாக அறியப்படுகிறது. முப்பது ஆண்டுகளுக்கு முன் நூறு கீர்த்தனைகளைக் கொண்ட புத்தகம் முதல் பாகமாக வெளிவந்தது. (இப் புத்தகம் இப்போது கிடைக்காது என அறிகிறேன்.) இப்பொழுது வெளிவந்துள்ள இரண்டாம் பாகம் பத வர்ணம், தான வர்ணம், கீர்த்தனம், ராகமாலிகை, பதம், தில்லானா, பஜன் முதலான இசை வடிவங்கள் அடங்கியுள்ள இசைக் கோவையாகும்.

தெளிவான தமிழ் மொழியில் உள்ள கீர்த்தனங்களுடன் ஸ்ரீ வல்லி தேவஸேனாபதே, சாமுண்டீச்வரி, நடராஜோ விஜயதே எனத் தொடங்கும் வடமொழி உருப்படிகளும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

பத வர்ணங்கள் தன்யாஸி ராகத்திலும், ஸ்ரீரஞ்ஜனியிலும் ஸ்வர ஸாஹித்ய அமைப்புடன் அபிநயம் செய்வதற்கு உசிதமான பாவச் செறிவுடன் மிகவும் அழகாக விளங்கும் இசைச் சித்திரமாக விளங்குகின்றன.

'மாலை சூட்டுவேன்' என்ற கீர்த்தனம் கீரவாணியில் தொடங்கி, சங்கராபரணம், வராளி, பிலஹரி, கேதாரகௌளம் ஆகிய ராகங்களில் சிட்டை ஸ்வரத்துடன் ஒவ்வொரு ராகத்திலும் மகுட ஸ்வரமாகக் கீரவாணி ராகத்தின் ஸ்வரத்தோடு சேர்த்து இயற்றப்பட்டுள்ளது. ஒரு வித்வத் திறன் நிறைந்த அழகானதோர் உருப்படியாகும் இது. கருட்டி ராகத்தில் நிந்தாஸ்துதியாகப் பாடப்பட்டுள்ள 'பிச்சைக்கு வந்தீரோ கபாலி' என்னும் பதம் குறிப்பிடத் தக்கதாகும். பொதுவாக ரக்தி ராகங்களிலேயே எல்லாப் பாடல்களும் அமைக்கப் பெற்றிருப்பது போற்றுதலுக்குரியதாகும். ஸ்வர தாளக் குறிப்பு எளிதாகப் புரிந்துகொள்ளத் தக்க வண்ணம் அமையப்பெற்றிருப்பது பாராட்டுதற்குரியது.

நாதயோகி என விளங்கிய காலஞ்சென்ற வித்வான் கோனேரிராஜபுரம் வைத்திய நாதய்யர் அவர்களுடைய பாணியைப் பின்பற்றி ஸ்ரீ சிவன் அவர்கள் மனம் உருகிப் பாடிய பாடல்களைக் கேட்கும்போது ஸ்ரீ அய்யரவர்களின் தனித்தன்மையோடு விளங்கிய சங்கீதத்தை நேரில் கேட்பது போன்ற உணர்ச்சியே உண்டாகும். சிவன் அவர்கள் இந்நூலைத் தமது குருநாதரான ஸ்ரீ கோனேரி ராஜபுரம் வைத்தியநாத அய்யரவர்களுக்கு ஸமர்ப்பணம் செய்துள்ளது மிகவும் பொருத்தமானதாகும்.

சிவரஞ்சனி என்ற ஒரு புது ராகமும் இடம் பெற்றிருக்கிறது. இந்த ராகம் 22வது மேளத்தின் ஜன்யமென்று கேட்டறிந்தேன். ஒவ்வொரு கீர்த்தனையின் தலைப்பிலும் அந்தந்த ராக மேளத்தின் எண்ணைக் குறித்திருந்தால் நலமாக இருந்திருக்கும்.

இந்த வெளியீட்டுக்குப் பொருளுதவி தந்துள்ள தமிழ்நாடு ஸங்கீத நாடக சங்கத்துக்கு இசை உலகத்தின் சார்பாகப் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய ஸ்வாமிகள் அவர்களின் ஸ்ரீமுக ஆசிகளுடன் சிறந்த முறையில் வெளிவந்துள்ள இந்நூலைச் சங்கீத வித்வான்களும், வித்யார்த்திகளும் வரவேற்றுப் படித்துப் பாடிப் பயன் அடைவார்களாக.

கீர்த்தனை மாலை இரண்டாம் பாகம். 101 கீர்த்தனங்கள். 309 பக்கங்கள். விலை ரூ. 8.00. (தபால் செலவு தனி) கிடைக்குமிடம்: ப்ரம்மஸ்ரீ பாபநாசம்சிவன் அவர்கள், சீனிவாசன் தெரு, மதராஸ்–28.

— செம்மங்குடி ரா. ஸ்ரீநிவாஸய்யர்

மூங்கிலின் மீது பருத்தி விளைவிக்க முடியுமா உங்களால்?



மூங்கிலின் மீது பருத்தி விளைவிக்க எங்களால் முடியுமென்று கூறிக்கொள்ளவில்லை நாங்கள். என்றாலும் அதற்கு அடுத்தபடியான ஒன்றை நிறைவேற்றுகிறோம். மூங்கிலையே பருத்தி போன்றதொரு பஞ்சாக மாற்றுகிறோம்.

கிராஸிம் ஸ்டேபிள் ஃபைபர் என்று நாங்கள் வழங்குகிறோமே அது இயற்கைப் பஞ்சு போலவே இருக்கும். பருத்தியோடு அதனைக் கலந்து நெசவு செய்வதனால் கிடைக்கும் துணி, மாறாத புதுமெருகோடு என்றும் பொலிவுடன் சோபிக்கும். கிராஸிம் செயற்கைப் பஞ்சுடன் பருத்தி இணைந்த துணிகள் உயரிய பண்புகள் கொண்டவை, மேனிக்கு இணக்கமானவை, அணியக் கச்சிதமானவை, நீடித்துழைப்பதோடு, சலவைக்கும் எளிதானவை. அதே சமயம் விலையும் மிகக் குறைவாக இருப்பது குறிப்பிடத்தக்கது. எனவே, துணி வாங்கும்போது குறிப்பிட்டுக் கேளுங்கள்:

கிராஸிம் ஸ்டேபிள் ஃபைபர் இணைந்தது.

க்வாலியர் ரேயான் ஸில்க் மானுபாக். (வீவிங்) கம்., லிட்., நாக்தா (ம.பி)

தொழில்நுட்ப விவரங்களுக்கு தயவுசெய்து எழுதுக:
டெக்ஸ்டைல் ரிஸர்ச் டிபார்ட்மெண்ட், குவாலியர் ரேயான், இண்டஸ்ட்ரி ஹவுஸ்,
159, சர்ச்கேட் ரிக்லமேஷன், பம்பாய்-1.

ஜீவ வெள்ளம்

அத்தியாயம் அறுபத்துநான்கு

கானல் அருவி

நச்சியின் பேச்சில் கட்டுண்டு கிடந்த வண்டிக்காரர்களில் ஒருவன் எழுந்து, முண்டாசை அவிழ்த்துக் கட்கத்தில் இடுக்கிக் கொண்டு முக க்ஷவரத்துக்காக வந்து உட்கார்ந்தான். கிழவனிடம் காசு வாங்கி ஜேபியில் போட்டுக்கொண்ட நச்சி, அந்த மூளிக் கண்ணாடியை எடுத்து வண்டிக்காரன் கையில் கொடுத்துவிட்டுக் காரியத்தில் இறங்கினான்.

இவ்வளவையும் பார்த்துக்கொண்டும், கேட்டுக் கொண்டும் அங்கு நின்று கொண்டிருந்த சபேசன், ''அண்ணே!'' என்று மெல்லக் கூப்பிட்டான்.

பேல் தகட்டுக் கத்தியைப் பட்டென்று உள்ளங் கையில் தீட்டிக் கொண்டே நிமிர்ந்த நச்சி, தனக்கு அறிமுகமில்லாத ஒருவனைப் பார்ப்பது போல் சபேசனைப் பார்த்தான். பிறகு அவனைப் பார்க்காதவன் மாதிரி வேறு பக்கம் திரும்பி நின்றுகொண்டு தன் வேலையில் இறங்கினான்.

''இன்னய்யா, நீ எங்கே இருக்கிறது?''

கையிலிருந்த மூளிக் கண்ணாடியில் தன் முகத்தைத் திருப்பிச் சாய்த்துப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்த அந்தக் கைவண்டிக்காரன், ''கொத்தால் சாவடி!'' என்று பதிலிறுத்தான்.

நச்சி மேலும் பேச்சுக் கொடுத்தான்: ''ஒரு நாளைக்கு இன்னா சம்பாரிப்பே?''

''மூணு, நாலோ தேறும்.''

''இன்னைக்கு?''

''கொஞ்சம் ஜாஸ்தி. ஆறு ரூபா பட்டுப் போச்சு.''

''அதான் வண்டியை விட்டுப்பிட்டு வந்துட்டியா?''

''ஆமாம், தொரை!''

''எங்கே, சினிமாவுக்கா?''

''பின்னே? புதுப் படம். நேத்துதான் ஆரம்பம். நாலார் ரூபா டிக்கட்டாயிருந்தாலும் உட்றதில்லேன்னு இருக்கேன்.''

''அதான், ஷேவிங் கிவிங் பண்ணிக்கிட்டுச் சும்மா, மஜாவா கிளம்பப் போறே. இல்லே?''

''மீசை கருக்கா இருக்கட்டும், தொரை! பலான படத்திலே பலான ஆக்டரு வைச்சுக்கிட்டு இருந்தாரே, அதே மாதிரி இருக்கணும்....''

''சரி; மோவாயைக் கொஞ்சம் தூக்கு!''

''போல், போல்! மொன்னய்யா! இன்னு இப்படித் தீய்ஞ்ச சட்டியை ஆப்பையால் சொரண்டறாப்பலே சொரண்டறே?''

''பின்னே நீ எர்ரால் ப்ளேன் மாதிரி உதட்டைக் கோணிணால் இன்னு பண்றது? அதான் மூக்கு மேலே அறுப்பு விழுந்துடுச்சு! பரவாயில்லே; ஆறிப் போயிடும்.''

சபேசனுக்குச் சிரிப்புக் குமுறிக் குமுறித் தணிந்தது. அத்துடன் உள்ளூறக் கொஞ்சம் மன வருத்தமும் மூண்டது. நச்சி தன்னைப் பார்த்தும் பாராதவன் மாதிரி இருப்பது ஏன் என்றே அவனுக்குப் புரியவில்லை. வாய் திறந்து கூப்பிட்டும்கூட அதை அவன் காதில் போட்டுக் கொள்ளவில்லையே!

ஒருகால் தான் செய்யும் அந்த வேலையைச் சபேசன் பார்த்துவிட்டானே என்ற வெட்கத்தால் அவ்வாறு பராமுகமாயிருக்கிறானோ? அப்படி நினைக்க முடியாது. ஏனென்றால் அவன் எந்த வேலையையும் செய்ய எவ்வித வெட்கமோ, தயக்கமோ கொள்ளாதவன் என்பது சபேசனுக்கு நன்கு தெரியும்.

'வேலையில் கவனமாக இருக்கிறான் போலும். அதை முடித்துக்கொண்டு என்னைப் பார்க்க 'வருவான்' என்று தன் மனத்தைத் தேற்றிக்கொண்ட சபேசன், எதிர்ப்புறத்தில் இருந்த ஒரு வெற்றிலை பாக்குக் கடையண்டை போய் நின்றுகொண்டான். ஏதோ சிந்தனையில் இருந்த அவன் சிறிது நேரம் கழித்துத் தலை நிமிர்ந்து பார்த்த போது நச்சியை அங்கு காணோம். அவசரமாகச் சுற்றுமுற்றும் நோக்கினான். சவ்விங் பஜார் சாலையில் உல்லாசமாக நடந்து போய்க் கொண்டிருந்தான் நச்சி.

''அண்ணே!'' என்று ஒரு குரல் கொடுத்துவிட்டு அவனைப் பின்தொடர்ந்து பிடிக்க விரைந்து சென்றான் சபேசன். ஆனால் நச்சி திரும்பியும் பார்க்காமல், படாடோபமாக இருந்த ஒரு பெரிய 'ஹேர் கட்டிங் சலூனில்' போய் நுழைந்துவிட்டான். அங்கே கிராப்புக்கும், ஷேவிங்குக்குமாகச் சேர்த்துக் குறைந்த பட்சம் இரண்டு ரூபாயாவது சார்ஜ் செய்யப்படலாம். நச்சி இப்போது கிராப் வெட்டிக் கொள்ளத்தான் அந்த உயர்தர சலூனுக்குப் போயிருப்பான். என்ன விந்தையான மனிதன் அவன்!

வியப்பும், மன உளைச்சலுமாகத் தயங்கி நின்ற சபேசனின் நினைவில் பளிச்சென்று ஒரு விஷயம் மின்னலிட்டது: 'ஓ.... நேற்றுக் காலை வேதா என்னைப் பார்க்க வந்தபோது நான் அவளைச் சரியாக வரவேற்காமலும், முகம் கொடுத்துப் பேசாமலும் இருந்ததைக் கண்டு கோபமாகத் திரும்பிச் சென்றவள், அவ்விஷயத்தை நச்சியிடம் சொல்லிவிட்டாள் போலும்! அதனால்தான் அவன் இப்படி என்னை அலட்சியப்படுத்திப் போய்விட்டிருக்கிறான்!'

வேதாவின் வீட்டுக்குப் போகப் புறப்பட்டிருந்த சபேசன் அந்த எண்ணத்தை மாற்றிக்கொண்டு தன் அறைக்கே திரும்பிய சமயம், எதையோ கண்டு திடுக்குற்றவன் போல் நின்றான். அவனுடைய பார்வை அந்தச் சாலையின் பக்கவாட்டிலிருந்த பஸ்


ஜெகசிற்பியன்

கட்டும் சீனக் கிளினிக் ஒன்றினுள் பார்த்தது. அங்கே சுரேஷ் சௌந்தரியும், அகதி வாலிபனும், மலையாளிப் போர்வழியும் உட்கார்ந்திருந்தனர். அவர்களுடன் ஒரு சீனனும் அமர்ந்து ஏதோ பேசிக்கொண்டிருந்தான்.

இந்தக் காட்சியைக் கண்டதும் சபேசனின் மனத்தில் தோன்றிய முதல் எண்ணம்: 'இப்போது சந்தியா அவள் வீட்டில் தனியாகத் தானே இருப்பாள்?'

சட்டென்று திரும்பிய அவன், சந்தியாவின் வீட்டை நோக்கி விரைந்து சென்றான்.

மாடி வராந்தாவில் ஒரு நாற்காலியைப் போட்டுக் கொண்டு உட்கார்ந்து, கைப்பிடிச் சுவர் மீது இரு முழங்கைகளையும் ஊன்றி மோவாயைத் தாங்கியவாறு, தொலைதூரத்தில் தெரிந்த நீதிமன்றத்தின் வெங்காய வடிவிலான அழகிய கோபுரங்களையே தன்னை மறந்து பார்த்துக் கொண்டிருந்த சந்தியாவுக்குத் தன் பக்கத்தில் சபேசன் வந்து நிற்பதுகூடத் தெரியவில்லை.

ரோஜாவின் நிறமொத்த அவளது எழிலார்ந்த காதோரத்தை மெல்லத் தொடவேண்டும் என்ற ஒரு குழந்தைத்தனமான ஆசை தூண்டியது சபேசனுக்கு. அப்படித் தொட்டால் திடுமென்று பயந்து அவளின் பூப்போன்ற இதயம் அதிர்ந்து விடுமே என்று அஞ்சியவனாய்ச் சற்றுப் பின்னால் நகர்ந்து நின்று மெல்லக் கனைத்தான்.

அவன் எதிர்பார்த்தது போல் இந்தக் கனைப்பு ஒலி கேட்டு அவள் அதிர்ச்சியுற்றுப் பயந்துதான் போனாள். உடனே தன்னைச் சமாளித்துக் கொண்டு நாணமும் மகிழ்ச்சியும் கலவையிட்ட புன்முறுவலுடன் அவசரமாக எழுந்து, ''வாருங்கள், உட்காருங்கள்!'' என்று நாற்காலியைக் காட்டினாள். சபேசன் உட்காரவில்லை. அவளைப் போல் அந்தக் கைப்பிடிச் சுவர் மேல் சாய்ந்து நின்று கொண்டான்.

''மாலை நேரத்து இனிய காட்சிகளைத் தனிமையில் ஆனந்தமாக ரசித்துக் கொண்டிருந்ததற்கு நான் வந்தது தடையாகி விட்டது, இல்லையா?''

''ஆமாம்'' என்று குறும்புப் புன்னகையுடன் தலையசைத்தாள் சந்தியா. ''ஆனால் ஒரு சந்தேகம்.......''

''என்ன?''

''சற்று முன்தான் அதோ, அந்த 'லைட் ஹவுஸ்' கோபுரத்தின் உச்சியில் தவழ்ந்து செல்லும் வெண் மேகக் குவியலின் மேல் நீங்கள் அமர்ந்து கொண்டிருந்ததைப் பார்த்தேன்; அதற்குள் இங்கே எப்படி வந்து குதித்து விட்டீர்கள்?''

சுகானந்த வியப்பால் அப்படியே நின் விட்டுப் போனான் சபேசன். 'உன்னைத் தவிர எனக்கு வேறு எண்ணம் ஏது? காட்சி ஏது?' என்பதை அவள்தான் எத்தனை அழகாகச் சொல்லி விட்டாள்! அவளைப் பார்க்கப் பார்க்க அவனுக்குத் தன் கண்களில் தேன் சுரப்பது போல் இனித்தது. அந்த இனிப்பை நழுவவிட விரும்பாதவன் போல் அவளையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

சிறிது நேரம் தலை குனிந்திருந்த சந்தியா சட்டென்று நிமிர்ந்து, ''ஆமாம்! இப்போது நீங்கள் ஏன் இங்கு வந்தீர்கள்?'' என்று முகத்தைச் சுளித்துக் கொண்டு கேட்டாள்.

திடுக்குற்று விட்டான் சபேசன். இவ்வளவு நேரம் அவன் நெஞ்சில் ஊற்றெடுத்த இன்ப வெள்ளமெல்லாம் எங்கோ ஓடி மறைந்து ஒரே வறட்சிக் காடாகியது. அவளைப் பேந்தப் பேந்தப் பார்த்து விழித்த அவன், ''ஏன்? உன்னைப் பார்க்கத்தான் வந்தேன்......'' என்று குழறினான்.

''உண்மையாகவா?''

''எதற்கு இந்தச் சந்தேகம், சந்தியா?''

''நேற்று என் தந்தை உங்களை இங்கே இன்று வரச் சொன்னதற்காகத்தானே இப்போது வந்திருக்கிறீர்கள்?''

''இல்லை, நிச்சயமாக இல்லை. ஆனால் அவர் கூப்பிட்டதற்காகவும் வரக்கூடாதா?''

''அவர் வரச் சொன்னதற்காக வந்திருந்தால் இப்போதே இங்கிருந்து நீங்கள் போய் விடலாம்'' என்றாள்.

''ஏன்?....''

சபேசன் திகைத்தான்: 'என்ன இவள் இன்றைக்கு இப்படிப் பேசுகிறாள்?' — ''சரி; நான் போகிறேன்'' என்று பின்னால் நகர்ந்தவன், ''ஆனால் மீண்டும் ஒன்று சொல்கிறேன்; நான் உன்னைப் பார்க்கத்தான் வந்தேன். உன் தந்தை வரச் சொன்னதற்காக வரவில்லை'' என்றான் அடைத்த குரலில். ''நான் இன்று இங்கு வருவதாக உத்தேசமில்லை. வேறோர் இடத்துக்குப் போகவே கிளம்பினேன். அதோ, அந்தப் பல் கட்டும் 'கிளினிக்'கில் உன் தந்தையும் அவர்களது தோழர்களும் உட்கார்ந்து ஒரு சீனக்காரனுடன் பேசிக் கொண்டிருந்ததைப் பார்த்தேன். அவன் அந்தக் 'கிளினிக்'கின் சொந்தக்காரனாக இருக்கலாம். அவர்கள் அங்கு இருப்பதால் நீ இங்கே தனியாக இருப்பாய் என்று எண்ணி உன்னை மட்டும் காண வந்தேன்.''

சந்தியாவின் முகம் கலவரமடைந்து வெளுத்தது. ''என் தந்தை வரச் சொன்னது உங்களுக்கு ஏன் பிடிக்கவில்லை?'' என்று மெல்லிய குரலில் கேட்டவாறு அவனை அணுகினாள்.

''அவர் என்னிடம் ஏதோ லாபகரமான விஷயம் பற்றிப் பேசப் போவதாகச் சொன்னார். உங்களிடம் நான் எந்தவிதமான லாபத்தையும் கருதி நட்புப் பாராட்டவில்லை. அதுதான் காரணம்'' என்று நகைத்தான் சபேசன்.

சந்தியா சற்று நேரம் அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். பிறகு, ''நீங்கள் இப்போது செய்து வரும் வேலையில் கிடைக்கும் வருவாயைவிட இன்னும் அதிக வருவாய் தரும் வேலையொன்றை உங்களுக்குக் கொடுக்க அவர் விரும்பியிருக்கலாம். அதற்காகவே உங்களை இன்று வரச் சொல்லியுமிருக்கலாம்.....'' என்றாள் இழுத்தாற்போல்.

வியப்படைந்த சபேசன், ''அப்படியா?'' என்று சிரித்தான். ''அவர் எனக்கு என்ன வேலை தர முடியும்? அவரே இப்போது வேலை இல்லாமல் அல்லவா இருக்கிறார்?''

"ஆமாம். ஆனால் என் தந்தையும் அவரது நண்பர்களும் சேர்ந்து விரைவில் ஒரு பெரிய ஹோட்டல் ஆரம்பிக்கத் திட்டம் போட்டு வருகிறார்கள்."

"அதில் எனக்கு ஒரு சர்வர் வேலை கொடுக்கலாம் என்று நினைக்கிறாரோ உன் தந்தை?"

"ஏன்? நீங்கள் மானேஜர் வேலை பார்க்க மாட்டீர்களோ ?"

"அப்படி ஏதாவது சொன்னாரா உன்னிடம் ?"

"இல்லை; அப்படியும் அவர் நினைத்திருக்கலாம் என்கிறேன்."

சில விநாடிகள் மௌனமாயிருந்த சபேசன் வெறுப்பு நிறைந்த குரலில் முகத்தைச் சுளித்துக் கொண்டு சொன்னான்: "உன் தந்தை சொந்தமாக ஒரு டீக்கடை திறந்தாலும் அதில் நான் எந்த வேலையையும் ஏற்கத் தயாராக இருப்பேன்; ஆனால் அவரது நண்பர்கள் பெரிய பஞ்சாலையே ஆரம்பித்து அதன் நிர்வாகியாக என்னைப் போட்டுப் பத்தாயிரம் ரூபாய் சம்பளம் கொடுத்தாலும் அதை ஏற்க மாட்டேன்."

"ஏன் அப்படி?"

"இதற்கு என்ன பதில் சொல்வது? ரோஜாவை எனக்குப் பிடிக்கும். அதன் இலையில் கொஞ்சம் வாசனை இருப்பதால் அதையும் பிடிக்கும். ஆனால் அவற்றிடையே சூழ்ந்திருக்கும் முட்களை அறவே பிடிக்காது. அவ்வளவுதான். அந்த முட்கள் என்னை இது வரை குத்தியதில்லை என்பது உண்மைதான். ஆனாலும் அவற்றைக் காணவே எனக்குப் பயமாக இருக்கிறது."

ஆச்சரியத்துடன் அவனை ஏறிட்டுப் பார்த்த சந்தியாவின் கண்கள் பளபளத்தன. "இந்தப் பதிலைத்தான் இவ்வளவு நேரமாக உங்களிடம் எதிர்பார்த்தேன்" என்றாள்.

இதிலிருந்து சபேசன் ஒரு விஷயத்தை உடனே ஊகித்துக் கொண்டான். அவளது தந்தையின் நண்பர்களை அவளுக்கும் பிடிக்கவில்லை என்பதே அது. இந்தச் சந்தர்ப்பத்துக்காகக் காத்திருந்தவன் போல் மெல்லப் பேச்சை ஆரம்பித்தான். "அது சரி, சந்தியா! உன் தந்தையின் அத்தியந்த நண்பனாயிருக்கும் அந்த அகதி வாலிபன், கவுண்டன்பாளையம் முகாமிலிருந்து எப்போது வந்தான்? ஏன் வந்து விட்டான் ?"

சந்தியாவின் முகத்தில் மீண்டும் கலவரக் குறிகள் தென்பட்டன. அவனைப் பரபரப்புடன் பார்த்து விழித்த அவள் ஏதோ முடிவுக்கு வந்தவளாய், "அப்புறம் சொல்கிறேனே!...." என்று இழுத்தாள்.

"அந்த வாலிபனின் பெயர் என்ன ?" என்று விடாமல் கேட்டான் சபேசன்.

"அதையும் பிறகு சொல்கிறேன்."

"அவனுடைய நண்பர் என்று ஒரு மலையாளி வருகிறாரே, அவர் யார்?"

"அவரைப் பற்றியும் அப்புறம் சொல்கிறேனே ?"

இதற்கு மேல் என்ன கேட்பதென்று தோன்றாமல் போனான் சபேசன்.

"சரி; அவர்கள் வரும் நேரமாகி விட்டது. நீங்கள் போய் வாருங்கள்."

குழப்பமும் மிகுந்தவனாய் அவளைத் திகிலுடன் பார்த்த சபேசன், "அப்படியானால் உன் தந்தையை நான் சந்திக்க விரும்பாததை நீயும் சரி என்கிறாயா?" என்று கேட்டான்.

"அவரைச் சந்திக்க வேண்டாம் என்று சொல்வதற்குப் பதிலாகத்தான் முன்பே உங்களை இங்கிருந்தே போய்விடச் சொன்னேன்" என்றாள் சந்தியா.

நிஜமாகவே இப்போது சபேசனுக்கு அங்கு நிற்கப் பயமாகி விட்டது. "ஆமாம்; உன்னை நான் மறுபடியும் எப்போது வந்து பார்ப்பது?" என்று தயக்கத்துடன் கேட்டான்.

அவள் அவசரமாக வெளியே எட்டிப் பார்த்து விட்டு உள்ளே ஓடி, கொக்கியில் மாட்டப்பட்டிருந்த தன் தந்தையின் ஜிப்பா பாக்கெட்டிலிருந்து ஒரு சிறு டைரியை எடுத்துப் பரபரவெனப் புரட்டிப் பார்த்தாள். பிறகு வராந்தாவுக்கு விரைந்து வந்து, "உங்கள் இருப்பிடத்தைச் சொல்லுங்கள். நாளை இரவு எட்டு மணி வாக்கில் நானே வருகிறேன்" என்றாள்.

தன் அறையின் விலாசத்தைச் சில அடையாளக் குறிப்புக்களுடன் சொல்லிவிட்டு அங்கிருந்து கீழே இறங்கிச் சென்றான் சபேசன்.

இரவு மணி ஒன்று இருக்கும். தெரு நாய்களெல்லாம் ஒன்றாகச் சேர்ந்து ஏக இரைச்சல் போட்டுக் குரைத்தன.



அடுத்த இதழில்

ஆசாரிய கிருபளானி எழுதும்
சிறப்புக் கட்டுரை

தராசு - தி. சா. ராஜு எழுதும் சிறுகதை

வானொலி நிகழ்ச்சிகளும்
வாய்க்காத நேரங்களும் } பேட்டிக் கட்டுரை

வேதா விழித்துக் கொண்டுதான் படுத்திருந்தாள். கதவு தட்டும் சத்தம் கேட்டது. அவள் ஏனோ எழுந்து போய்க் கதவைத் திறக்கவில்லை.

தரையில் முந்தானையை விரித்துப் போட்டுப் படுத்துக் கிடந்த கன்னியம்மாள் தூக்கக் கலக்கத்துடன் எழுந்து தன் பக்கத்தில் படுத்திருந்த வேதாவை வெறித்துப் பார்த்து விட்டுத் தனக்குள் ஏதோ முனகிக் கொண்டே போய்க் கதவைத் திறந்தாள். நச்சிதான் உள்ளே வந்தான்.

''இன்னாம்மா, தங்கச்சி தூங்கிடுச்சா?''

''ஊக்கும் !''

அடுப்பங்கரைப் பக்கம் தன் பார்வையைச் செலுத்தினான் நச்சி. அடுப்படியில் பூனை தூங்கவில்லை. கொஞ்சம் நெருப்பு கனிந்து கொண்டிருப்பது தெரிந்தது. அடுத்து வேதாவைப் பார்த்தான். அவள் கட்டைச் சுவர் பக்கமாகத் திரும்பிச் சுருண்டு படுத்திருந்தாள்.

''அடங்க, இஸ்கி! இன்னடாது, இன்னைக்கு அதிசயம்?'' என்று முனகிய நச்சி, ''இந்தாம்மா, இதைச் செலவுக்கு வைச்சுக்க!'' என்று ஒரு பத்து ரூபாய் நோட்டை எடுத்துக் கொடுத்து விட்டுத் தன் சட்டையைக் கழற்ற ஆரம்பித்தான்.

கன்னியம்மாளின் தூக்க மயக்கமெல்லாம் எங்கோ ஓடி மறைந்து, முகம் மலர்ந்தது. ஆனாலும் அதை வெளியே காட்டிக் கொள்ளாமல், ''இன்னா, இந்தத் திம்மாக்குப் பொண்ணு இப்படி மாடாட்டம் தூங்குதே !'' என்று சலித்துக் கொண்டவளாய்ச் சுறுசுறுப்புடன் சென்று பானை சட்டிகளை உருட்டலானாள். அப்போதும் வேதா எழுந்திருக்கவில்லை.

நச்சி சாவதானமாகப் புறக்கடைப்பக்கம் போய் முகம் கைகால்களைக் கழுவிக் கொண்டு வந்து சுவரோரம் உட்கார்ந்தான். கன்னியம்மாள் உணவைத் தட்டில் எடுத்து வைத்தாள்.

''தங்கச்சி சாப்பிட்டுச்சாம்மா?''

''எல்லாம் துன்னு ! நீ துன்னுப்பிட்டு எய்ந்திருடா, எனக்குத் தூக்கம் வருது.''

நச்சி சாப்பிட்டு முடித்துக் கை கழுவப் புறக்கடைக்கு எழுந்து போனான். ''மாட்டுக்குக் கொஞ்சம் வைக்கா புடுங்கிப் போடணும்'' என்று முனகியவாறு அவன் பின்னால் சென்ற கன்னியம்மாள், ''ஏண்டா, பையா! இப்படிக் கொஞ்சம் வாடா !'' என்றாள் வைக்கோல் போருக்குப் பின்னால் போய் நின்று கொண்டு.

கையைத் துடைத்தபடி, ''இன்னாம்மா?'' என்று கேட்டுக் கொண்டே அவளருகில் சென்றான் நச்சி.

''நீ இன்னாதான் நினைச்சுக்கினுகிறேடா?'' என்று எடுத்த எடுப்பில் கோபமாகக் கேட்டாள் கன்னியம்மாள்.

நச்சிக்கு எரிச்சல் மூண்டது. ''இப்ப இன்னா சொல்றே ?'' என்றான் அடித் தொண்டையில்.

''சொல்றேன், சொரக்காய்க்கு உப்பில் லேன்னு!'' என்று சலித்துக் கொண்ட கன்னியம்மாள், இரகசியக் குரலில் மேலும் சொன்னாள் : ''ஏண்டா, துப்புக் கெட்ட பையா ! வயசுக்கு வந்த ஒரு பொண்ணை எத்தினி காலமா ஊட்லே பூட்டி வைச்சுக் காவல் போட்டுக்கினு இருக்கிறது?''

''ஏன்? வீட்டிலே வைச்சுக்காமல் காட்டுக்குத் துரத்திடச் சொல்றியா?''

''பின்னே, ஒரு காடோ மேடோ தேட வேணுமா ?''

''இன்னாது?''

''அந்தப் பொண்ணை இனிமேலும் இப்படிக் கட்டிப் போட்டு வைச்சிருக்க முடியாதுடா ! அது ரொம்ப சூடுப் போச்சு!''

''நீ இன்னாம்மா சொல்றே? வேதாவைப் பத்தியா சொல்றே?''

''இல்லே; எருமை மாட்டைப் பத்திச் சொல்றேன்'' என்று சீறினாள் கன்னியம்மாள்: ''அந்தப் பொண்ணுக்கும் வயசு பதினேழு ஆய்ப் போச்சு; அதை எங்கனாச்சும் ஓர் இடத்திலே புடிச்சுத் தள்ள வேணுமா?''

''ஓ, கண்ணாலத்தைப் பத்திச் சொல்றியா?'' என்று சிரித்த நச்சி, ''ஆமாம்; அதுக்கு இப்ப இன்னா அர்ஜண்டு?'' என்றான்.

''அர்ஜெண்டா? அது படுத்துக் கிடக்கிற கெடையைப் பார்த்தியே, அதிலேயே தெரிஞ்சுக்கலியா ?''

''வேதாவே உன்கிட்ட இதுபத்தி எதனாச்சும் சொல்லிச்சா?''

''அவள் சொல்லித்தான் அதைத் தெரிஞ்சுக்கணுமாங்காட்டியும்! நாலஞ்சு நாளா அந்தப் பொண்ணு எதுக்கெடுத்தாலும் மொக்கார் பண்ணுது. எதிர்த்துப் பேசுது. தனியே உட்கார்ந்து மோட்டு வளையையே மொறைச்சுப் பார்த்துக்கினு இருக்குது.... பத்தாக் குறைக்கு......''

''பத்தாக்குறைக்கு?''

''அந்தப் பர்மாக்காரப் புள்ளாண்டானோட பேரைத் தூக்கத்திலே பினாத்துது!''

''யாரு, சபேசனையா?''

''ஹுக்கும்.''

''அடங்கி, இஸ்கி!'' என்று பெரு வியப்புடன் முனகிய நச்சி யோசனையில் ஆழ்ந்தான். பிறகு மெல்லத் திரும்பி, ''அப்பமன்னு இதுக்கு இப்ப இன்னாம்மா பண்றது?'' என்று கவலைக் குரலில் கேட்டான்.

வைக்கோல் பிடுங்கிப் போட்டுக் கொண்டிருந்த கன்னியம்மாள், ''இன்னா பண்றதா? அந்தப் புள்ளாண்டானைப் போய் நேரிலே பார்த்து, 'இன்னடா தம்பி, என் தங்கச்சியைக் கட்டிக்க உனக்கு இஷ்டம்தானா'ன்னு பகிரங்கமா கேட்காம, விசயத்தைச் சும்மா ஒரு போக்கா அப்படி ஓட்டிக் காட்டணும். அவன் எதனாச்சும் 'புடி' கொடுத்தான்னா அப்புறம் சங்கதியை உடைச்சுக்காட்டி, 'இதுக்கு இன்னா சொல்றே? உனக்குச் சம்மதமா?'ன்னு விசாரிச்சு, சரிதான்னு ஒப்புத்துக்கிட்டான்னா, உடனே ஒரு நல்ல நாளும் வேளையுமாப் பார்த்து, திருப்பதியிலே காரியத்தை முடிச்சு வைச்சுடணும்'' என்று பல்வேறு இராக ஆலாபனைகளுடன் கொஞ்சம் குரலைக் கட்டுப்படுத்திக் கூறினாள். (தொடரும்)

அழகிய சுருண்ட
கூந்தலின் இரகசியம்

காஸ்டரோல்!

சுத்த காஸ்டர் ஆயில்



தென் இந்திய ஆபீஸ்: 5/149, பிராட்வே, சென்னை - 1

ரூ. 10,000/- ஜெயிக்க!

144 ரொக்கப் பரிசுகள்

கால்கேட் பேபி பவுடர் புகைப்படப் போட்டி!



1½ வயதிற்குக்கீழோ அல்லது 1½ முதல் 3 வயது வரையிலோ உள்ள குழந்தை உங்களுக்கு இருக்கிறதா? இந்த இரு பிரிவுகள் எதிலும் உள்ள குழந்தைகளின் புகைப்படங்களை அனுப்பிவைக்கலாம். **ஒவ்வொரு பிரிவிலும் 72 ரொக்கப் பரிசுகள் வழங்கப்படும்:**

ரூ. 1,000 முதல் பரிசு


ரூ. 500 இரண்டாவது பரிசு


மற்றும் ரூ. 50 வீதம் 70 ஆறுதல் பரிசுகள்!

கலந்துகொள்வது எப்படி:
மிகவும் சுலபம்! உங்களுக்குத் தேவையானதெல்லாம் இதுதான்:
ஒரு புகைப்படம் — பொருத்தமான வயதுப்பிரிவில் உள்ள உங்கள் குழந்தையின் புகைப்படம்.
அச்சிட்ட ரசீது — கால்கேட் பேபி பவுடரின் ஒரு வார்ஃ அல்லது ஜயன்ட் ஸைஸ் டப்பாவை வாங்கினதற்கு அத்தாட்சியாக ஒரு அச்சிட்ட ரசீது.
ஒரு பிரவேசப்பத்திரம் — நீங்கள் பவுடர் டப்பாவை வாங்கும் கடையிலிருந்து கிடைக்கும்.
பரிசு பெற எத்தனை அற்புதமான வாய்ப்புகள்!

இப்பொழுதே கலந்து கொள்ளுங்கள்!

கடைசி தேதி ஜூன் 30, 1966


பிரதி
திங்கட்கிழமை
மதராஸ்
சிங்கப்பூர்
பெர்த்
ஸிட்னி
நந்தி
பிரதி
வெள்ளிக்கிழமை:
மதராஸ்
சிங்கப்பூர்
எங்கள் விமானத்தில்
சிங்கப்பூர்
செல்லுங்கள்!
பிரதி திங்கட்கிழமையும்
வெள்ளிக்கிழமையும்



அம்மாவும் அப்பாவும் ரீ!

நேத்திக்குப் பொழுது போனதோல்யோ? பூராவும் போகலே. பொந்துக்குள்ளே நுழைஞ்ச எலி வால் மாதிரி, பொழுதிலே கொஞ்சம் மிச்சம் இருந்தது.

அப்போத்தான் அம்மாவும் அப்பாவும் சண்டை போட்டுண்டா. அப்பா பெரிய செலவாளி. சீட்டாட்டம், குதிரை ரேஸ்னு பணத்தைத் தொலைச்சிண்டிருந்தார். அவருக்கு நானூறோ, ஐந்நூறோ சம்பளம். சம்பளத்திலே அரைவாசி அம்மா கையிலே வர்றதே உன்னைப் பிடி என்னைப் பிடிதான். அம்மா மொது மொதுன்னு அப்பாவைப் பிடிச்சு உலுக்குவா. அப்பா மீன் மாதிரி. அம்மாவின் பிடியிலேயிருந்து நழுவி ஓடிப் போய்ச் சீட்டாட்டக் கிளப்பிலே சரணாகதி அடைஞ்சிடுவார் அப்பா.

மன்னித்து விடுவோம்

வாசவன்

அம்மா சண்டை பிடிக்கிறதைப் பார்த்தால் யாருக்குமே நியாயம் போலத்தான் தோணும். அண்டையிலே இருக்கிற எனக்குத்தான் அந்த நியாயத்திலே எவ்வளவு கலப்படம் இருக்குங்கறது புரியும். அம்மாவுக்கு எதிராத்துச் சங்கரி மாமியைப்போல வைரத்திலே இழையணும், பட்டாடையிலே பவனி வரணும்னு ஆசை. புலியை நினைச்சுப் பூனை சூடு போட்டுண்டா, பூனை புலியாகிவிட முடியுமா? சங்கரி மாமி ஆத்துக்காரர் சொந்தத்திலே மோட்டார் கம்பெனி வச்சிருக்கார். பணம் வெள்ளமாகப் புரள்றது. சங்கரி மாமி வைரத்திலே இழையறா. அம்மாவின் ஆத்துக்காரர் ஏதோ ஒரு பிரைவேட் கம்பெனியிலே நானே எண்ணிச் சம்பளம் வாங்குகிறவர்தானே? இது அம்மாவுக்கு ஏன் புரியலே?

சங்கரி மாமியைத் தன் வாழ்க்கையின் லட்சியமா எடுத்துண்டு, அது நிறைவேறாமப் போன ஆதங்கத்திலே தன் சொரூபத்தையே காளியா மாத்திண்டு சண்டை பிடிக்கிறதும், என்னைப் 'பீடையே, சனியனே!'ன்னு வறுத்துப் புடைக்கிறதுமா குடும்ப வாழ்க்கையையே குருக்ஷேத்திரமா ஆக்கிண்டா அம்மா.

அப்பா கெட்டதுக்கே அம்மாதான் காரணமோன்னு எனக்குத் தோன்றது. ஆத்திலே இருக்கிற மனுஷி எதை எதையோ நினைச்சிண்டு கலைவ

னைச் சதா தேன் மாதிரி கொட்டிண்டு இருந்தா. அவன் அந்தக் கொட்டு வாயிலே இருக்க முடியுமோ? தொல்லையாய் முடிஞ்சு அந்தக் குடும்பத்திலே இருந்து கொஞ்சம் கொஞ்சமாய் விலகிப் போய் எங்கோ ஓரிடத்திலே அமைதிக்கு அலையற ஜன்மமா ஆயிட மாட்டானோ அவன்?

அப்பாவும் அப்படித்தான். அவருக்கு அமைதி சாக்கடையிலே கிடைக்கிறது! புரியறதா? சீட்டாட்டம், ரேஸுங்கிற சாக்கடையிலே! வால்மீகிக்கு 'ராமா'ங்கற ஜபத்திலே அமைதி கிடைச்சது. அப்பாவுக்குச் சாக்கடையிலே அமைதி கிடைச்சுண்டிருக்கு!

மனுஷாள்ளே வால்மீகியைப் போல உள்ளவாளும் இருக்கா. அப்பாவைப் போல் துவளை ஜன்மமும் இருக்கா.

அப்பாவைச் சாக்கடைக்கு அனுப்பிவச்ச குற்றத்துக்கு அம்மாதான் முழுக்க முழுக்கப் பொறுப்பு. இது அவளுக்குப் புரியறதா? புரிஞ்சதோ இல்லியோ, அவ புத்திசாலி. அப்பாவைச் சண்டை பிடிக்கறதுக்கு அவ ரோட பலவீனத்தையே ஆயுதமா எடுத்துக்கறா. வேறே? சங்கரி மாமியைப் போல் ஐசுவர்யத்திலே வாழறதுக்குத் தன் ஆம்படையான் சம்பாத்தியம் போதலே, அதனாலே அவரைச் சண்டை பிடிக்கிறேன்னு அவள் வெளிப்படையாச் சொல்ல முடியாதோல்லியோ? அதனாலே அப்பாவோட சூதாட்டம் அவளுக்கு ஆயுதம்.

அப்பாவுக்குத் தன் பலவீனம் புரியும். புரியறதுக்காகத் தோப்புக்கரணம் போட மாட்டார். அவருக்கு முன்கோபம் அதிகம்! சண்டைன்னு வந்துட்டா வீடு நாறிப் போயிடும். வேடிக்கை பார்க்கிறவாளுக்கு ஒரே கொண்டாட்டம். எனக்குத்தான் திண்டாட்டம்.

அப்பாவுக்கு நான் சனியன்! அம்மாவுக்கு நான் பீடை! பெற்றவா இல்லியோ? பெருமைப்படுத்தறா!

நான் தேம்பித் தேம்பி அழறேன்.

என் கண்ணீரைத் துடைக்கறவா யார்?

அம்மாவுக்குச் சங்கரி மாமியைப் போல் வாழ முடியலேயேன்னு துக்கம். அப்பாவுக்கு இந்தக் குடும்பத்தை விட்டுட்டு எங்காவது நிம்மதியாய்ச் சீட்டாடணும் போதும்கற வேகம். என்னைப் பத்தி யாருக்கென்ன கவலை...?

'அடியே அம்பிகே! உனக்குக்கூடவா கவலை இல்லே?' ன்னு அலறிண்டு அம்பிகையின் படத்துக்கு முன்னாலே போய் விழுந்தா. அவ சிரிச்சிண்டிருக்கா. 'அடி லோக மாதா! உனக்கென்னடியம்மா இப்படி ஓர் அழியாத சிரிப்பு? உனக்குச் சிரிப்பும் ஒரு கேடா? உன் பிள்ளைகள்ளே மூத்தவன் ஆயுசுக்கும் கல்யாணம் இல்லாமே குளத்தங்கரைக்குப் போயிட்டான். இளையவன் பண்டாரமாகிப் பழனிக்குப் போயிட்டான். ரெண்டையும் பறி கொடுத்த கவலை இல்லாமே சதா சிரிச்சிண்டிருக்கியேடி அம்மா, உனக்குத் துளியாவது வெட்கம் இல்லியோ? போடி, போ! உனக்கு வெட்கமும் இல்லே; கவலையும் இல்லே.'

எனக்கு ஆறுதலுக்கு யாராவது இருக்காளோ?

ஏன் இல்லே? விஜி இருக்காளே!

சேப்பா, பவழ மல்லி பூத்த மாதிரி சதா சிரிச்சிண்டிருப்பாளே, அம்பிகையைப்போல, அவதான் விஜி. என்னைவிட வயசிலே சின்னவள்தான். ஆனால் அவளைச் சின்னவள்னு சொல்ல முடியுமோ? கடுகைவிடச் சின்ன ஆல விதைக்குள்ளே ஒரு பெரிய ஆல மரமே அடங்கியிருக்கிற மாதிரி, அந்தச் சின்ன விஜிக்குள்ளே பெரிய பெரிய அறிவெல்லாம் சதா மலர்ந்திண்டேயிருக்கும்.

நான் அழறபோதெல்லாம் என் கண்ணை அம்மா துடைக்கல்லே, அப்பா துடைக்கல்லே; அம்பிகையும் துடைக்கல்லே. இந்த விஜிதான் துடைக்கறா.

என் கண்ணீரைத் துடைச்ச பாவம் தானோ? விஜியே அழும்படியாயிட்டுதே!

அவ அப்பா இருக்கார் பாருங்கோ. இடேர்னு ஒரு நாள் கார் விபத்திலே மாட்டிண்டு அவர் கால் ஒடிஞ்சு போனார். ஆள் ஆஜானுபாகுவா இருப்பார். மதயானை மாதிரி அவர் நடந்து போறப்போ, மனுஷனுக்குத்தான் என்ன கம்பீரம்? 'திருஷ்டிதான் படப்போறது'ன்னு நினைப்பேன். யார் வைத்த திருஷ்டியோ கால் போயிடுத்து. கை நிறையச் சம்பாதிச்சிண்டிருந்தவர், கண் நிறையத் தழையத் தழைய வந்தவர், கோபுரமே சரிஞ்சு விழுந்த மாதிரி கட்டிலே கதியாய் விழுந்திட்டார்னா விஜி எப்படி அழுவா? அந்தக் கண்ராவியைப் பார்த்தப்போ எனக்கே அழுகை தாங்கலே. இது வரை நான் எவ்வளவோ அழுதிருக்கேன். ஆனா அவ்வளவும் எனக்காக அழுத அழுகை தான். எனக்கு ஒரு துக்கமும் நேராதிருக்கும் போது நான் ஏன் அழறேன்? என் விஜி அழறாளே, அதுக்காக அழறேன். பிரியம்னு வந்துட்டா பக்ஷணம் கிடைக்காத மாதிரிதான் அழத் தோணறது.

கபாலீச்வரர் கோயில்லே இருக்கிற கற்பகாம்பா மாதிரி அத்தனை அழகா இருப்பா விஜியோட அம்மா. சரவிளக்கின் நுனியிலே பட்டுக் கொழுந்து போல எரியறதே சுடர், அது மாதிரி அவள் முகம் அவ்வளவு பிரகாசமாயிருக்கும். கற்பகாம்பாளைக் கும்பிட்ட கையாலே அவளையும் கும்பிடத் தோணும். ஏதோ ஒரு கோயிலிலே இருந்த தெய்வம் குடும்பம் நடத்த ஆசைப்பட்டு விஜியோட ஆத்திலே வந்து வாழறதோ?

அப்படித்தான் நினைச்சேன் நான்.

விஜியின் அப்பா காலை உடைச்சிண்டதுக்கப்புறம் அவ எப்படி மண்டையை உடைச்சிண்டு அழுதா?

எந்தத் தெய்வமும் அழாதபோது விஜி ஆத்திலே இருக்கிற தெய்வம் மட்டும் ஏன் அழறது? அவ தெய்வம் இல்லே. எங்க அம்மாவைப் போல் எதையோ தொலைச்சுண்டு அழற சாதாரண பெண் ஜன்மம்தான்!

எனக்கு ஏமாந்துபோன கசப்பு.

விஜியின் அம்மா காமு மாமி இருக்காளே, இப்போ அவ சிரிக்கிறதையே மறந்துட்டா. தூசி படிஞ்ச படம்மாதிரி அவ முகமே மாறிப் போயிடுத்து. விஜிக்கு வேளைக்கு ஒரு டிரஸ் பண்ணி விடுவாளே, அதெல்லாம் இப்போ இல்லே. அவா குடும்பத்திலே விஷயம் தெரிஞ்ச பெரியவா விஜியைத்தான் திட்டித் தீர்க்கறா! அவ பிறந்த வேளையாம்! அவ

ஜாதகத்திலே நாக்கை நீளமா நீட்டின ராகுக் கோளாறும்!

விஜியின் அப்பா ஒரு பெரிய பிரவாகம் வடிஞ்சு ஓய்ந்த மாதிரி கட்டிலிலே முடங்கிண்டதுக்கப்புறம், காமு மாமி எங்கேயோ காத்தாலே கிளம்பிப் போறா; இருட்டிண்டு வர்ற நேரத்துக்குத் திரும்பி வர்றா. டீச்சர் வேலை பார்க்கிறாளாம்! குடும்பம்கிற குதிரை வேகணுமோல்லியோ?

எங்க தெருவிலே ஒரு நாய் இருக்கு. பொட்டை நாய். நாலாத்து எச்சில் இலைகளிலே வயித்தை வளர்த்து, நன்னு மொழு மொழுன்னு இருக்கும். அந்த நாய் ஒரு குப்பைத் தொட்டி ஓரமா நாலஞ்சு குட்டிகளைப் போட்டது. நன்னு இருந்த குட்டிகளையெல்லாம் யாரோ தூக்கிண்டு போயிட்டா. எலிப் புழுக்கை மாதிரி துக்கிணியாய் இருந்த ஒரே ஒரு குட்டியை மட்டும் யாருமே சீந்தலே. அம்மா நாய்க்கு அந்தக் குட்டி கண்மையா ஆயிடுத்து. தெருவிலே சதா பஸ் ஓடிண்டிருக்கும்; கார் ஓடிண்டு இருக்கும். இல்லேன்னு மனுஷாளாவது ஓடிண்டே இருப்பா. அந்தச் சந்தைக் கடைத் தெருவிலே அந்த நாய், தன் குட்டியை எப்படித்தான் காப்பாத்தித்தோ! நாய்க்குட்டியின் கால் நன்னு இருக்கப் பொறுக்கலே ஒரு பொறுக்கிப் பையனுக்கு. கல்லை விட்டு வீசி அதோட ஒரு கால் சப்பையைப் பெயர்த்துட்டான் பாவி! குட்டிக்கு நொண்டிக் காலா? அதோட உடம்பெல்லாம் வங்குச் சொறி. அம்மா நாய்க்கு அதை விட்டுட்டு அந்தண்டை இந்தண்டை நகர முடியலே; தன்னோட குழந்தைக்கு வேலியாய் இருந்திண்டிருந்தது. அதனாலே நாலாத்து எச்சில் இலையைப் பொறுக்க நேரமில்லாமப் பூட்டது. பிறகு மொழு மொழுன்னு இருக்கிறது எப்படி? ஒரேயடியா மெலிஞ்சு போய், வரி வரியா எலும்பு தெரியற மாதிரி ஆயிடுத்து.

அது 'சீ'ன்னு விரட்டி அடிக்கிற நாய் தான். நாலு தெருவிலே பொறுக்குகிற ஜன்மம்தான். மனுஷா மாதிரி வாய் கிழியப் பேசத் தெரியாத ஊமை ஜீவன்தான். ஆனால், தன் குட்டியண்டை அதுக்கு எத்தனை பாசம்...?

எங்க அம்மாவை விட்டுத் தள்ளுங்கோ. அவ என்னிக்குமே காளி. இன்னிக்குப் பிரத்தியட்சமாகத் தெரியற நிஜத்தை அலட்சியப்படுத்திண்டு, கண்ணுக்குத் தெரியாத பொய்க்காக 'அலே அலே'ன்னு அலையறவ.

காமு மாமி அப்படியா? அவ தெய்வம் மாதிரி. நேத்திக்கு வரை விஜியைத் தன் விழியிலே வைச்சுப் பொத்திண்டு இருந்தவ. இன்னிக்கு நாலெழுத்துக் கத்துக் கொடுக்கிற டீச்சர். அவளுக்கு ஏன்தான் பெத்த விஜியிடத்திலே திடீர்னு பாசம் இல்லாமப் போயிடுத்து? என்னைத் தூக்கிண்டிருந்த துரதிருஷ்டம் இப்போ விஜியையும்னா சேர்த்துத் தூக்கறது?

சங்கரி மாமி பங்களாவிலே பிரமாதமா ஒரு பூந்தோட்டம் இருக்கு. எனக்கு டல்லா இருந்தா அங்கே போய் நின்னுண்டு, புஷ்பச் செடிகளைப் பார்த்திண்டே இருப்பேன். ரோஜான்னா எனக்கு ரொம்பப் பிடிக்கும். நெருப்பை மூடி வைச்சிருக்கிற மாதிரி இருக்கும் அதன் அரும்பு. அது இதழ் திறந்துண்டா ஒவ்வொரு நெருப்புத் துண்டும் ஒவ்வோர் இதழாகித் தகதகன்னு எரியற மாதிரி இருக்கும். நானும் ஒரு நெருப்புத் துண்டா மாறிப் போய் அந்த அரும்புக்குள்ளே புகுந்து, தகதகன்னு எரியமாட்டோமான்னு ஆசை ஏற்படும்.

அங்கே ஒரு ரோஜாச் செடி. வாடி வதங்கிப் போய், எல்லாவற்றுக்கும் மத்தியிலே நெருப்பு அணைஞ்ச கோலமாய் அது ஜன்மம் எடுத்திருக்கிறது.

அந்த ரோஜாச் செடி மாதிரிதான் போயிட்டா விஜி. அவளுக்குள்ளே இருக்கிற தகதகப்பான நெருப்பை அணைச்சிட்டா காமு.

விஜிக்கு வயசுக்கு மீறின அறிவு. அந்த உழக்கிலே கிழக்கும் தெரியும்; மேற்கும் தெரியும். மத்தவாளுக்கு என்ன தெரியும்? 'குழந்தைதானே?'ன்னு அலட்சியப்படுத்தறவாளுக்கு அமுதத்தைப் பருகுகிற பாக்கியம் எப்படிக் கிடைக்கும்?

இன்னிக்குப் பொழுது போனப்போ, சங்கரி மாமியின் தோட்டத்திலே நாங்க நின்னுண்டிருக்கோம். பூவைப் பார்க்காமே, பொழுதைப் பார்க்காமே எங்களையே நாங்க பார்த்துண்டிருக்கோம். வாய் பேசல்லே. பேசினாத்தானா பேச்சு? எதுவும் பேசாமலே எத்தனையோ பேசிக்கிற மாதிரி ஒருத்தரை ஒருத்தர் இமைக்காமப் பார்த்துண்டிருக்கோம்? ரொம்ப நேரத்துக்கப்புறம்

விஜி பெருமூச்சு விட்டா. பிறகு 'ஓ'ன்னு அழ ஆரம்பிச்சிட்டா.

''ஏன்டி?..... ஏன்டி விஜி அழறே?''ன்னு பதறிண்டு கேட்டேன் நான்.

''என்னை யாருக்கும் பிடிக்கலேடா வாசு! அம்மா திட்டறா. அப்பா திட்டறா. எல்லோருமே திட்டறா.''

''என்னையும்தான்டி திட்டறா!''

''நீ கல்லுளிமங்கன். எல்லாத்தையும் ஜெரிச்சிண்டிருக்கே. என்னாலேமுடியலேடா!'' என்று விசிச்சிண்டிருந்த விஜி, சட்டுன்னு அழுகையை நிறுத்தினாள். ரோஜா இதழிலே தகதகக்கிற நெருப்பு, அவ கண்ணிலே பளபளத்தது. ''டேய், வாசு! அவாளை நான் பழி வாங்கப் போறேன்''னு சொன்னா.

''பழி வாங்கப் போறயா? எதுக்கு?''

''எங்காத்திலே இருக்கிறவாளெல்லாம் நாள் பூராவும் என்னை அழ விட்டுண்டு இருக்காளோன்னோ? அதுக்குப் பதிலா அவாளை ஆயுசுக்கும் அழவிடப் போறேன்.''

எனக்கு இப்போதும் ஒன்னும் புரியலே. ''அழ விடப் போறயா? எப்படி?''ன்னு கேட்டேன்.

''நான் செத்துப் போயிடப் போறேன்!''

எவ்வளவு பெரிய பழி தீர்ப்பு? ஒரு நிமிஷத்திலே வெள்ளத்திலே அடிச்சிண்டு போனவன் மாதிரி, நான் திக்குமுக்காடிப் போயிட்டேன்.

''போடா! முடிவுங்கறது நம் கையிலே தான் இருக்கு. அடுத்த தெருவண்டே ஒரு தென்னந் தோப்பு இருக்கே, அதிலே ஒரு கிணறு இருக்கு. கொஞ்ச நாளைக்கு முன்னாலே அதிலே ஒருத்தன் விழுந்து செத்தானே, அது உனக்கு நினைவு இருக்கா? அதிலே விழுந்து செத்துப் போயிடப் போறேன் நான். அப்புறம் எங்கம்மா அழுவா. எங்காத்திலே இருக்கிறவா அழுவா. எப்பவும் அழுதிண்டே யிருப்பா.......'' ஆவேசம் வந்தவளாப் பொங்கித் தீர்க்கறா விஜி.

''அழுவாங்கறது என்னடி நிச்சயம்?''

''நிச்சயமா அழுவாடா! எதுவுமே கையை விட்டு நழுவிப் போனத்தான்டா இந்த மனுஷாளே அழுவா!''

அவ சொன்னது நூத்திலே ஒருவார்த்தை. மனுஷாள் பறி கொடுத்தாத்தான் அழறா.

''நானும் உன்கூடச் சாக வர்றேன் விஜி!''

''நிஜமாவாடா!''

''நிஜமாத்தான். என் மேலே வெறுப்பைக் கொட்டற எங்கப்பாவையும், அம்மாவையும் நானும் அழ விடறதா முடிவு செய்துட்டேன். வாடி சாகப் போகலாம்!''

இருவரும் தோட்டத்தை விட்டுக் கிளம்பினோம். தென்னந்தோப்புக் கிணற்றை நோக்கி நடந்தோம். நன்னா இருட்ட ஆரம்பிச்சுடுத்து. வீதியிலே விளக்கேத்தலே. எங்களுக்கு எதுக்கு விளக்கு? விளக்கைப் பிடிச்சிண்டா யாரும் கிணத்திலே விழுவா?

தென்னந்தோப்பு ஓரமா ஒரு பிள்ளையார் கோயில். பிள்ளையாரின் தலைக்கு யாரோ வெள்ளி முடி செஞ்சு வச்சிருக்கா. மத்தபடி அந்திசந்தி பூஜை இல்லே. யாராவது சிதர்க்காய் விட்டால் உண்டு.

நானும் விஜியும் பிள்ளையார் கோயிலண்டை போனபோது பார்த்தோம். அங்கே ஆள் நடமாட்டம் இல்லே. கோயிலிலே யாரோ சாயங்காலமா விளக்குப் போட்டிருக்கா. அந்த விளக்கு வெளிச்சத்திலே ஒருவன் என்ன செய்துண்டிருந்தான் தெரியுமோ? பிள்ளையாரின் தலையிலே இருந்த வெள்ளி முடியைக் கழற்றித் துண்டிலே முடிஞ்சிண்டிருந்தான்! பிறகு பெரிய பக்தன் மாதிரி நாலு தோப்புக்கரணம் போட்டுட்டு, நடையைக் கட்டறான் அந்தத் திருட்டுப்பயல்!

நானும் விஜியும் முழியைப் புரட்டாமே பார்த்துண்டிருந்தோம். பிறகு எங்களையே நாங்க பார்த்துக் கொண்டோம்.

''திருட்டுப் பயல்! சாமி தலையிலேயே கையைவச்சுட்டுப் போறான்டி விஜி! சாமி ஏன் அவன் கண்ணைக் கெடுக்காமல் விட்டுட்டார்?''னு ஆத்திரத்தோடே கேட்டேன்.

விஜி சிரிச்சா. ''சாமி கண்ணைக் கெடுக்கிறதுன்னு ஆரம்பிச்சுட்டார்னா இந்த உலகத்திலே ஒருத்தருக்குக்கூடக் கண் மிஞ்சாது!''

எனக்கு விளங்கல்லே. ''ஏன் மிஞ்சாது?''

''ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு விதமா தப்புச் செய்யறா. தப்புச் செய்யறவா கண்ணையெல்லாம் கெடுக்கிறதுன்னா உனக்கும் எனக்கும்கூடக் கண் மிஞ்சாதுடா!''ன்னு சொல்லிட்டுப் பெருமூச்சு விட்டாள் விஜி.

எனக்கு இப்போதும் விளங்கல்லே. ''நாம என்னடி தப்புச் செய்தோம்?''னு கேட்டேன்.

''நம்ம ஆத்திலே உள்ளவாளை அழவிடறதுக்காகத்தானே இப்போ நாம சாகப் போயிண்டிருக்கோம்? அது தப்பு இல்லையா?''

''தப்புங்கறது இப்போத்தான் புரியறதா?''

''ஆமா. இப்போத்தான் புரியறது. அந்தத் திருடனைப் பார்த்தப்புறம்தான் புரியறது. பிள்ளையார் நினைச்சா அவனைச் சாம்பலாக்கிடுவார். அவனை அப்படிச் சாம்பலாக்காமே அவர் ஏன் கல்லுப் பிள்ளையாரா உட்கார்ந்திண்டிருக்கார்? அவனைப் பார்த்து அநுதாபப்படறார். தப்புச் செய்யறவா எல்லோரையும் மன்னிச்சிடறார். அவர் மன்னிச்சாத்தான்டா சாமி! இல்லேன்னா அவர் போலீஸ்காரர்; பழி வாங்கினால் அவர் ரௌடி!''

நான் அப்படியே அசந்து போய் நிற்கிறேன். பனித் துளி மாதிரி இருக்கிற விஜியா பேசறா? அற்பப் பனித் துளிக்கு வைரத்தின் ஜ்வலிப்பைத் தந்த அந்த மகா சக்திதான் பேசறதோ?

விஜிதான் மேலே பேசறா: ''பிள்ளையாரைப் போல் நாமும் நம்மாத்துக்காராளை மன்னிச்சிடுவோம். அவாளுடைய ஆசாபங்கங்களை நம் மேலே தூக்கிப் போட்டுத் திருப்திப்படறா. நமக்குச் சுமையா யிருந்தாலும் அவாளுக்குத் திருப்தி கிடைக்க நாம் காரணமா இருக்கோமோல்லியோ, அதுக்காக நாம் அவாளை மன்னிச்சிடுவோம். வாடா வாசு. நாம் ஆத்துக்குப் போகலாம்!''

பெரியவாளை மௌனமாயிருந்து மன்னிக்கிறது தெய்வம். குழந்தைகளாகிய நாங்கள், பெரியவாளை அழுதே மன்னிச்சிடறோம்.

மன்னிக்கிறதுக்கு ஆள் இருந்தால் இந்தப் பெரியவா தப்புச் செய்துண்டேதான் இருப்பாளோ....?

வட்ட மேஜை

★ பட்டுப் புழு
★ யாரிடம் முறையிடுவது?
★ காலச் சக்கரம்

"சேலைக்கு ஒரு சகோதரி"யில் பட்டுப் புழுக்களைப்பற்றிச் சகோதரி சுப்புலக்ஷ்மி கூறியதாக எழுதப்பட்டுள்ளதை ஒப்புக்கொள்ள முடியாது. பட்டுப் புழுக்கள் மண்ணின் அடியில் சென்று தங்களது கூடுகளைக் கட்டும் என்பது தவறு. பட்டுப் புழுக்கள் சாதாரணமாகக் கயிற்றிலோ, அல்லது மூங்கிலிலோ ஆன, சதுரம் சதுரமாகப் பின்னிய "சந்திரிகா" என்ற தட்டில்தான் தங்களது கூடுகளைக் கட்டும். ஆமணக்கு இலைகளைத் தின்னும். "டஸார்", "எரி" போன்ற வகையைச் சேர்ந்த புழுக்கள் மரங்களின் மீதுதான் கூடுகள் கட்டும்.

சாதாரணமாகப் பட்டுப் புழுக்கள் உள்ள தட்டுகளை அடிக்கடி மாற்றிக்கொண்டு இருக்க வேண்டும்; சுத்தமாக வைத்திருக்க வேண்டும். இல்லையேல் அவை வெகு விரைவில் இறந்து விடும். ஆனால் காஷ்மீர் போன்ற இடங்களில் சிறிய புழுக்களை ஒரு பெரிய மரத் தட்டில் விட்டு விட்டு அவை முழு வளர்ச்சி அடையும்வரையில் அவற்றின் மேல் முசுக்கட்டை இலைகளைப் போட்டுக் கொண்டே வருவார்கள். முழு வளர்ச்சி அடைந்த பட்டுப் புழுக்கள் கூடு கட்டும் நிலையில்கூட இலைகளின் மேல் பரப்பில்தான் இருக்கும். பூமியின் அடியில் செல்லச் செல்ல உஷ்ணம் கூடுதலாகி அவை இறக்கக் கூடும். பட்டுப் புழுக்களின் தலைப் பாகம் மண்ணைக் குடையும் ஆற்றல் உடையது அல்ல.

கூனூர்,
18–2–66 எஸ். சீனிவாசன்

கடந்த 22–1–66 தேதி நடைபெற்ற கூட்டுறவுச் சங்கத் தேர்தலில் நான் சங்கத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். எக்காரணத்தைக் கொண்டோ அன்றிலிருந்து இச்சங்கத்துக்கு உணவு தானியப் பங்கு (கோட்டா) அளிக்கப்படவில்லை. மேலும், 'வேப்பனபல்லி தரப்பு உணவுதானிய கட்டுப்பாடு பிரதேசம்' என்று ஐந்து மைல் விஸ்தீரணத்துக்கு எந்த வகையான உணவு தானியங்களும் கொண்டு வரக்கூடாது என்று அரசாங்கம் தடை விதித்திருக்கிறது. அரசாங்கமோ இக்கடைகளுக்கு உணவுதானியம் சுமார் ஒரு மாத காலமாக விநியோகம் செய்வதில்லை. ராகி மட்டும் விநியோகிக்க ஒரு நபருக்கு அதிகாரம் அளித்திருக்கிறார்கள். இங்குள்ள ஜனத்தொகைக்குத் தேவையான ராகியும் அரசாங்கம் போதுமான அளவுக்கு அளிப்பதில்லை. வெளியிலிருந்து பொதுஜனங்கள் கொண்டு வரவும் முடியாது. இதனால் அரிசி போன்ற உணவு தானியங்கள் கிடைக்காமல் மக்கள் மிகவும் அல்லல்படுகிறார்கள். இந்நிலை நீடித்தால் இந்தப் பிரதேச மக்களின் வாழ்க்கை எந்த நிலைக்குப் போகும் என்று சொல்ல முடியாது. இந்தப் பிரதேசத்தில் இந்த ஆண்டு பருவ மழை தவறி எந்த வகையான உணவு தானியமும் பயிராகவில்லை.

ஆண்டவனும் இந்தப் பிரதேச மக்களைக் கைவிட்டு விட்டார். அரசாங்கமும் இப் பிரதேசத்தை மறந்து விட்டது. நாங்கள் யாரிடம் முறையிடுவது? எங்கள் கஷ்டங்களை யாரிடம் சொல்வது? நாங்கள் உணவு இல்லாமல் செத்து மடிய வேண்டியதுதானா?

வி. கிட்டப்பா நாயுடு
சேலம் வேப்பனபல்லி கூட்டுறவு
21–2–66 நாணய சங்கம்

அரசியலை ஊடு சரடாக்கினாலும், அதில் பலவகை மனிதர்களின் உள்ளத்து உணர்வுகளையும் ஆசாபாசங்களையும் தொடுத்து, நாவலையே வண்ணக் கதம்பமாக்கிய ஆசிரியரின் கைவண்ணமும் கற்பனைத் திறமையும் பாராட்டுதற்குரியன.

குறைவுகளும் நிறைவுகளும் பின்னிப் பிணைந்த தங்கப்பன் இன்றைய முற்போக்கு இளைஞனின் நிலைக்கு ஓர் எடுத்துக்காட்டு.

இத்தகைய நல்ல, பயனுள்ள சமுதாய அரசியல் சீர்திருத்தக் கதையை எழுதிய ஆசிரியருக்கும் வெளியிட்ட 'கல்கி'க்கும் பாராட்டுதல்களும் வாழ்த்துதல்களும் என்றென்றும் உண்டு.

மதுரை
3–3–66 மா. பா. குருசாமி


சத்தியத்திலும், நேர்மையிலும் தான் வைத்திருந்த நம்பிக்கையைத் தங்கப்பன் வேதனை, ஏமாற்றங்கள் காரணமாக இடைக்காலத்தில் இழந்தது. வருத்தத்தை அளித்தாலும், இயற்கையோடு பொருந்தியிருப்பதாலும், இறுதியில் பழைய தங்கப்பனாகவே மாறி விடுவதாலும் அந்த வருத்தம் மறைந்து அந்த இடத்தில் புதிய மகிழ்ச்சியே ஏற்படுகிறது. தங்கப்பனுக்காகவே பல காலம் உழைத்து, அவனுள் இலட்சிய எண்ணங்களைப் புகுத்தி, அவனுக்காகவே இறுதியில் உயிரையும் தியாகம் செய்த உத்தமர் மாருதியை மற்றவர்களிடமிருந்து பிரித்துத் தனியே குறிப்பிட வேண்டும்; அவர் ஓர் உன்னத பாத்திரம். கதையின் இறுதி அருமையாக இருந்தது.

பெங்களூர்
3–2–66 பி. அ. ராமமூர்த்தி, த. கணேசன்

பெயருக்குத் தக்கவாறு 'காலச் சக்கரம்' முற்றுப்பெற நீண்ட நாட்களாகும் என்று எண்ணிய நேயர்களை ஏமாற்றி விட்டார் ஆசிரியர். ஆனாலும் அவர் வாழ்க்கையில் நிகழும் பல நிகழ்ச்சிகளை அப்படியே எடுத்துக் காட்டியுள்ளார். கதையில் மிருணாளினியின் பாத்திரம் திறம்படச் சித்திரிக்கப்பட்டு உள்ளது. ஒரு சிறு குறை என்னவெனில், முடிவு தன்னிறைவு பெறவில்லை என்று கொள்ளலாம்.

சென்னை
3–3–66 எல். சங்கரராமன்

Edited printed & published by T. Sadasivam on behalf of Messrs. Bharathan Publications Private Ltd., at the Kalki Press, Kilpauk, Madras-10



REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

